பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 19

ஞாயிற்றுக்கிழமை
15 டிசெம்பர் 2024

கார்த்திகை 30 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

மஹிந்தவின் பாதுகாப்புக்கு வருடாந்தம் ரூ.32.6 கோடி

» 02

# ஜனாதிபதி இன்று இந்தியா பயணம்!



கொழும்பு, டிசெம்பர் 15

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டு இன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், பிரதிஅமைச்சர் ஆகியோர் உள்ளிட்ட தூதுக்குழுவொன்றும் இந்தியாவுக்குச் செல்லவுள்ளது.

☞ 15

## புதிய சபாநாயகர் யார்? செவ்வாயன்று அறிவிப்பு!

கொழும்பு, டிசெ. 15

இலங்கை நாடாளுமன்றத்துக்கு, நாளைமறுதினம் புதிய சபாநாயகர் நியமிக்கப்படவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கல்வித் தகைமை தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகளைத் தொடர்ந்து, சபாநாயகர் அசோக ரன்வல பதவியில் இருந்து விலகியுள்ள நிலையிலேயே, அவருக்குப்

☞ 15

## தரமற்ற அரிசி இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 15

நாட்டுக்குள் மனித பாவனைக்குப் பொருத்தமற்றதும், தரமற்றதுமான அரிசி இறக்கு

☞ 14

## எலிக்காய்ச்சலை எதிர்கொள்ள மருத்துவ மாணவர்கள் களத்தில்

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம் வடமராட்சியில் எலிக்காய்ச்சல் தொற்று பரவிவரும் நிலையில், அதைக் கட்டுப்படுத்துவதற்காக மருத்துவ மாணவர்கள் தன்னார்வலர்களாகக் களமிறங்கியுள்ளனர்.

வடமராட்சியில் குறிப்பிட்ட சில நாள்களில் 50க்கும் மேற்பட்டவர்கள் எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தனர். சிலர் உயிரிழந்திருந்தனர். இதனால்,

☞ 15

## தமிழரசின் தலைமையிலிருந்து மாவையை உடன் நீக்குங்கள்

### மத்தியகுழுக் கூட்டத்தில் நேற்று அமளி வாக்கெடுப்பு நடத்தித் தீர்மானிக்க முடிவு

வவுனியா, டிசெ. 15

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக மாவை சேனாதிராஜா தொடர முடியாது என்று வலியுறுத்தி நேற்றைய கூட்டத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. இதையடுத்து, மாவை சேனாதிராஜாவின் தலைமைப் பதவிக்காக வாக்கெடுப்பு நடத்தித் தீர்மானிப்பது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று மாலை தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டம் ஆரம்பிக்கும் தருணத்தில் மாவை சேனாதிராஜா சபையில் இருக்கவில்லை.

☞ 15

## மன்னாருக்கு புதிய ஆயர்!



☞ 15

## பிரிந்து சென்றவர்களை இணைப்பதா? நீக்குவதா?

### குழப்பத்தில் தமிழரசுக்கட்சி

வவுனியா, டிசெ. 15

தமிழரசுக் கட்சியில் இருந்து பிரிந்துசென்று தேர்தலில் போட்டியிட்டவர்களை மீண்டும் அழைப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் கட்சிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டுள்ளன.

தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக்கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இதன்பின்னர்

☞ 15

## தமிழ்க்கட்சிகள் இணைவதா? மத்தியகுழுவே முடிவெடுக்கும்

### சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 15

தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து செயற்பட வேண்டும் என்றும், இணைந்து செயற்பட வருமாறும் அழைப்பு விடுத்தவர்கள் நாங்கள். எனவே, மத்தியகுழு மற்றும் அரசியல் குழுவின் முடிவின் பின்னரே அது தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்று யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

☞ 15

### திஸ்ஸ விகாரைப் போராட்டம்

## பொலிஸாரின் அத்துமீறல்களால் தையிட்டியில் நேற்றுப் பதற்றம்!

யாழ்ப்பாணம், டிசெ. 15

யாழ்ப்பாணம் - தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக கடந்த இரண்டு தினங்களாக இடம்பெற்ற போராட்டம் நேற்றுப் பதற்றத்தில் முடிந்துள்ளது.

☞ 15



கிராமங்களில் வடக்கின் வசந்தம்!

» 09

முச்சந்தி முராரி



'ஒற்றுமை ஒற்றுமை என்டு சொல்லிக்கொண்டு இன்னும் பிரியத்தான் போகினம் போல'

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மஹிந்தவின் பாதுகாப்புக்கு 326 மில்லியன் செலவீனம்

**கொழும்பு,டிசெ.15**
**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புப் பணிகளுக்காக நியமிக்கப்பட்ட பொலிஸ் காவலர்களுக்கு வருடாந்தம் 326 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னரே, அவருக்கான பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கையை 60ஆக மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.
இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவின் பாதுகாப்புக்காகக் கடமையாற்றியிருந்த 116 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தங்களது கடமைகளிலிருந்து நேற்று வெளியேறியுள்ளனர். (ச-இ)



## விகாரையை அகற்றுக தையிட்டியில் போராட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.15
யாழ்ப்பாணம், தையிட்டிப் பகுதியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை அகற்றக் கோரி நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முதல் நேற்று சனிக்கிழமை மாலை வரை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.
கடந்த 18 மாத காலமாக தொடரும் இந்தப் போராட்டம் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நேற்று தொடர்ச்சியாக இடம்பெற்றது. போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-இ)

## சபாநாயகர் பதவிவிலகல் ஏற்றுக்கொண்டார் ஜனாதிபதி

கொழும்பு, டிசெ.15
சபாநாயகர் அசோக ரன்வலவின் பதவி விலகல் கடிதத்தை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளார்.
ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, இது தொடர்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

## பில்கேட்ஸ் அறக்கட்டளை இலங்கைக்கு உதவிகள்

கொழும்பு,டிசெ.15
பில்கேட்ஸ் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை இலங்கையில் தனது உதவித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.
ஜனாதிபதி செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது குறித்து பேசப்பட்டுள்ளது.
முதற்கட்டமாக நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகள், ஊட்டச்சத்து செயற்றிட்டங்கள், பாடசாலை மாணவர்களுக்கான உணவுத் திட்டங்கள் விவசாய நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் டிஜிற்றல் மயமாக்கல் முயற்சிகள் மற்றும் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு தேவையான நிதியை வழங்க கேட்ஸ் அறக்கட்டளை சம்மதித்துள்ளது.
புதிய அரசாங்கத்தின் முன்னுரிமைகளை உணர்ந்து ஆதரவை வழங்க தயாராக இருப்பதாக கேட்ஸ் அறக்கட்டளை உறுதியளித்துள்ளது. (ச-இ)

## சபாநாயகர் விலகல் பாராட்டத்தக்கதாம்

நாமல் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.15
சபாநாயகர் அசோக ரன்வல நாடாளுமன்றத்தில் முன்வைத்ததாகக் கூறப்படும் போலியான கல்வித் தகைமை தொடர்பில் எழுந்த சர்ச்சையையடுத்து சபாநாயகர் அசோக சப்புமல் ரன்வல தனது பதவியை இராஜினாமா செய்தமை பாராட்டத்தக்கது என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.
மேலும் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் சமூகமயப்படுத்தப்பட்ட கல்வித் தகுதியை நிரூபிக்கத் தவறினால் உடனடியாக பதவி விலகவேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)



## இந்த ஆண்டில் 1.9 மில்லியன் சுற்றுலாவிகள்

கொழும்பு,டிசெ.15
இந்த ஆண்டு சுமார் 1.9 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.
டிசெம்பர் மாதத்தின் இதுவரையான காலப்பகுதியில் 90,000 இற்கும் அதிகமானோர் வருகை தந்துள்ளதாக அதன் தலைவர் புத்திக ஹேவாவசம் குறிப்பிட்டுள்ளார். இந்த ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2.2 மில்லியன் என்ற இலக்கை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், அந்த இலக்கை எட்டிய பின்னர், 2018 ஆம் ஆண்டுக்கு பிறகு இரண்டு மில்லியன் இலக்கை எட்டுவது இதுவே முதல் முறையாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

## வெளிநாட்டுப் பணிக்காக 300,162 இலங்கையர்

கொழும்பு,டிசெ.15
இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நவம்பர் 13 ஆம் திகதி வரை 3 இலட்சத்து 162 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.
இவர்களில் 177,804 ஆண்களும் 122,358 பெண்களும் உள்ளடங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த 2022 ஆம் ஆண்டில் 310,948 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக வெளிநாடு சென்றுள்ளதுடன், இவர்களில் அதிகளவானோர் ஐக்கிய அரபு இராச்சியத்துக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## புலம்பெயர் பெற்றோரின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் விண்ணப்பித்தல் டிசெ.31 நிறைவு

கொழும்பு, டிசெ. 15
2024ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வெளிநாடுகளில் தொழில் புரியும் பெற்றோரின் பிள்ளைகளுக்கான புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பிக்கும் காலம் டிசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.
இந்தப் புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பில் பாடசாலை மட்டத்தில் புலம்பெயர் இலங்கையர்களின் பிள்ளைகளை அறிவுறுத்த பாடசாலை அதிபர்கள் இதுதொடர்பில் கவனம் செலுத்துமாறும் பணியகம் கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கு விண்ணப்பிப்பவர்கள் இணையவழி ஊடாக விண்ணப்பிக்கமுடியும். புலமைப்பரிசிலுக்குத் தகுதி பெற்றுள்ள பிள்ளைகள் www.slbfe.lk என்ற இணையத்தளத்துக்கு சென்று விண்ணப்பிக்கலாம். மேலதிக தகவல்களை 0112365471 என்ற தொலைபேசி வழியாக அல்லது www.slbfe.lk என்ற பணியகத்தின் இணையத்தளத்துக்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நகர அபிவிருத்திச்சபை சட்டத்தால்

# வடக்கு படவரைஞர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறி

யாழ்ப்பாணம், டிசெ.15

**நகர அபிவிருத்திச்சபையின் தீர்மானத்தின் பிரகாரம் வடக்கு மாகாணத்திலுள்ள 200 படவரைஞர்களின் வாழ்வாதாரம் பாதிப்பைச் சந்தித்துள்ளது. எனவே நகர அபிவிருத்திச்சபை தனது தீர்மானத்தை கரிசனையுடன் மாற்றியமைக்கவேண்டும் என்று யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போது கட்ட நிர்மாணம், கடந்தகால நிதி செலவினங்கள், மாகாணசபை நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் ஆராயப்பட்டன. அதன்போது வடக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பிரணவனாதன் குறிப்பிடுகையில்,

வடக்கில் 200 பட வரைஞர்களே காணப்படுகின்றார்கள். அவர்கள் மூலமே கட்டடங்கள் புனர் நிர்மாணங்கள் தொடர்பிலான படங்கள் வரையப்படுகின்றன.

ஏற்கனவே நகர அபிவிருத்திச்சபையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் படவரைஞர்கள் தொழிற்தகைமை சான்றிதழ் - 4 (NVQ5) கொண்டிருக்கவேண்டுமெனக் கூறப்பட்டுள்ளது. இந்தநிலையில் நகர அபிவிருத்திச்சபை மீளவும் சட்டங்களை மாற்றி எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் படவரைஞர்கள் (NVQ5) தகைமையைக் கொண்டிருக்கவேண்டும் என அறிவித்துள்ளது.

அதனையடுத்து 200 படவரைஞர்களும் தற்சமயம் குறித்த கற்கை நெறியை தொடர்ந்து வருகின்றனர். எனினும் குறித்த கற்கைநெறியை நிறைவு செய்ய சுமார் 2 வருடங்கள் தேவைப்படுகின்றன. அத்துடன் இவ்வாறு சட்டம் வடக்கில் நடைமுறைப்படுத்தப்பட்டால் திணைக்கள ரீதியாகப் பணிகள் முன்னெடுப்பது சவாலாக அமையும். இதனால் வடக்கு படவரைஞர்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகும். இதனைக் கருத்திற்கொண்டு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

அதற்கு கருத்துத் தெரிவித்த ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சம்பந்தப்பட்ட சபையுடன் பேசித் தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார். (ச-125)

## முள்ளியவளையில் நேற்று வெள்ளைவான் தாக்குதல்!

முல்லைத்தீவு, டிசெ. 15

முல்லைத்தீவு - முள்ளியவளை தண்ணீரூற்றுப் பகுதியில் வெள்ளைவானில் வந்த சிலர், தம்மைப் பொலிஸார் என்று அடையாளப்படுத்தி குடும்பத்தலைவர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் முள்ளியவளைப் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

காயமடைந்த நபர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-19)

### கிளிநொச்சி வெள்ளப் பேரிடர்

## கால்நடைகள் இறப்பால் ரூ.19 மில்லியன் இழப்பு

கிளிநொச்சி, டிசெ. 15

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் காரணமாக, கிளிநொச்சியில் 19 மில்லியன் ரூபா பெறுமதியான கால்நடைகள் உயிரிழந்துள்ளன என்று வடமாகாண கால்நடைகள் சார் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் சீரற்ற காலநிலை காரணமாக 151 மாடுகளும், 2 எருமை மாடுகளும், 98 ஆடுகளும், 956 கோழிகளும் உயிரிழந்துள்ளன. பதிவுசெய்யப்பட்ட கால்நடைகளின் அடிப்படையில் 19 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் நோய்வாய்ப்பட்ட கால்நடைகள் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன - என்றார். (ம-125)

## நிவாரணப் பொருள்கள் தென்மராட்சியில் விநியோகம்

சாவகச்சேரி, டிசெ. 15

தென்மராட்சிப் பிரதேசத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிவாரண உதவிப் பொருள்கள் நாளை திங்கட்கிழமை தொடக்கம் அந்தந்தப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த மக்களுக்கான நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளதாக பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்தக் குடும்பங்களுக்கு தலா 4 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25-9)

## யாழ்.மாவட்ட பஸ் தரிப்பு முழுமையான சீரமைப்பில்லை

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ். மாவட்டத்தின் வெளி மாவட்ட பேருந்து நிலையம் இதுவரை முழுமையாக சீரமைக்கப்படவில்லை என யாழ். வர்த்தக சங்கத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்துள்ளார். யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இதனைச் சுட்டிக்காட்டினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் வெளி மாவட்டங்களுக்கு பயணிக்கும் பயணிகளுக்கென விசேட பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தனியார் பேருந்து சேவைகள் மாத்திரமே அவ்விடத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. இலங்கைப் போக்குவரத்துச்சபையின் சேவைகளும் அந்தத் தரிப்பிடத்திலிருந்து இடம்பெறவேண்டும். பிற மாவட்டங்களில் வெளிமாவட்ட சேவைகள் அவ்வாறே இடம்பெறுகின்றன. இதுகுறித்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எட்டப்படவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-125)

## குழியை மூடுக!

யாழ்ப்பாணம், டிசெ.15

அண்மையில் பெய்த மழையால் கோப்பாய் சந்தியில் குழியொன்று ஏற்பட்டுள்ளதால் குறித்த வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

பிரதான சந்தியில் ஏற்பட்ட இந்தக் குழியை உடனடியாக மூடி செப்பனிட உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-45-17)



## சுகாதாரத்துறையை மேம்படுத்த ஆசியவங்கியை நாடுவோம்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, டிசெ.15

நாட்டின் சுகாதாரத் துறையை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக எதிர்வரும் காலங்களிலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பங்களிப்பைப்பெற உள்ளதாக சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டின் சுகாதாரத்துறையை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக எதிர்வரும் காலங்களிலும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பங்களிப்பைப்பெற எதிர்பார்த்துள்ளோம். ஆரம்ப சுகாதார சேவையை பலப்படுத்துவதன் மூலம் நாட்டுக்குள் வேகமாக பரவக் கூடிய தொற்று நோய் மற்றும் தொற்றா நோய்களை கட்டுப்படுத்தி உரிய இலக்கை அடையலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## கழிவு முகாமையால் விவசாயிகள் அவதி

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விவசாய உற்பத்திகளுக்கு நடைமுறையிலுள்ள கழிவு முகாமையால் விவசாயிகள் பெரும் நெருக்கடியைச் சந்திக்கின்றனர் என யாழ். மாவட்ட கமக்கார அமைப்பின் தலைவர் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சீரற்ற காலநிலை மற்றும் பல்வேறு சவால்களுக்கு மத்தியில் விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த இன்னல்களை எதிர்நோக்கி மேற்கொள்ளப்பட்ட விவசாய உற்பத்திகளை சந்தையில் விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லுகின்றபோது 10 கிலோகிராம் உற்பத்திக்கு 1 கிலோகிராம் கழிவு அறவிடப்படுகின்றது. இது விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் செயற்பாடாகும்.

எனவே சந்தைகளை குத்தகைக்கு எடுக்கின்ற குத்தகையாளர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும். அத்துடன் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் ஊடாக வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களது பிள்ளைகளுடன் குடும்பமாக கனடாவுக்கு இலகுவாக செல்ல முடியும்.

எங்கள் நாட்டு பிள்ளைகள் கனடாவில் ஆரம்பக் கல்வியில் சேருவதற்கு வழிவகை செய்யும் முன்னணி நிறுவனமாகவும் மற்றும் ஒரே ஒரு கனேடியப் பாடசாலை பிரதிநிதியாகவும் நாங்கள் இருக்கிறோம் என்று கூறுவதில் மிகவும் பெருமையடைகிறோம். 3 வயது முதல் 17 வயது வரையிலான பிள்ளைகள் (பெண்கள் மற்றும் ஆண்கள் ) விண்ணப்பித்துக் கொள்ளலாம் . மேலும் பெற்றோர்கள் இருவரும் குழந்தைகளுடன் பயணம் செய்ய சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்படுகிறார்கள். சிறந்த மற்றும் சுவாரஸ்யமான பகுதி என்னவென்றால், பெற்றோர்கள் இந்த முழு செயல்முறைக்கும் விண்ணப்பிப்பதற்காக ஒரு சதம் கூட செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை, மேலும் அவர்களின் கல்வி அல்லது பிற தகுதிகள் முக்கியமானதாக கருதப்படுவதில்லை. அவர்கள் பிள்ளைகளுடன் பாதுகாவலராக செல்லலாம்.

நீங்கள் இந்த நிகழ்ச்சி திட்டத்திற்கு எங்களுடன் நேரடியாக இணைந்து கொள்ள வேண்டும். முதலாவது படிமுறையாக பிள்ளையின் விண்ணப்பத்தை பாடசாலைக்கு சமர்ப்பிக்க வேண்டும். ஸ்கேன் செய்வதற்காக உங்கள் குடும்ப அங்கத்தவர் அனைவரதும் (பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள்) பாஸ்போர்ட் தேவைப்படும். இந்த படிமுறை முடிந்த பின்னர் நாங்கள் பிள்ளைகள் மற்றும் பெற்றோர்களின் சார்பாக விண்ணப்பத்தை பாடசாலைக்கு சமர்ப்பிக்கிறோம்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டதும், அது ஏற்றுக்கொள்ளப்பட்டால், பாடசாலையினால் பிள்ளையை அழைத்துச் செல்வதற்கான அனுமதி கடிதம் அனுப்பப்படும். CAD 950 + 100 விண்ணப்ப கட்டணமாகச் செலுத்துமாறு அவர்கள் பெற்றோருக்கு அறிவுறுத்துவார்கள். பணம் செலுத்தப்பட்டவுடன், பாடசாலையினால் பெற்றோர் இருவருக்கும் அழைப்பு கடிதம் அனுப்பப்படும் அதாவது விசா விண்ணப்பத்தைத் தொடர்வதற்கான பிள்ளைகளின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கடிதங்கள்.

## ஒரு கனேடிய பாதுகாவலரை எவ்வாறு நியமிப்பது

பாதுகாவலரை நியமிப்பது இச் செயல்முறையின் மிகவும் முக்கியமான ஒரு பகுதியாகும். ஒரு பாதுகாவலர் என்பவர் வயதான பொறுப்பான அதிகாரி ஆவார், அதாவது கனடாவில் உங்கள் பிள்ளைகள் படிக்கும் போது அவர்களை கவனித்துக்கொள்வார்கள். கனேடிய பாதுகாவலர் ஆவணங்கள் இல்லாமல், விசாவிற்கு விண்ணப்பிக்க முடியாது.
பாதுகாவலரை நியமிப்பதற்கு, பாதுகாவலர் உரிமை அறிவிப்புப் படிவத்தையும், பிள்ளையின் பாடசாலைக்கான அனுமதிக் கடிதத்தையும் எங்களுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இதனை செயல் முறைப்படுத்துவற்கான அனைத்து விடயங்களிற்கும் நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுவோம் மற்றும் எல்லாவற்றையும் சரியாகக் கையாளுவதையும் உறுதி செய்வோம்.

படிவத்தின் இரண்டு பக்கங்களும் ஒரே மாதிரியானவை, ஆனால்

1. முதல் பக்கத்தில் கனேடிய பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண் டும் மற்றும் கனடாவில் வழக்கறிஞர் அல்லது சான்று அலுவலர் மூலமாக அறிவுறுத்தப்பட்டிருக்க வேண்டும்.
2. இரண்டாவது பக்கத்தில், பிள்ளையின் பெற்றோர் அல்லது சட்டப்பூர்வ பாதுகாவலர்களால் கையொப்பமிடப்பட வேண்டும் மற்றும் இது அவர்களின் சொந்த நாட்டில் அறிவுறுத்தப்பட வேண்டும். கனேடிய பாதுகாவலர் நியமனம் மற்றும் ஆவணங்களிற்கான அறிவுறுத்தப்பட்ட கட்டணங்களை பெற்றோர்கள் தாங்கி கொள்ள வேண்டும். செயல்முறையின் அனைத்து நிதி அம்சங்களும் வெளிப்படையான மற்றும் நிர்வகிக்கக்கூடியதாக இருக்கும் என்பதை நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறோம். பிள்ளையின் கல்விக்கான அனுமதி விண்ணப்பங்கள் மற்றும் பெற்றோர் விசா விண்ணப்பங்கள் அனுபவம் வாய்ந்த கனேடிய ஆலோசகர்கள்/வழக்கறிஞர்களால் கையாளப்பட்டு செயலாக்கப்படுகின்றன என்பதையும் நாங்கள் உங்களுக்கு உறுதியளிக்க விரும்புகிறோம். அவர்கள் தங்களின் வேலைக்கான விலைப்பட்டியலை அனுப்புவார்கள்.

எங்களது இந்த செயல்முறைத்திட்டத்தின் இன்னுமொரு முக்கியமான விடயம் என்னவென்றால் "Show Money" அவசியமில்லை. கனடாவில் உங்கள் பிள்ளையின் கல்விக்கு ஆதரவளிக்க உங்களிடம் போதுமான நிதி உள்ளது என்பதைக் காட்டுவதற்கு கனேடிய அதிகாரிகளால் ஒரு தகவல் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதாவது ஊபுனு 20850.00 (ரூ.5.0 மில்லியன்) இப்பணத்தை உங்கள் வங்கி கணக்கில் வைப்புச் செய்வதற்கு பதிலாக வெளிநாட்டு வங்கி ஒன்றில் வைப்புச் செய்யலாம் (HSBC bank). இப்படிமுறையை செயல்முறைப்படுத்துவதற்கு நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுவோம் மற்றும் இது சரியாக செய்யப்படுகிறது என்பதையும் உறுதி செய்வோம்.

விசா அங்கீகரிக்கப்பட்டதும், வெளிநாட்டு வங்கி உங்கள் சார்பாக ஓர் ஆண்டுக்கான கல்விக் கட்டணத்தை பாடசாலைக்கு செலுத்தும். கனடாவில் உள்ள scotia bank இற்கு நீங்கள் வைப்புச் செய்த பணம் மாற்றப்படும். பெற்றோர்கள் இதன் மூலமாக பிள்ளைக்கான பாடசாலைக்கட்டணத்தைச் செலுத்தலாம். பெற்றோர்கள் கனடாவிற்கு சென்றவுடன் ஒரு வங்கி கணக்கை வைத்திருப்பதற்கு இது உதவியாக இருக்கும். வேலை அனுமதி, PR மற்றும் உங்கள் பிள்ளையின் மேலதிக பயன்பாட்டிற்காக நீங்கள் பணத்தை வைப்புச் செய்து கொள்ளலாம்.

மேலும் 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 89 வாடிக்கையாளர்களுக்கு சரியான பாதையை எங்களால் காட்ட முடிந்தது என்பதை குறிப்பிடுவது பொருத்தமானது மற்றும் பெற்றோர்கள் 10 வருடத்திற்கான Multiple Entry Visitor Visa வை பெற்றுள்ளார்கள்.

மேலும், வேலை தேடும் பெற்றோருக்கு உதவுவதற்கும் PR ஐ பெற்று கொள்வதற்கும் ஆலோசகர்கள் மற்றும் வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்துள்ளோம்.

**தொடர்புகளுக்கு:-**
**Consolidated Academic Lanka (Private) Limited**
**22-B, First Floor, Station Lane, Nugegoda-10250 Sri Lanka**
**Email: info@academiclanka.com**

**சுகந்தி :- 077 7135665,**
**தர்சனா:- 076 1686824,**
**பிரியா :- 076 8611266**





# கிணறுகளுக்கு 'குளோரின்'

யாழ்ப்பாணம், டிசெ.15

யாழ். மாவட்டத்தில் மர்மக்காய்ச்சல் பரவி வரும் நிலையில் தடுப்பு முன்னேற்பாடாக மாநகரப் பிரதேசத்திலுள்ள குடியிருப்பாளர்களின் கிணறுகளுக்கு குளோரின் போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வண்ணார்பண்ணை, நாவாந்துறை பிரதேசங்களிலுள்ள குடியிருப்பாளர்களின் கிணறுகளுக்கு சுகாதாரப் பிரிவினரால் குளோரின் போடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. (ச-45-17)

வவுனியாவில்

# போயாக்களில் சந்தை மூடல்

வவுனியா, டிசெ. 15

வவுனியாவில் மொத்த வியாபார மரக்கறிச் சந்தையை ஒவ்வொரு மாதமும் போயா தினங்களில் மூடுவதற்கு உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. அதன்படி ஒவ்வொரு மாதமும் வருகின்ற போயா தினங்களில் விற்பனை நிலையங்கள் முழுமையாக மூடப்படவுள்ளன. இந்த விடயத்தை விவசாயிகள், வியாபாரிகள், கடை உரிமையாளர்கள் என அனைவரும் கவனத்தில் கொள்ளுமாறு சங்கம் கோரியுள்ளது. (ஏ-22110)


# வத்தளையில்

பாதுகாப்பான மற்றும் அமைதியான சூழலில்

**நீண்டகால / குறுகியகால**
**சொகுசு வீடு வாடகைக்கு**

விமான நிலையத்திற்கு 20km.
பிரதான வீதிக்கு 100m



03 Bedrooms/
05 Bedrooms
02 Bathrooms
01 Livingroom
01 Kitchen
Dish TV connection
WI-FI dongle
Coffee/Tea/Water

BOOK NOW

+94 74 0456090 | 094 11 2930511


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SUN JOURNEY'S

## திருகோணமலை - யாழ்ப்பாணம்

### TRINCOMALEE - JAFFNA

திருகோணமலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு. குளிரூட்டப்பட்ட சொகுசு ஆசனங்களை கொண்ட விசேட பஸ் சேவை.அதிகாலை 4.30 மணிக்கு திருகோணமலையில் இருந்து புறப்பட்டு வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் செல்லும்.மீண்டும் மாலை 5.15 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து திருகோணமலையை நோக்கி புறப்படும்.

TRINCOMALEE SUN JOURNEYS



**BOOKING NOW** 0710535924

GLOBAL BUS BOOKING CENTER, MAIN STREET,TRINCOMALEE. 0760769229 / 0774947413
(PREVIOUS JAYARUK BUS SEAT BOOKING PLACE)

VARANY BOOKING CENTER, HOSPITAL ROAD JAFFNA 0214900955 / 0777917691

---

# voyzant
TRUSTED FOR TRAVEL

மார்கழி திருவெம்பாவை

## சிதம்பர நடராஜர் தரிசனம்

- இரு வழி விமான பயணச்சீட்டு
- இந்தியா விசா
- இருவர் அல்லது மூவர் கொண்ட தங்குமிடம்
- போக்குவரத்து
- சுற்றுலா வழிகாட்டி
- சிதம்பரம் நடராஜர்
- திருவண்ணாமலை
- திருவெண்ணெய் நல்லூர்
- திருப்பத்தூர்
- ஸ்ரீரங்கம்
- சமயபுரம்
- திருப்பரங்குன்றம்
- பழமுதிர்சோலை
- திருச்செந்தூர்
- பழனி
- சுவாமிமலை
- அழகர்கோவில்
- உத்தரகோசம்
- இராமேஸ்வரம்
- தனுஷ்கோடி
- தஞ்சாவூர்
- கும்பகோணம்
- பட்டீஸ்வரம்
- மீனாட்சி அம்மன்
- திருநாகேஸ்வரம்
- திருநல்லாறு
- திருக்கடவூர்
- வைத்தீஸ்வரநாதர்
- சீர்காழி
- பூலாங்கசுடி
- ஆவுடையார்
- கும்பகோணம்
- உச்சிப்பிள்ளையார்

*நிபந்தனைகளிற்கு உட்பட்டது*

இவைகள் உள்ளடங்கலாக **137,000/=**

புறப்படும் திகதி : **06.01.2025** தொடக்கம் **7**நாட்கள்

மலேசியா பத்து மலை முருகன் கோவில்

## தைப்பூச பெருவிழா

- இரு வழி விமான பயணச்சீட்டு
- மலேசியா விசா
- சுற்றுலா வழிகாட்டி
- இருவர் அல்லது மூவர் கொண்ட காலை உணவுடன் நட்சத்திர ஹோட்டல்
- விமான நிலையத்தில் இருந்து தங்குமிடம் இருவழி போக்குவரத்து
- பத்து மலை முருகன் கோவில்
- கேபிள் கார் சவாரிகளுடன் ஜெண்டிங் டூர்
- சின் ஸ்வீ சீன கோவில்
- இராமாயண குகை
- கோலாலம்பூர் நகர சுற்றுப்பயணம்
- சன்வே லகூன் பூங்கா

இவைகள் உள்ளடங்கலாக **215,000/=**

புறப்படும் திகதி : **08.02.2025** தொடக்கம் **5** நாட்கள்

எமது சேவைகள்
- விமான டிக்கெட்டுகள்
- விசா சேவைகள்
- பயண காப்பீடுகள்
- வெளிநாட்டு சுற்றுலா சேவைகள்
- குழு சுற்றுலாப்பயணங்கள்
- யாத்திரை பயணங்கள்

voyzant
யாழ்ப்பாணம் 021 222 6866 077 026 9999
074 2697 324 074 2715 932 077 2849 535
இல. 617 ,619 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்

வெள்ளவத்தை 011 7762 677
077 3468 546 077 4798 475
இல. 09 புனித லோரன்ஸ் வீதி,வெள்ளவத்தை கொழும்பு 06

---


சிவப்பிரகாச பழைய மாணவர்களும், சங்கைச் சமூகமும் இணைந்து நடாத்தும் மாபெரும்

# சேவை நலன் பாராட்டு விழா-2024

யா. சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் 01.01.1993 இல் இருந்து 15.01.2024 வரை ஆசிரியரி ஆகவும், 23.11.2015 இல் இருந்து 28.11.2024 வரை அதிபர் ஆகவும் அளப்பரிய சேவையாற்றி இச் சமூகத்திற்கு பல நறபிரஜைகளை உருவாக்கிய

## உயர் திரு.இராமசாமி சிறீதரன் அவர்கள்

ஓய்வு நிலை அதிபர் யா/சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்



காலம் : 15.12.2024 (ஞாயிற்றுக்கிழமை 9.30 மணி
இடம் : சங்கானை கலாச்சார மண்டபம்

**தலைமை**

செ.ஸ்ரீசந்தணராசா
(உப தலைவர் சங்கானை பட்டின அபிவிருத்தி சபை

**விழா நாயகனை கௌரவிக்கும் முகமாக கலந்து சிறப்பிக்கவிருக்கும் விருந்தினர்கள்**

திருமதி.கவிதா உதயகுமார்
(பிரதேச செயலர், வலி மேற்கு பிரதேச செயலகம், சங்கானை)

V.S. அசோகரத்தினம்
(கிராம உத்தியோகத்தர், சங்கானை மத்தி, சங்கானை மேற்கு J/181, J/179)

திரு.ச.கைலாசநாதன்
(முன்னாள் அதிபர்)
யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

**உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

வாழ்த்துவோர்
சிவப்பிரகாச பழைய மாணவர்கள், யா/சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்
சங்கைச் சமூகம், சங்கானை

(CS 56927) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

பிழைகளும் தோல்விகளும் இல்லாமல் கற்றல் ஒருபோதும் நிகழ்வதில்லை

– லெனின் –

## என்ன செய்யப்போகிறது இந்தியா?

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மூன்று நாள்கள் பயணம் மேற்கொண்டு இன்று இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். ஜனாதிபதியாவதற்கு முன்பு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக ஐந்து நாள்கள் பயணமாக இந்தியாவுக்குச் சென்ற அவர், இன்று ஜனாதிபதியாக - இலங்கையின் முதன்மைக் குடிமகனாக - இந்தியாவை எதிர்கொள்கின்றார். எல்லாவற்றையும் விட, ஜனாதிபதியாக அநுர குமார திஸாநாயக்கவின் முதலாவது வெளிநாட்டுப் பயணமாகவும் இன்றைய இந்தியப் பயணமே அமைந்துள்ளது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான தொடர்பென்பது வரலாற்று ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் தொன்றுதொட்டது. இலங்கையில் இடம்பெற்ற அரசியல் குழப்பங்களின்போதும், பொருளாதாரச் சீர்குலைவுகளின்போதும் இந்த நாட்டை குறிப்பாக கொழும்பை ஏந்திப் பிடித்தது இந்தியாதான். அத்துடன், 'அயல்நாட்டுக்கு முன்னுரிமை' என்ற தன் கொள்கையால், இலங்கையை பிராந்தியத்தில் முதன்மைப்படுத்தி வைத்திருக்கின்றது பா.ஜ.க. அரசாங்கம். எனவே, இந்த நீண்ட நெடிய பின்புலத்துக்கான பதிலுபகாரமாகத்தான் ஜனாதிபதி அநுர தனது முதற் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

அதேநேரம், இந்தப் பயணத்தின்போது பேசப்பட வேண்டிய விடயங்களும், தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளும் ஏராளம் உள்ளன. இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இந்தியாவால் முன்மொழியப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் மீது அநுர அரசாங்கம் கடும் விமர்சனங்களை முன்வைத்திருக்கின்றது. 13ஆவது திருத்தமும், அதன்பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளும் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதில் தேசிய மக்கள் சக்தியினர் தீர்க்கம்காட்டி வருகின்றனர். 13 ஆவது திருத்தத்தை அழித்துவிட்டு, பதிலாக சமவுரிமையை வழங்கக்கூடிய புதிய அரசமைப்பை உருவாக்குவதாக தேசிய மக்கள் சக்தியினர் திரும்பத் திரும்பத் தெரிவித்து வருவதால், இந்தப் பயணத்தில் இலங்கைத் தமிழர்களின் அரசியல் வேணவா பிரதான பேசுபொருளாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

13ஆவது திருத்தத்தை தமது தீர்வுக்கான ஆரம்பப் புள்ளியாகக் கொள்வதற்கே தமிழர்கள் தயாரில்லை என்ற போதிலும், 'பறப்பதைப் பிடிப்பதற்காக இருப்பதையும் இழந்த கதையாக ஆகிவிடக்கூடாது' என்பதால், இப்போதைக்கு '13' ஆவது திருத்தத்தையாவது கெட்டியாகப் பிடித்துக்கொள்வோம் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். எனவே, ஜனாதிபதி அநுர மீதான பிடியை இந்தியா இறுக்கவேண்டும். இரண்டல்ல, மூன்றல்ல முப்பதுக்கும் மேற்பட்ட வருடங்களாக ஈழத்தமிழர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமான எதையும் இந்தியா செய்ததேயில்லை. இவ்வாறிருக்கையில், 13ஆவது திருத்தமும், மாகாணசபைகளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் துடைத்தெறியப்படுமாக இருந்தால், 'பிராந்திய வல்லரசு' என்ற பெயருக்கு இந்தியா தகுதியற்றதாக ஆகும்.

எனவே, ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தை, தமிழர்களுக்கான குரல் என்ற நிலையில் நின்று இந்தியா எதிர்கொள்ளவேண்டும். ஏனெனில், சீனத்தின் செங்கொடி, ஒட்டுமொத்த இலங்கையையும் வியாபித்துப் பறக்க ஆரம்பித்திருக்கும் இக்காலங்களில் ஒட்டுமொத்த இந்தியாவின் ஒற்றைப் பிடிமானம் ஈழத்தமிழர்கள் மட்டும்தான்.



# 20 வரையான சட்டங்கள் அரசால் மீள் பரிசீலனை

## நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.15

**பயங்கரவாதத் தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை விரைவாக மறுபரிசீலனை செய்வதுடன் நாடாளுமன்றத்தில் சட்டவரைவுகளாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள 20 வரையான சட்டங்கள் தொடர்பில் மறுபரிசீலனைக்குட்படுத்தப்படும் என்று நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷண நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முறையின் மீது நம்பிக்கையை கட்டியெழுப்புவது என்பது அரசாங்கம் என்ற அடிப்படையில் எங்களுக்கு சவாலை ஏற்படுத்தியுள்ளது. சட்டங்கள் மறுசீரமைப்புச் செய்யப்படவேண்டும். அதேபோன்று அவற்றை முறையாகப் பயன்படுத்தவேண்டும். இருந்தபோதும் மக்கள் மத்தியில் எண்ண அடிப்படையிலான மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும். பயங்கரவாதத் தடைச் சட்டம், நிகழ்நிலை காப்புச் சட்டம் என்பவற்றை விரைவாக மறுபரிசீலனை செய்வோம்.

நாங்கள் எந்தத் தீர்மானம் எடுத்தாலும் சகலருடனும் கலந்துரையாடியதன் பின்னரே தீர்மானம் எடுப்போம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# 2000 தண்டவாளங்கள் விரைவில் இறக்குமதி!

கொழும்பு, டிசெ. 15

ரயில் சேவையை திறம்பட நடத்துவதற்கென 2 ஆயிரம் தண்டவாளங்களை இறக்குமதி செய்யவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

தற்போது உள்ள தண்டவாளங்கள் வேகத்தைக் கட்டுப்படுத்துவதாகவும், 2023ஆம் ஆண்டு அறிக்கையின் படி 70% ரயில் சேவைகள் தாமதமாக நடைபெற்றதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் புதிய தண்டவாளங்களின் மூலம் ரயில் சேவையை இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியுமெனவும் தெரிவித்துள்ளார். (ச-22,6)

# அரிசி விலை கண்காணிப்பு

கொழும்பு,டிசெ.15

நாடளாவிய ரீதியில் அரிசியின் விலை தொடர்பான சோதனை நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாடளாவிய ரீதியில் இதுவரை சுமார் 75 சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் பணிப்பாளர் அசேல பண்டார தெரிவித்தார். (ச-இ)

# மேயர் வேட்பாளராக ஹிருணிகா களம்

கொழும்பு,டிசெ.15

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் கொழும்பு மாநகரசபைக்கு மேயர் வேட்பாளராக ஹிருணிகாவை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு தேசியப் பட்டியல் வாய்ப்பு வழங்கப்படாமை தொடர்பில் கடும் அதிருப்தி வெளியிடப்பட்டுள்ளமையையடுத்து இந்த முடிவு எட்டப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (ச-இ)



# ஜனவரியில் சீருடைகள்

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத்துணிகள் புதிய தவணை ஆரம்பமாக முன்னர் எதிர்வரும் ஜனவரி 27 ஆம் திகதி விநியோகிக்கப்படும் என கல்வியமைச்சு அறிவித்துள்ளது. சீன அரசாங்கத்தால் அன்பளிப்புச்செய்யப்பட்ட சீருடைத்துணிகள் சகல கல்வி வலயங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும், 46 இலட்சம் மாணவர்களுக்கு 11.817 மில்லியன் மீற்றர் துணி விநியோகிக்கப்படவுள்ளதாகவும் கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச-22,6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.கூட்டுறவுச் சங்கத்தால் வெள்ள நிவாரணங்கள்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆறுகிளை நிலையங்களினூடாக வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொருள்கள் விநியோகிக்கும் பணிகள் நேற்று சனிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜிந்திரன் தெரிவித்துள்ளார்.

அதன்படி யாழ்.பிரதேச செயலாளர் பிரிவில் பாதிக்கப்பட்ட 670 குடும்பங்களுக்கு இந்த வெள்ள நிவாரணம் வழங்கப்படுகின்றது.

இந்த உலருணவுப்பொருள்களை பாதிக்கப்பட்டோர் கொட்டடி 8ஆம் கிளை, நாவாந்துறையில் 1ஆம், 2ஆம் கிளை நிலையங்கள், ஈச்சமோட்டை 25ஆம் கிளை, புங்கன்குளம் 17ஆம் கிளை, சுண்டுக்குழி 27ஆம் கிளை ஆகிய சங்கங்களின் கிளைகளில் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரி-45-17)

**கொள்வனவு**
நெல், தானியங்கள், மில் உபகரணங்கள் கொள்வனவுக்கு
தொடர்பு: 077 772 2215

**விற்பனைக்கு**
சுப்பர் ஏஸ் அலுமினிய பொடி பட்டா, லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 772 2215

## காணி விற்பனைக்கு உண்டு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு அண்மையாக கோப்பாய் மகாவித்தியாலயத்திற்கு பின்புறமாக 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- நல்ல குடியிருப்புச் சூழல்
- நன்னீர் கிணறு
- இருபாலை கோண்டாவில் வீதி 100M

உரிமையாளர் தொடர்புகளுக்கு :
**077 993 4113, 077 349 9465**



## ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்


இந்தியாவில் ஆன்மீகத்துறையில்
10 வருடங்களாக புகழ்பெற்ற

### அம்மன் அருள் வாக்கு

- கல்வியில் முன்னேற்றம் இல்லையா ?
- குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- கணவன் - மனைவி பிணக்கா ?
- பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?
- வெளிநாடு செல்லத் தடையா?
- அடிக்கடி நோய் ஏற்படுகின்றதா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
இல. 20/26, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(முன் அனுமதி பெற்றுக்கொள்ளவும்.)
தொடர்புகளுக்கு :- **077 281 1234**
(CS/2041) JJ-1

## மரண அறிவித்தல்



### சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராசா

**(நெல்லியடி மொடோர்ன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)**

நெல்லியடியை பிறப்பிடமாகவும், உச்சிலம்மன் கோவில் கரணவாய் கிழக்கினை வதிவிடமாகவும் கொண்டிருந்த சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராசா நேற்று (14.12.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியாப்பிள்ளை - மரியமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான அமிர்தநாயகம் - அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், மாக்றேட் மெலனியின் பாசமிகு கணவரும், அலோயிஸ் பவன்ராஜ் இன் பாசமிகு தந்தையும், ஷெர்லி பிரதீபாவின் பாசமிகு மாமனாரும், அமிக்க தனிஷாவின் பாசமிகு பேரனும், அக்னேஸ் மங்களம் காலஞ்சென்றவர்களான பிலோமினா, அருட்சகோதரி ஜேசப்பின் மற்றும் மேரி எம்மா அவர்களின் பாசமிகு சகோதரனும், ஜோய், பேட்டி, டிலானி, ஜோயல், டனி, பால்ராஜ், டானியேல், சோபினி, ஜேம்ஸ், எசாந்தியா, ரூபின் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நாளை (16.12.2024) திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு திருப்பலிக்காக கரவை பரலோகமாதா ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக கரவை சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 630 7760
(CS 2050) A-1

## மரண அறிவித்தல்



### கருணாநிதி அசோக்

கோப்பாய் மத்தி கோப்பாயை பிறப்பிடமாகவும், சுவிற்சலாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட கருணாநிதி அசோக் அவர்கள் 11.12.2024 புதன்கிழமை அன்று சுவிற்சலாந்தில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான கருணாநிதி (ரிக்கட் பரிசோதகர், புகையிரத நிலையம் - கொழும்பு) - மற்றும் மகிழ்மலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் - இலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சங்கீதாவின் அன்புக் கணவரும், டயனிதாவின் அன்புத் தந்தையும், வசீகரனின் அன்புத் தம்பியும், தர்மிலா (ஜேர்மன்), சர்மிலா, பிரமிலா (பிரான்ஸ்), தனுஜா (இத்தாலி), திருக்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும், சுதாகர் (CTB), மலர்வண்ணன் (பிரான்ஸ்), உதயா (இத்தாலி), சியாமினி (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரனும், ஹரிஸ், ஹரிராம், ஹரிசரன், நவீன்சன், லவணி, நிதிஷ், ஜெசிக்கா, யூலிக்கா ஆகியோரின் சிறிய தந்தையும், அஸ்வினின் அன்பு மாமனும், காலஞ்சென்ற தங்கம்மா (கனடா), சிவகாமிப்பிள்ளை (கனடா) ஆகியோரின் அன்பு பெறாமகனும், காலஞ்சென்ற இரத்தினம், சுப்பிரமணியம், ஐயாத்துரை மற்றும் தெய்வநிதி (குஞ்சு) வாமதேவன் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை Arbeitsort Friedentalstrasse 60, 6004, Luzern இல் முற்பகல் 11.00 முதல் இரவு 8.00 மணிவரை பார்வைக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியை நாளை (16.12.2024) திங்கட்கிழமை காலை 8.00 மணிமுதல் 12.00 மணிவரை (சுவிஸ் நேரம்) நடைபெற்று, பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
00410799139989 - சங்கீதா அசோக் (சுவிஸ்)
004917684031623 - வசீகரன் (ஜேர்மன்)
+94774063318 - சர்மிலா (கோப்பாய்)
+94742079760 - மகிழ்மலர் (கோப்பாய்)
Asian Shop Santhiran - 00410417100366

உ
சிவமயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு



நிகழும் குரோதி வருடம் கார்த்திகை மாதம் 21 ஆம் நாள் (06.12.2024) வெள்ளிக்கிழமை திருவோண நக்ஷத்திர பூர்வபக்க்ஷ பஞ்சமி திதியில் சிவபதம் அடைந்த

### பாரத்வாஜ கோத்திரம்
### பிரம்மஸ்ரீ விஸ்வநாராயண சர்மா
### (வி. சோமசுந்தர ஐயர்)

**அவர்களின் ஆத்மா சாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்:**

| | | | | |
|---|---|---|---|---|
| 15.12.2024 | (கார்த்திகை 30) | ஞாயிற்றுக்கிழமை | தசாகம் | 09.00 மணி |
| 16.12.2024 | (மார்கழி 01) | திங்கட்கிழமை | ஏகோதிஷ்டம் | 09.00 மணி |
| 17.12.2024. | (மார்கழி 02) | செவ்வாய்க்கிழமை | சபிண்டீகரணம் | 09.00 மணி |
| 18.12.2024. | (மார்கழி 03) | புதன்கிழமை | கிருஹயக்ஞம் | 09.00 மணி |

மேற்படி கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் சமாராதனை நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கேணியடி, துர்க்காபுரம்,
தெல்லிப்பளை

குடும்பத்தினர்
தொ.பே: 0773226957
CS (56929) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமங்களை நோக்கி வடக்கின் வசந்தம் வீசும்

## கடற்றொழில் அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு , டிசெ.15

**உண்மையான வடக்கின் வசந்தம் 2025ஆம் ஆண்டு முதலே வீசும். கிராமங்களை நோக்கியே திட்டங்கள் முன்வைக்கப்பட்டு, நிதி ஒதுக்கப்படும். கிராம மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதே எமது நோக்காகும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.**

யாழ் . மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநரால் பல்வேறு திட்ட முன்மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பில் அமைச்சரவையில் முடிவெடுத்து அனுமதிகள் கிடைக்கப்பெற்றதும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

கிராமங்களை நோக்கியே திட்டங்கள் முன்வைக்கப்பட்டு , நிதி ஒதுக்கப்படும். கிராம மக்களின் வாழ்வாதாரங்களை உயர்த்துவதே எமது நோக்காகும். விசேடமாக கடற்றொழிலாளர்கள் பிரச்சினைகளைத் தீர்த்து அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த உள்ளோம்.

கடந்த கால குறைகளை நிவர்த்தி செய்து ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டி எழுப்புவோம்- என்றார். (ச-26)

# ஆங்கில , சிங்கள பயிற்சிநெறிகள்

யாழ்ப்பாணம், டிசெ.15

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிளிநொச்சி மாவட்ட காரியாலயத்தின் கீழ் இயங்கும் பயிற்சி நிலையத்தில், இளைஞர், யுவதிகளுக்கான ஆங்கில மற்றும் சிங்கள 6 மாத கால மொழிப் பயிற்சிநெறிகள் எதிர்வரும் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ளோர் தமது விண்ணப்பங்களை நேரடியாகவோ அல்லது நிலையப்பொறுப்பதிகாரி, பயிற்சி நிலையம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், 155 ம் கட்டை ஏ-9 வீதி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு தபால் மூலமாவோ அல்லது nysc.kili2013@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பிவைக்கலாம். மேலதிக தகவல்களுக்கு 0773589165 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)




# வடக்குக் கடலை இந்தியாவுக்கு விற்க முயன்றது உண்மையே!

## அன்னராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.15

வடக்குக் கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடந்த அரசாங்கத்தின் காலத்தில் முயற்சி எடுக்கப்படவில்லை என டக்ளஸ் மறுப்பது பொய்யாகும் என வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய இழுவைமடிப் படகுகள் இலங்கையின் வடக்குக் கடல் பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கும் எந்தவகையான திட்டமும் கடந்த காலங்களில் தம்மிடம் இருந்திருக்கவில்லை என்று முன்னாள் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மறுத்துள்ளார். வடக்கு கடலில் இந்தியமீனவர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்குவதன் மூலம் வருவாய் ஈட்டும் திட்டம் தொடர்பில் தமிழ்நாட்டில் இருந்து ஒலிபரப்பாகும் வானொலி ஒன்றில், இலங்கை முன்னாள் பிரதமர் தினேஸ் குணவர்த்தன வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார். அன்றைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் அதே கருத்தை நாடாளுமன்றில் தெரிவித்திருந்தார். இந்த நிலைப்பாட்டுக்கு அப்போதிலிருந்தே மீனவர் சமூகம் கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இந்த விடயத்தில் எது உண்மை எது பொய் என்பதனை மக்கள் விளங்கிக்கொள்வார்கள் - என்றார். (ச-25, 100)

# ஒளிராத வீதி விளக்குகள் பயணிகள் அசௌகரியம்



யாழ்ப்பாணம், டிசெ.15

பலாலி வீதி, உரும்பிராய் பிரதேசத்தில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் மிக நீண்டகாலமாக ஒளிராத நிலையில் காணப்படுவதால் இரவு நேரங்களில் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை மின்சாரசபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய இரு அரச நிறுவனங்களுக்கும் உரித்தான சுமார் 20 க்கும் அதிகமான வீதி விளக்குகள் குறித்த வீதியில் பொருத்தப்பட்டுள்ளன.

இருப்பினும் அவை மிக நீண்ட காலமாக ஒளிர்வதில்லை. இது தொடர்பில் வலி. கிழக்கு பிரதேசசபை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை மின்சார சபை ஆகியவற்றில் பல தடவைகள் எழுத்து மூலமான அறிவித்தல் வழங்கியும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. உரும்பிராய் சந்தியில் அதிகளவான வர்த்தக நிலையங்கள் மற்றும் மதுபான நிலையங்கள் உள்ளன. வீதி விளக்குகள் ஒளிராமையால் போக்குவரத்து நெருக்கடியை சந்திக்க நேரிடுகிறது . எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயம் தொடர்பில் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச-25, 27)

# ஓட்டோ - ஹைஏஸ் கிளிநொச்சியில் விபத்து

## ஒருவர் படுகாயம்

கிளிநொச்சி, டிசெ.15

கிளிநொச்சி - உமையாள்புரம் ஏ- 9 வீதியில் முச்சக்கரவண்டியும், ஹைஏஸ் வாகனமும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். கிளிநொச்சியிலிருந்து பளை நோக்கிச் சென்ற ஓட்டோவும் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச்சென்ற ஹைஏஸ் வாகனமும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் படுகாயமடைந்த ஓட்டோச் சாரதி கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-25, 113)

## அரச நிறுவனங்களில்

# மாற்றுத்திறனாளிகளை உள்ளீர்க்க வேண்டும்!

## கனகராஜ் சுட்டிக்காட்டு

பெரும்பாலான அரச நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றது. இதனை மாற்றியமைக்கவேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாற்றுத்திறனாளிகளின் உரிமையைப் பேணுவது தொடர்பில் அரச நிறுவனங்களை ஆய்வு செய்யவுள்ளோம். அரச நிறுவனங்களில் மாற்றுத்திறனாளிகள் அணுகும் வசதிகள் செய்யப்படவேண்டும் என்பது சட்டத்திலும், உயர்நீதிமன்ற தீர்ப்பிலும் காணப்படுகின்றது. ஆனாலும் பெரும்பாலான அரச நிறுவனங்களில் அங்கவீனர்கள் அணுகும் வசதி மிகக் குறைவு மாற்றுத்திறனாளிகள் நேர்முகப் பரீட்சைகளுக்குத் தெரிவு செய்யப்பட்டாலும் பதவியில் உள்ளீர்க்கப்படுவதில்லை. ஆகவே இதனைமாற்றியமைமாற்றுத்திறனாளிகளுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல்கள் உள்ளடக்கப்பட்டு அரசுக்கு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளன - என்றார். (ரி-125)





பளையூர் பாலாஜினியின் 'அவள் பெயர் முத்தழகு' எனும் சிறுகதை தொகுதி நூல் வெளியீடு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. (ச-25, 9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்.கோட்டையில் அதிகூடிய மழை!

யாழ்ப்பாணம், டிசெ. 15

கடந்த வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி வரையான 24 மணி நேரத்தில் யாழ்.மாவட்டத்தில் அதிகூடிய மழைவீழ்ச்சியாக 96.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி யாழ்.கோட்டையில் பதிவாகியுள்ளதாகத் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். குறித்த காலப் பகுதியில் யாழ்.நகரத்தில் 80.2 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், அச்சுவேலியில் 75.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தொல்புரத்தில் 55.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், திருநெல்வேலியில் 54.9 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், தெல்லிப்பழையில் 45.7 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், மீசாலையில் 37.5 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நெடுந்தீவில் 36.0 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும், நயினாதீவில் 29.4 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன எனவும் திருநெல்வேலி வானிலை அவதான நிலையத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ம-66)



# முழுமையாக காப்பெற் வீதியானது குளப்பிட்டி ஆனைக்கோட்டை வீதி

யாழ்ப்பாணம், டிசெ. 15

கொக்குவில் - குளப்பிட்டி முதல் ஆனைக்கோட்டை வரையான வீதி முழுமையாக காப்பெற் வீதியாக மாற்றம் பெற்றுள்ளது.

கொக்குவில் குளப்பிட்டியில் இருந்து கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம் வரையான வீதிக்கும் ஆனைக்கோட்டையிலிருந்து ஆனைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் ஆலய அருகாமை வரையான வீதிக்கும் கடந்த 2021 ஆம் ஆண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் காப்பெற் இடப்பட்டிருந்தது.

இடைப்பட்ட வீதி புனரமைப்பின்றியும் வடிகால் இன்றியும் காணப்பட்டது. இதனால் மழை காலங்களில் வெள்ளநீர் தேங்கி வீதியில் விபத்துச் சம்பவங்களும் நேர்ந்தன. இந்த நிலையில் இந்தவாரம் குறித்த வீதி முழுமையாக புனரமைப்புச் செய்யப்பட்டு காப்பெற் வீதியாக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆனைக்கோட்டை முதல் வட்டுக்கோட்டை வரையான வீதியின் நவாலி பகுதி புனரமைப்பின்றி இருந்த நிலையில் குறித்த வீதியும் காப்பெற் வீதியாக்கப்பட்டுள்ளது. (ச-125)



## வடமராட்சியில்

# மர்மக்காய்ச்சல் விழிப்புணர்வுகள்

யாழ்ப்பாணம், டிசெ.15

வடமராட்சிப் பிரதேசத்தில் எலிக்காய்ச்சல் மற்றும் மர்மக் காய்ச்சல் பாதிப்பு அதிகரித்துவரும் நிலையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

இந்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் எலிக்காய்ச்சல் அறிகுறிகள் தொடர்பிலும், அவ்வாறான அறிகுறிகள் இருந்தால் தாமதிக்காது அருகிலுள்ள அரச மருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியதுடன், துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன. குறித்த விழிப்புணர்வுச் செயற்பாட்டில் யாழ். மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் பங்கேற்றார். (ரி-100)

## இரத்ததான முகாம்

யாழ்ப்பாணம், டிசெ.15

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையத்தினரின் 25ஆவது இரத்ததான முகாம், கருகம்பனை கலாசார மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது. (ச-25)

## நீரிறைக்கும் இயந்திரம் திருட்டு அச்சுவேலியில் இருவர் கைது!

யாழ்பாணம், டிசெ.15

அச்சுவேலியில் 90 ஆயிரம் ரூபா பெறுமதியான இரண்டு நீர் இறைக்கும் இயந்திரங்களைத் திருடிய சந்தேகநபர்கள் இருவர் கடந்த வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

அச்சுவேலி - பத்தமேனிப் பகுதியில் இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பலாலி கிழக்குப் பகுதியைச் சேர்ந்த இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-45-66)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்தி செய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன்- மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகி விடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் – மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக் கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச் செலவுகளும் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு செந்தமான கட்டடம் வாடகைக்கு

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு முன்பாக அமைந்துள்ள கட்டடத்தின் இரண்டாம் மாடியில் 3000 மூவாயிரம் சதுர அடி இடப்பரப்புள்ள கட்டடம் குறுகிய / நீண்ட கால குத்தகைக்கு விடப்படவுள்ளது. தேவையானோர் தொடர்புகொள்ளவும்.

யாழ். மாவட்ட பேக்கரி
உரிமையாளர் சங்கம்,
ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

செயலாளர்
கா.பாஸ்கரன்
தொலைபேசி இல.
077 598 8298 / 021 222 3814

(ee.43883) (N-1)

## மணமகள் தேவை

1987, இந்து, ஸ்வாதி, CIVIL ENGINEER
பூர்வீகம் - உசன், வதியுமிடம் - LONDON
மணமகன் பதிவு இல: 11274.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

## மணமகன் தேவை

1995, இந்து, ரோஹினி, TEACHER
பூர்வீகம் - யாழ்ப்பாணம், வதியுமிடம் - கிளிநொச்சி
மணமகள் பதிவு இல: 11215.
தரகர் கூலி இல்லை. பதிவுகட்டணம் மட்டுமே.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401
www.EQMarriageService.com

# மரண அறிவித்தல்

அன்னை மடியில்
05 . 04 . 1973



அரன் அடியில்
11 . 12 . 2024

## மனோகரன் றட்ணகிளி (லலிதா)

கற்பகப்பிள்ளையார் வீதி, வட்டு வடக்கு, சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மனோகரன் றட்ணகிளி (லலிதா) கடந்த 11.12.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் கனகரட்ணம் - மற்றும் செல்வராணி தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற க. இராசேந்திரம் - மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அருமை மருகளும், மனோகரன் (நாகபூசணி கேபிள்விசன் உரிமையாளர்) அவர்களின் அருமை மனைவியும், விக்னேஷன், அருள்நேஷன், கபிஷன், ஜிலானி ஆகியோரின் அருமைத் தாயாரும், வி. நிவேதா, அ.சுரேக்கா, க.பிரகாஷினி ஆகியோரின் அன்பு மாமியும், வி.சஞ்சனாவின் பேர்த்தியும், க.றட்ணவதனா, ப.றட்ணசாந்தா, இதயகுமாரன், சு.றட்ணபிரபா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
மகன் - 077 6265 328
கணவர் - 077 2718 411

கற்பகப்பிள்ளையார் வீதி,
வட்டு வடக்கு, சித்தன்கேணி.

(cs 2047 (N.1)

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கஜூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிளை தென்னை, விலும்பி, நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்சா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா, கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: நியூ லங்கா பாம்
பலாலி வீதி, ஊரெழு மேற்கு,
பிள்ளையார் கோயில் வீதி,
கணேசா பாடசாலை அருகில் 077 612 9343

நியூ லங்கா பாம்
கிளை:
K.K.S. வீதி, இணுவில்

## ENGLISH CLASSES

GRADE: 6 -11
(Basic கற்பிக்கப்படும்)
தொடர்புக்கு:- 077 841 9507

(CS/56909) N-1

## வீடு வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி இந்துக் கல்லூரி மற்றும் இந்து ஆரம்ப பாடசாலைக்கு மிக அண்மையில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்கு உள்ளது.

தொடர்பு: 076 038 7167
076 604 3242

## வீடு வாடகைக்குத் தேவை


இருவர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீடுவாடகைக்குத் தேவை.

077 618 0675

(CS/56916) N-1

# மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 11 . 1938



மறைவு
05 . 12 . 2024

## பொன்னுத்துரை கனகராஜா

### (ஓய்வுபெற்ற துறைமுக அதிகாரசபை உத்தியோகத்தர் C.W.E)

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும். கொழும்பு. கனடா Scarborough ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகராஜா அவர்கள் கடந்த 05.12.2024 வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை-இராசமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நாகம்மா (வேலணை) தம்பதிகளின் பாசமிகு மருமகனும், தவமணிதேவி (தயா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், குணாஜினி. சுதாஜினி. திருக்குமரன் (றமணா) ஆகியோரின் பாசமிகு தந்தையும். நாகநாதன். முரளீகரன், வைகை ஆகியோரின் அன்பு மாமனாரும். அபிராம். திவ்யா. ஷரண்யா. சஞ்ஜீவன். பிரணீதா. அகரன் ஆகியோரின் பாசமிகு பேரனும். காலஞ்சென்றவர்களான யோகலிங்கம். நாகபூசணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி. தேவதாசன். கனகாம்பிகை. வரதலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும். காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு சகலனும், ராஜ்குமார், தக்ஷினி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும். கஜவதனி (கார்த்திகா). தயாபரன் (கோபி) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada என்னும் இடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் Ajax Crematorium & Visitation Centre 384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada என்னும் இடத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

| | | |
|---|---|---|
| தயா-மனைவி | Mobile : | +16477629899 |
| றமணா-மகன் | Mobile : | +16138892534 |
| குணாஜினி - மகள் | Mobile : | +14162704546 |
| சுதாஜினி- மகள் | Mobile : | +94761837300 |
| நாகநாதன் - மருமகன் | Mobile: | +16475182184 |
| முரளீகரன் - மருமகன் | Mobile: | +94777043540 |

(CS 56928) A-1

# மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 02 . 1946



இறப்பு
12 . 12 . 2024

## திருமதி சங்கரலிங்கம் இராஜாம்பிகை (மாலினி)

32.சுவாமியார் வீதி கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சங்கரலிங்கம் இராஜாம்பிகை (மாலினி) கடந்த 12.12.2024 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம் - சிவகாம்பிகை தம்பதியின் அன்பு மகளும், தம்பிப்பிள்ளை சங்கரலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் துர்க்கா (பிரான்ஸ்), துஷியந்தன் (ரெலிக்கொம் - யாழ்), கஜேந்திரன் (பிரான்ஸ்), காயத்திரி (BCAS Jaffna Campus) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (பிரான்ஸ்), கேமினி (உடுவில் மான்ஸ் தமிழ்கலவன் பாடசாலை), விறோஜா (பிரான்ஸ்), பவித்ரன் (மேற்பார்வை முகாமையாளர் புகையிரத பாதை - புகையிரத திணைக்களம் வவுனியா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கரிஸ், பிறீத்தி, கரணி (பிரான்ஸ்), கன்சினி, தனுசிகன், ஆகித் (பிரான்ஸ்), டன்ஷிஜா, திஷ்சஜாவின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராஜசிங்கம், இராஜேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மற்றும் பேரின்பநாயகி (லண்டன்), அன்னபூரணம் (லண்டன்), கமலாம்பிகை (லண்டன்), தவமணி, இராசலிங்கம், தையல்நாயகி (லண்டன்), இராஜேஸ்வரி (ஜேர்மன்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

32 சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை மேற்கு, யாழ்ப்பாணம்.

தகவல்: மகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி உரிமை வெளிப்படுத்தல்

விக்னராசா கைம்பெண் தங்கப்பிள்ளை (407181972 V) வட்டாரம் 18 கிராம அலுவலர் பிரிவு J/207 மணியகாரன் வீதி புன்னாலைக்கட்டுவன் தெற்கு சுன்னாகம் எனும் முகவரியைச் சேர்ந்த நான் உதயன் பத்திரிகை வாயிலாக எனது ஆதனம் தொடர்பான விளக்கத்தினை பிரசுரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதால் அதனை பிரசுரிக்கிறேன். அதே சமயம் எமது காணியானது எங்கள் உரித்தும் உரிமையும் உள்ளது என்பதனையும் உறுதிப்படுத்த விளைகின்றேன்.

எனது கணவரால் மயிலணி வடக்கு சரவணை கந்தசாமி என்பவருக்கு சி.ஜெயகாந்தன் தரகர் மூலம் திட்டமிட்டபடி ஜெ.ஜெயரூபன் நொத்தாரிசு அவர்களால் இல.140/2008/09/27 உறுதி அறுதியாக விற்பனை செய்யப்பட்டது போல உறுதியாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக்காணி தொடர்புபட்ட விடயங்களை தெரியப்படுத்த விரும்புகின்றேன். எனது மகள் உமாச்சந்திரிக்கும் மல்லாகம் வேதாரணியம் பரிமேலழகனுக்கும் நடந்தேறிய பதிவுத் திருமணத்தின் போது நொத்தாரிசு க.பரமநாதன் முன்னிலையில் உறுதி இல:4242 வழங்கியிருந்தோம். அவ்வுறுதியில் பெயர்கள் தவறுதலாக எழுதப்பட்டமையால் அவ்வுறுதி திருத்தல் செய்யப்பட்டது. அதன் உறுதி இல:4295 இவ் உறுதியால் மேலும் பல காணிகள் சீதனமாகக் கொடுக்கப்பட்டது. காணிகள் ஒன்றின் இறையின் பெயர் திரியங்குளான் என்ற ஆதனம் ஆகும். எனது கணவர் இளையதம்பி விக்னராசாவுக்கு 25829 இலக்க உறுதியால் கிடைக்கப்பெற்ற காணி உறுதியால் நி.ப.08 இல் சொறிலாய் (1/3) ஆகும். இக்காணியின் முற்பதிவு (H 460/76) காணிப்பதிவகத்தில் பதியப்படுள்ளது. இவ்வாதனமானது எனது மகளிற்கு கொடுக்கப்பட்ட சீதன ஆதனத்தின் மேற்குப் பக்கமாகவும் சிவலிங்கம் ஜெயகாந்தன் வீட்டிற்கு முன்னால் 15 அடி தூரத்தில் உள்ள ஆதனம் ஆகும். எனது கணவரின் காணிக்கு தரகராக செயற்பட்ட சி.ஜெயகாந்தன் அக்காணிகள் முழுவதையும் ஏதோவொரு தீய எண்ணத்துடன் தனது உடமையாக்கிக்கொள்ள வேண்டுமென்று எனது மகளின் சீதனக் காணியையும் சேர்த்து தனக்குத் தரும்படி பலமுறை எனது வீட்டிற்கு வந்து கேட்டிருந்தார்.

எனது கணவர் மகளின் சீதனக் காணியினை தர முடியாது என்றும் எனது ஆதனத்தை மட்டும் அதாவது 08 இல் சொறியலாய் (1/3) காணியை தருவதாக கூறியிருந்தார். இதனை சிவலிங்கம் ஜெயகாந்தன் வேண்டாமென்று மறுத்து சென்றுவிட்டார். பின்னர் மூன்று மாதத்திற்குப் பின்னர் சரவணை கந்தசாமிஎன்பவருக்கு அந்த காணி நி.ப.02 குளி 06 ஐயும். அதாவது 08 இல் (1/3)இனை தரும்படி கேட்டுக் கொண்டார். தான் தரகர் என்று கூறி இருந்தார். எனது கணவர் இதற்கு உடன்பட்டு நி.ப.08 சொரியலாய் 1/3 பங்கின் உறுதியையும் அதன் தாய் உறுதியையும் யாழ் காணிப்பதிவகத்தில் (கச்சேரியில்) சரிபார்க்க கொடுத்திருக்கின்றார்.

ஒரு மாதத்திற்கு பின்னர் உறுதிகள் சரி பார்க்கப்பட்டு விட்டது என்றுகூறி ஜெயகாந்தன் எமது வீட்டுக்கு வந்து கூறினார். நொத்தாரிசு ஜெ.ஜெயரூபன் அவர்களுடைய அலுவலகம் K.K.S Road. வீதி. சுன்னாகத்தில் உள்ளது. அங்கு வரும்படி கூறினார். நாம் நொத்தாரிசு அவர்களின் அலுவலகத்திற்கு சென்றிருந்தோம்.ஜெ.ஜெயரூபன் நொத்தாரிசு அவர்களின் அலுவலகத்தில் சிவலிங்கம் ஜெயகாந்தன் மட்டும் வந்திருந்தார். காணி எழுதப்படும் பெயருடைய சரவணை கந்தசாமி சமூகமளிக்கவில்லை சரவணை கந்தசாமி தனது அப்பாவின் (சிவலிங்கம் சொந்த சகோதரன் (சித்தப்பா) என்றும் சிவலிங்கம் ஜெயகாந்தன் கூறியிருந்தார். நாம் நொத்தாரிசு பெயரிலுள்ள நம்பிக்கையில் நானும் எனது கணவரும் சொரியலாக 08 இல் 1/3 பங்கிற்கு மட்டும் கையொப்பம் இட்டோம். எனது கணவனால் சரிபார்க்க கொடுக்கப்பட்ட தாயுறுதிகள் எமக்குத் திருப்பித்தரவில்லை. எம்முடன் எமது மகளும் உதவிற்கு வந்திருந்தார். அவ் உறுதி ஆவணத்தில் தமிழில் சாட்சிக் கையொப்பம் இடவில்லை. எனது மகள் எந்த சந்தர்ப்பத்திலும் தமிழில் கையொப்பமிட்டது கிடையாது. இதை என்னால் அடித்துக் கூற முடியும். நொத்தாரிசு ஜெ.ஜெயரூபன் அவர்களை நாம் ஒரு நாளும் அறிந்திருக்கவும் தெரிந்திருக்கவும் இல்லை.

சரவணை கந்தசாமியை எனது கணவருக்கு தெரியாது ஆனால் ஜெயகாந்தன் சரவணை கந்தசாமியோடு எந்தவித தொடர்பையும் ஏற்படுத்தவிடாது தானே எல்லாவற்றையும் செய்திருக்கின்றார். சீதன உறுதிக்காரர் கையொப்பம் இடாமல் சாட்சி கையொப்பம் இடாது சாட்சிக் கையொப்பம் இட்டு தனக்குரியதான காணியை விற்பனை செய்யப்பட்டதாக எழுதப்பட்டது கேள்விக்குரியதாகும்.

எனது மகளின் சீதன உறுதி இல: 4242. 11.12.2000ம் ஆண்டு எழுதப்பட்டது. 2008.09.27 அன்று அறுதி உறுதி இல: 140 ஆனது விற்பனை செய்யப்பட்டதாக எழுதப்பட்டுள்ளது. அத்துடன் வலி தெற்கு பிரதேச சபையின் 2019ம் ஆண்டில் சட்ட ஆலோசகராக கடமையாற்றியவரே உறுதியை எழுதிய ஜெ.ஜெயரூபன் சட்டத்தரணியும் நொத்தாரிசும் ஆவார். பிரதேச சபையின் பெயர் மாற்றம் மற்றும் வரி செலுத்துதல் ஆவண மாற்றங்களும் செய்து கொடுக்கப்பட்டது. பிரதேச சபையின் நிபந்தனை பட்டியலுக்கு ஏற்ப ஆவணங்கள் ஜெயகாந்தனால் கொடுக்கப்படவில்லை. (தோம்பு) இருமடித்தால் ஆனது 2008ம் ஆண்டில் இருந்து 2011ம் ஆண்டு வரை மட்டும் தான் காணப்படுகிறது. (2 வருடங்கள் மட்டும்) எனது மகளின் சீதனக் காணியின் தொடர்பான இருமடித்தாள்களின் கீழ் எழுதப்பட்ட அறுதி உறுதி இல:140 ஆவண விபரங்கள் பதியப்படவில்லை. 140 இலக்க உறுதிக்கு புதிய முற்பதிவு ஒன்றை உருவாக்கித் தான் நொத்தாரிசு ஜெ.ஜெயரூபன் (தோம்பு) இருமடித்தாளில் பதித்துள்ளார்.

எமது ஆதனம் J/207 கிராம செயலாளர் பிரிவில் உள்ளது. அந்த J/207 கிராம சேவகர் பிரிவில் தான் புன்னாலைக்கட்டுவன் தெற்கு விவசாயிகள் சம்மேளனம் உள்ளது. எமது காணியை குத்தகைக்கு செய்த ந.கண்ணன் என்பவரும் இங்கு தான் விவசாய பதிவு மேற்கொண்டிருந்தார். ஜெயகாந்தன் J/207 பிரிவில் விவசாய சம்மந்தமான பதிவுகள் மேற்கொள்ள சென்ற போது அச் சம்மேளனத்தின் தலைவர் வேலுப்பிள்ளை மகாதேவன் (மகா) என்பவர் துணை போகவில்லை. காரணம் இக்காணி பிணக்கில் இருப்பது அவருக்குத் தெரியும் அத்துடன் இக்காணி புன்னாலைக்கட்டுவான் விவசாய சம்மேளனத்தில் கீழ்தான் உள்ளது என்பதுவும் தெரியும். அதனால் தலைவர் மகாதேவன் அவர்கள் ஜெயகாந்தனுக்கு விவசாய பதிவுகள் எதுவும் மேற்கொள்ளாது திருப்பி அனுப்பி விட்டார். பின்னர் ஜெயகாந்தன் அயல் கிராமமான குப்பிளான் பிரிவிலுள்ள விவசாய சம்மேளனத்தில் கீழ் எமது காணிக்குரிய பதிவை மேற்கொண்டுள்ளார்.

அது J/210 கிராம செயலாளர் பிரிவை சேர்ந்த சம்மேளனம் ஆகும். இவ் சம்மேளனத் தலைவர் அவர்களிடம் சென்று நான் இக்காணியில் பலகாலமாக மிளகாய். புகையிலை. பீற்றூட் செய்து வருவதாக உறுதிப்படுத்தி தருமாறு கேட்ட போது அச்சம்மேளனத்தின் தலைவரும் "விவசாயப் பதிவை உறுதிப்படுத்துதல்" எனும் தலைப்பில் ஜெயகாந்தன் எழுதிக் கொண்டு சென்ற கடிதத்திற்கு உறுதிப்படுத்திக் கொடுத்துடன் பொறுப்பான உத்தியோகத்தர் அவர்களும் மேலதிகமாக உறுதிப்படுத்திக் கொடுத்துள்ளார். ஆனால் அக்காணியின் எல்லைகள் கிராம சேவையாளர் பிரிவு உறுதி இலக்கம் முக்கியமான பல ஆவணங்கள் காட்டப்படவில்லை. ஜெயகாந்தன் விவசாயம் செய்வதை உறுதிப்படுத்தி தரும்படி சுன்னாகம் பொலிசார் கேட்டதாகவும் சம்மேளனத் தலைவர் கூறினார்.

இப்படியான போலிக் கடிதங்களை தயாரித்து எமது காணியை தான் உடமையாகக் கொண்டுள்ளார் என்பதைக் காண்பிப்பதற்கு பலவழிகளில் முயற்சி செய்தும் வருகின்றார் ஜெயகாந்தன். பலவழிகளில் எமது உடமையை தமது உடமையாக்குவதற்கு பலவழிகளில் முயற்சி செய்து பயனில்லை. இறுதியில் எமது ஆதனத்திற்குள் இருந்த வாழை. தென்னை என்பனவற்றை 2022ம் ஆண்டு வெட்டி நாசப்படுத்தினார். பின்னர் எமது காணிக்குள் 2024ம் ஆண்டு வாழைக்குட்டிகளை நாட்டி பலாத்காரமாக உடமை கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது காணி அதாவது சீதனக்காணியின் முற்பதிவுகள் 1958ம் ஆண்டில் இருந்து 2024ம் ஆண்டு இன்றை வரைக்கும் எம்மால் தொடர்ச்சியான முறையில் கையாளப்பட்டு வருகின்றது. எமது சீதனக்காணியின் உறுதியின் தாய் உறுதியில் இருக்கும் முற்பதிவானது H 313/238 ஆகும். இதன் கீழ் இலக்கம் 140 உறுதியானது புதிய பதிவுகளில் பதியப்பட்டுள்ளது. அத்துடன் எனது கணவர் இளையதம்பி விக்கினராஜாவின் உறுதியில் உள்ள H 460/76 இன் முற்பதிவின் முன்னைய முற்பதிவு H 168/11 ஆகும். இந்த முற்பதிவில் நி.ப.08 இல் (1/3) பங்கு மட்டுமே பதியப்பட்டுள்ளது. எனினும் H 168/11 என்ற முற்பதிவினை மூன்று தடவைகள் முற்பதிவாக காண்பித்து மூன்று ஆதன இடாப்பாக காட்டப்பட்டு காணியின் பரப்பளவை மூன்று மடங்காக புதிய முற்பதிவினை (தோம்பு) உருவாக்கி அறுதி உறுதி இலக்கம் 140 எழுதப்பட்ட உறுதியாகும்.

புதிய தோம்பின் முற்பதிவில் H 816/153 ஆகும். H 168/11 முற்பதிவின் கீழ் சரவணை கந்தசாமிக்கு கொடுக்கப்பட்ட அறுதி உறுதி இலக்கம் 140 பதியப்படவில்லை. முன்னுறுதிகள். முற்பதிவுகள் பார்க்கப்படாமல் அறுதி உறுதி ஆவணம் எழுதியும் புதிய முற்பதிவை உருவாக்கி எழுதியுள்ளார்கள். 2019ம் ஆண்டு தான் நாம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்தோம். எனது மகளும் பேரனும் சீதன ஆதனத்தை பார்வை இடச் சென்ற வேளை சிவலிங்கம் ஜெயகாந்தன் முழுக்காணியையும் உழுது பண்படுத்தியிருந்தார்.

காணியின் உரிமையாளர் நாம் என்ற வகையில் எமது காணியையும் சேர்த்து எவ்வாறு உழுதீர்கள் என்று கேட்ட போது சிவலிங்கம் ஜெயகாந்தன் உங்கள் அப்பாவும் அம்மாவும் (இளையதம்பி விக்னராஜாவும் மனைவி தங்கப்பிள்ளையும்) உங்கள் சீதன ஆதனத்தை அறுதி விற்றுவிட்டார்கள் என்று கூறி நொத்தாரிசு ஜெயசிங்கம் ஜெயரூபன் அவரிடம் சென்று விசாரியுங்கள் என கூறினார்.

ஜெயசிங்கம் ஜெயரூபன் நொத்தாரிசை நாம் சந்தித்த வேளை எமது ஆவணங்களை முன்னுறுதிப்படி தோம்பு (இருமடித்தாள்) எல்லாவற்றையும் காண்பித்து ஆராய்ந்த போது சிவலிங்கம் ஜெயகாந்தனின் மேலுள்ள நம்பிக்கையால் முன்னுறுதி முற்பதிவுகள் யாழ் காணிப்பதிவகத்தில் சரிபார்க்காமல் தவறுதலாக உறுதி எழுதப்பட்டுவிட்டது என நொத்தாரிசு அவர்கள் கூறினார். உண்மையில் ஜெயரூபன் அவர்களுக்கு எம்மைத் தெரியாது. அந்த இலக்க 140 உறுதியில் ஆவணத்தில் குறித்த உறுதி முடிப்புக்காரர்களை நான் அறியேன் என்றும். பின்னர் சரவணை கந்தசாமி மனைவி சின்னத்தங்கச்சி ஆகியோரால் சிவலிங்கம் ஜெயகாந்தன் பெறாமகன் என்று நன்கொடை கொடுத்த உறுதியில் உறுதி நிறைவேற்றுனர்களையும் சாட்சிகளையும் நான் அறிவேன் என்றும் முரண்பாடாகவே எழுதியுள்ளார்.

இதன் மூலம் நொத்தாரிசையும் எமக்குத் தெரியாது எம்மையும் சொத்தாரிசுக்கு தெரியாது இப்படியான சந்தர்ப்பத்தில் நொத்தாரிசு அவர்கள் பிழையான முன்வைப்புக்களை வைத்து எப்படி அறுதி உறுதி நிறைவேற்ற முடியும். சரவணை கந்தசாமி காலமாகிவிட்டார். சரவணை கந்தசாமி குடும்பத்தினருக்கு எங்கள் காணி நி.ப.02 குழி 6 நி.ப.08 இல் சொறியலாய் (1/3) (நி.ப.02 குழி 6) என்பதனை வாங்கியுள்ளார் என தெரியப்படுத்திய போது சரவணை கந்தசாமியின் மனைவி சின்னத்தங்கச்சி மற்றும் மகன் ரஜித் கந்தசாமி ஆகியோர் சிவலிங்கம் ஜெயகாந்தன் என்பவரை எமக்குத் தெரியாது எமக்கு அவர் (இரத்த உறவு) சொந்தக்காரரும் அல்ல என்றும் எமக்குப் புன்னாலைக்கட்டுவனில் அப்பா காணி வாங்க வேண்டிய தேவையில்லை என்றும் ஜெயகாந்தனுக்கு நாங்கள் நன்கொடை கொடுக்க வேண்டிய தேவையில்லை என்றும் சரவணை கந்தசாமியின் காணி உண்மையாக இருப்பின் 2008ம் ஆண்டு - 2011ம் ஆண்டு காலப்பகுதியில் எமது அப்பா கந்தசாமி புன்னாலைக்கட்டுவனுக்கு வந்ததும் இல்லை. மரக்காலை போடவும் இல்லை. 20 பரப்புக் காணியை ஒருவருக்கு நன்கொடையாக கொடுப்பது என்பதும் உண்மையாக நடக்கவில்லை.

இதனைக் கந்தசாமியின் மகன் ரஜித். தான் சாட்சியும் ஒப்பமும் இடவில்லையென்றும் ரஜித்தின் தாயாராகிய சின்னத்தங்கச்சியும் இவர் கையொப்பம் இடவில்லையென்றும் திட்டவட்டமாக கூறியுள்ளார். இதற்கான ஆதாரம் எம்மிடம் முறையாகவுள்ளது. எனினும் நொத்தாரிசு க.பரமநாதன் முன்னிலையில் உறுதி இல:4242 சீதன உறுதியில் தாய் உறுதியாக நொத்தாரிசு T.ஜெகதீஸ்வரன் அவர்களின் உறுதி சேர்க்கப்பட்டுள்ளது. அதன் முற்பதிவு ஆனது H 313/238 தெளிவாக காட்டப்பட்டுள்ளது. மகளின் சீதன உறுதியின் முற்பதிவு H 751/96 ஆகும். எம்மால் அறுதி விற்கப்பட்ட தாய் உறுதி இலக்கம் நொத்தாரிசு பூ.இளையதம்பி என்பவருடைய ஆகும். இதன் உறுதியிலக்கம் 25829 ஆகும். முற்பதிவு H 460/76 ஆகும். இதில் நி.ப.08 இல் சொரியலாய் (1/3) காட்டப்பட்டுள்ளது.

இதன் முன்னைய பதிவானது H 168/11 இறைநாமம் திரியாயங் குளம் மட்டுமே ஆகும். சட்டத்தரணியாக இருக்கும் நொத்தாரிசு ஒருவர் உறுதியின் ஆதன அட்டவணையில் எல்லைகள் முற்பதிவு என்பவற்றை சரிபார்த்து வாசித்து விளங்கிக்கொண்ட பின் தான் உறுதி எழுதுவார்கள். H 168/11 என்று மூன்று தடவைகள் காட்டி முடித்துள்ளார். நொத்தாரிசு பிழையான முன்வைப்புக்களை வைத்து அறுதி சாதனத்தை எழுதியுள்ளார். தேசவழமைச்சட்டத்தில் மனைவி கணவரின் சம்மதமில்லாமல் கையொப்பம் இடாது காணியை விற்க முடியாது என்று தெளிவாக கூறப்பட்டுள்ளது. அத்துடன் அறம் பேசு அத்தியாயம் 11 இல் "யார் கள்ள சட்டத்தரணிகள்" என்ற தலைப்பில் கலாநிதியும் சட்டத்தரணியும் ஆகியவர் அவர்கள் எமது காணி சம்மந்த வழக்கு பற்றிக் கூறுகின்றார்.

மேலும் கூறுகையில் ஏறத்தாழ 20, 25 வருடங்களுக்கு முதல் எழுதப்பட்ட அறுதி உறுதி முற்பதிவுகள் சரிபார்த்து எழுதப்பட்ட உறுதி தற்போது அந்த உடமையினுடைய. நிறைவேற்றுனர்களுக்குடைய. உறவினர்களுக்குடைய மகன் தனக்கு வரவேண்டிய ஆதனம்,இன்னொரு நபருக்கு போய்விட்டது அந்த நொத்தாரிசும் உடந்தை என்ற அடிப்படையில் மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளார். கலாநிதியாம் சட்டத்தரணி அவர்களை நாம் தாழ்மையாகவும் பணிவாகவும் கேட்பது எமது காணியை எழுதிய நொத்தாரிசு அவர்களின் இலக்கம் 140 உறுதித்தாள்களை பார்வை யிட்டீர்களா? இல்லை என்றால் வேறு நொத்தாரிசு கூறுவதை கேட்டுத்தான் இக்காணொலியில் கூறுகின்றீர்களா? தாங்கள் இக்காணி சம்மந்தமாக முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல் பேசியுள்ளீர்கள் நாம் தங்களை தயவாக கேட்பது இலக்கம் 454 உறுதியும் அதன் முற்பதிவுகளையும் பார்வையிட்டு உண்மையில் அந்த நொத்தாரிசு ஆகியவர் முறையாக முற்பதிவுகளைப் பார்த்துள்ளாரா என்பதை தாங்கள் அறிந்து கொள்ளவும் சில வேளைகளில் உங்களுக்கு உண்மை தெரியப்படுத்தப்படாமல் உங்களுக்கு தவறாக விளங்கவைத்திருக்கலாம் முற்பதிவுகள் காணிப்பதிவகத்தில் பார்க்கப்படவில்லை.

முறையாக முற்பதிவு சரிபார்க்கப்பட்டது என்ற உண்மையையும் மறைத்து முறையாக முற்பதிவு சரிபார்க்கப்பட்டது என்று காணொலியில் குறிப்பிட்டுள்ளீர்கள். சட்டதரணி குருபரன் அவர்களை நான் தாழ்மையாகக் கேட்பது H 313/238. H 460/76, H451/96. முற்பதிவுகளை காணிப் பதிவகத்தில் பார்வையிடலாம். இக்காணியின் உரித்துடையவரின் பேர்த்தியார் ஆகிய எனக்கு இக்காணி தொடர்பான உரிமையை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. விக்கினராஜா கைம்பெண் தங்கப்பிள்ளை ஆகிய நான் மிகப் பணிவுடன் இப்பிரசுரத்தை வெளியிடுகின்றேன். இத்துடன் இலக்கம் 140 உறுதியின் ஆதன அட்டவணையை பகிரங்கமாக பிரசுரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

## ஆதன அட்டவணை

**வடமாகாண யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்கு பகுதி மல்லாகம் கோவிற்பற்று ஏழாலை இறை "திரியங்குளான்" நிலப்பரப்பு எட்டும் (நி.ப.08) பனைகளும் வடலிகளும் இதடங்கலில் சொரியலாய் மூன்றிலொரு (1/3) பங்கு. இது யாழ்ப்பாணம் காணிப் பதிவகத்தில் H 168/11 இல் பதியப்பட்டுள்ளது. மேற்படி ஏழாலை இறை "திரியங்குளான்" நிலப்பரப்பு எட்டும் (நி.ப.08) பனைகளும். இதடங்கலில் சொரியலாய் ஆறிலொரு (1/6) பங்கு இது யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் H168/11 இல் பதியப்பட்டுள்ளது. மேற்படி ஏழாலை இறை "திரியங்குளான்" நிலப்பரப்பு எட்டு. (நி.ப.08) இதடங்கலில் சொரியலாய் மூன்றிலொரு (1/3) பங்கு. இது யாழ்ப்பாணம் காணி பதிவகத்தில் H168/11 இல் பதியப்பட்டுள்ளது. மேற்படி மூன்று ஆதனங்களும் ஒன்று சேர்த்து ஓர் ஆதனமாக பின்வருமாறு விபரிக்கப்படுகிறது.**

**மேற்படி ஏழாலை இறை "திரியங்குளான்" நிலப்பரப்பு எட்டு (நி.ப.08) பனைகளும் வடலிகளும். இதில் அறுதி விற்பவர்களுக்குரிய சொரியலாய் ஆறில் ஐந்து 5/6)பங்கிற்குச் சமமாக மறு பங்காளரின் சம்மதத்துடன் தெற்குப் பக்கமாக ஆட்சி செய்து வரும் தெற்குப் பக்க நிலப்பரப்பு ஆறு குழி பன்னிரண்டு (நி.ப.06 குழி 12). மேற்படி ஏழாலை இறை "திரியங்குளான்" நி.ப.13 குழி 63/4 ஆனால் அளவுப்படி நி.ப.12 குழி 5 1/2 யும் பனைகளும். இது யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தின் H 313/238 இல் பதியப்பட்டுள்ளது. மேற்படி இரு ஆதனங்களும் ஒன்றிற்கொன்று அருகாமையிலும் ஒருங்கிணைந்த ஆட்சியிலும் ஒரே நில அளவைப் படத்தில் சேர்க்கக்கூடியதாக இருப்பதனாலும் ஓர் ஆதனமாக இப்பொழுது பின்வரும் விதத்தில் விபரிக்கப்படுகிறது. மேற்படி ஏழாலை இறை "திரியங்குளான்" நிலப்பரப்பு பதினெட்டு குழி பதினேழரை (நி.ப.18 குழி 171/2). ஆனால் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ம.சிற்றம்பலம் அவர்கள் 17.08.2008 அன்று அளந்து தயாரித்த 2271ம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 என சுட்டப்பட்டு நிலப்பரப்பு இருபது (நி.ப.20) ஆகக் காணப்படுகிறது.**

**இந்த நிலப்பரப்பு இருபதுக்கும் எல்லைகள்.**

| | |
|---|---|
| **கிழக்கு** | **- ஐயாத்துரை சந்திரதேவனும் பெண் செல்வஞானத்தினதும் ஆதனம்.** |
| **வடக்கு** | **- அமிர்தானந்தன் பெண் மாசிலாமணியினதும் உறுதி முடிப்புக்காரர்களினதும் ஆதனங்கள்.** |
| **மேற்கு** | **- உறுதி முடிப்புக்காரர்களின் பிரத்தியேக பாதை நிலம்** |
| **தெற்கு** | **- கிராமசபை ஒழுங்கை.** |

**இவ்வெல்லைப்படி இதனடங்கலும். இதற்கத்தாட்சியாக ... இப்பத்திரிகையின் பிரசுரத்தின் ஊடாக சம்மந்தப்பட்ட அதிகாரிகள் சம்மந்தப்பட்ட துறையினர் திணைக்களங்களுக்கு இக்காணி மோசடி தொடர்பாக தெரியப்படுத்துவதுடன் ஜனாதிபதி மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு முறைப்பாடுகள்" செய்த வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள சட்டத்தரணிகள் மூலம் பத்திரிகை வாயிலாக இது பற்றி பிரசுரிக்கப்பட்டமை என்பதைக் காட்டியும் இதை பத்திரிகை வாயிலாக பிரசுரிக்கின்றேன்**

**மணியகாரன் வீதி,**
**புன்னாலைக்கட்டுவன் வீதி,**
**சுன்னாகம்.**

**திருமதி**
**விக்னராஜா தங்கப்பிள்ளை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண்களுக்கெதிரான வன்முறை வவுனியாவில் விழிப்புணர்வு

வவுனியா, டிசெ.15

பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக விழிப்புணர்வு ஊர்வலம் வவுனியாவில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. வவுனியா பழைய பேருந்து நிலையத்தில் ஆரம்பித்த குறித்த பேரணியானது பசார் வீதியூடாக, வவுனியா மருத்துவமனை சுற்றுவட்ட வீதியை அடைந்து பிரதான வீதி ஊடாக சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தை அடைந்து அங்கு அரங்க நிகழ்வுகள் இடம் பெற்றன. வவுனியா மாவட்ட பெண்கள் சிவில் சமூக வலையமைப்பும், பொஸ்டோ நிறுவனமும் இணைந்து பெண்களுக்கு எதிரான வன்முறை தொடர்பில் 16 நாள் செயற்றிட்ட நடவடிக்கையின் ஒரு கட்டமாகவே குறித்த விழிப்புணர்வுப் பேரணி இடம்பெற்றது. நிகழ்வில் வவுனியா பொது மருத்துவமனை உளநலப் பிரிவு மருத்துவர் சுதாகரன், வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பி.எம். குமார, வவுனியா பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ராகினி, சட்டத்தரணி விதுசினி மற்றும் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பெண்கள் அமைப்புகளின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-18)



சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தால் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு வற்றாப்பளை, முள்ளியவளை, கேப்பாப்புலவு, விசுவமடு, ஐயனார் குடியிருப்பு, றெட்பானா குடியேற்றத் திட்டம் ஆகிய கிராமங்களில் தெரிவுசெய்யப்பட்ட165 குடும்பங்களுக்கு கடந்த புதன்கிழமை 4 இலட்சத்து 95 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ள நிவாரண உதவிகள் வற்றாப்பளையில் வைத்து வழங்கப்பட்டன. (ச-33-66)



# ஈழத்துக் கலை இலக்கியப் பேரவை கிளிநொச்சியில் அங்குரார்ப்பணம்

கிளிநொச்சி, டிசெ.15

இலங்கை நாட்டின் தமிழர் தரப்பின் தனித்துவமான பல்துறைசார் கலைஞர்கள் இலக்கியவாதிகள்,படைப்பாளிகளை உள்ளடக்கிய தேசியக் கட்டமைப்பான 'ஈழத்துக் கலை இலக்கியப் பேரவை' எனும் கட்டமைப்பின் முதலாவது தெரிவுக் கூட்டம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் தலைமை ஒருங்கிணைப்பாளராக வன்னியூர் செந்தூரன், பொதுச் செயலாளராக பிரபல ஆசிரியரும்,படைப்பாளியுமான சி.வரதராஜன், நிதிச் செயலாளராக பிரபல இசையமைப்பாளர் பி.எஸ்.விமல்ராஜ், உப செயலாளராக படைப்பாளி கங்காவும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். (ச-45)



# கவிஞர் நினைவாக உதவிப்பொருள்கள்

யாழ்ப்பாணம், டிசெ.15

ஈழத்தின் முதுபெரும் கவிஞரும், எழுத்தாளருமான அமரர் சு.வில்வரத்தினத்தின் 18 ஆவது ஆண்டு நினைவாக சூழகம் அமைப்பின் செயலாளர் கருணாகரன் நாவலனின் ஏற்பாட்டில் நயினாதீவு அரசினர் மருத்துவமனைக்கு பல்வேறு உபகரணங்களும், கிருமிநாசினிப் பொருள்களும், நுளம்பு வலைகளும், போர்வைகளும் வழங்கப்பட்டதோடு மரநடுகையும் இடம்பெற்றது. (ச-45)

வட மாகாண ஆரம்பப்பிரிவு மாணவர்களின் செயற்பட்டு மகிழ்வோம் போட்டி 2024 கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. இந்தப் போட்டியில் மீசாலை வீரசிங்கம் ஆரம்பப் பாடசாலையின் தரம் - 5 பெண்கள் அணியினர் முதலிடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். (ச-45-159)





மன்னாரில்

# கராத்தே போட்டியில் 5 வீரர்கள் சம்பியன்

மன்னார்,டிசெ.15

கிளிநொச்சி உள்ளரங்கு விளையாட்டு மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மன்னார் மாவட்ட கராத்தே போட்டியில் பங்குபற்றிய ஐந்து மாணவர்கள் சம்பியனைத் தனதாக்கியுள்ளனர்.

விடத்தல்தீவு தூய யோசவாஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.இவோன் ஸ்ரேயா, கற்கடந்தகுளம் சென். யோசவ் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜே.ஜெசின் மற்றும் என்.நிதுன்னா, வங்காலை சென்.ஆன்ஸ் பாடசாலையைச் சேர்ந்த பி.ரஜீவன், மன்னார் சித்திவிநாயகர் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.முகேஸ் ஆகியோரே சம்பியன் வென்றுள்ளனர். (ச-33-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உத்தியோகத்தர்களை அணுகுவதற்கு முறையுண்டு

## சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், டிசெ. 15

அரச அதிகாரிகளை கண்ணியத்துடன் நடத்த வேண்டும். அவர்களை அணுகுவதற்கு ஒரு முறை உள்ளது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரால், அரச அதிகாரிகள் தரக்குறைவாக நடத்தப்பட்டமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரச அதிகாரிகளாக இருப்பவர்கள் எங்களை விட கல்வித்தரத்தில் கூடியவர்களாகவும் இருக்கிறார்கள். கற்றறிந்துதான் அவர்கள் அந்தப் பதவிகளுக்கு வந்திருக்கிறார்கள். ஊடகவியலாளர்களுக்கும் எங்களை விட ஊடகத்துறையில் அனுபவம் கூடுதலாகவே இருக்கும். ஆகவே என்னைப் பொறுத்த வரைக்கும் நாங்கள் அவர்களை அணுகுவதற்கான முறை இருக்கிறது. மனிதாபிமானத்தையும் மனித மூலதனத்தையும் எவ்வாறு பயன்படுத்துவது என்பது தொடர்பிலும் நாங்கள் மிகவும் கண்ணியத்தோடும் பொறுப்போடும் நடக்கவேண்டும். எங்களுடைய கட்சி இதுவரை காலமும் அவ்வாறுதான் நடந்திருக்கிறது. தொடர்ந்தும் அந்தப் பொறுப்போடும் கண்ணியத்தோடும் அரச உத்தியோத்தர்களோடு அணுகிச் செயற்படுவோம் - என்றார்.

இதேவேளை, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினர் அரச அதிகாரிகளை தரம் தாழ்ந்த சொற்களால் அவமானப்படுத்திய போது சிறீதரன் அதனை வேடிக்கை பார்த்தபடி அமர்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-ம-18-110)


விற்பனைக்கு/வாடகைக்கு தேவை

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெகிவளை, நீர்வேலிப் பகுதியில் Appartments, வீடுகள் விற்க இருப்போர் மற்றும் வாடகைக்கு கொடுக்க இருப்போர் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:

076 311 9485, 076 050 3863



வீட்டுடன் காணி விற்பனைக்கு

K.K.S வீதி, மல்லாகத்தில்
அமைந்துள்ள ஒழுங்கையில்
3 அறைகள், குளியலறை,
சமையலறை இதர வசதிகளுடன்
கூடிய 2.5 பரப்பில் அமைந்துள்ள
வீட்டுடன் காணி
விற்பனைக்கு உண்டு.

076 744 8099



சமையலாள் தேவை

யாழ். நகரில் தனியார்
நிறுவனம் ஒன்றில் தனிநபர்
ஒருவருக்கு சமையல்
செய்யக்கூடிய ஒருவர் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம்.

077 277 7779




வரலாற்றுச் சிறப்பு மிக்க பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நேற்றுச் சனிக்கிழமை மாலை விஷ்ணுவாலய தீப உற்சவம் நடைபெற்றது.

(ம-66)


இணைப்ப இணையத்தளம் வழங்கும்
அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில்நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை. ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்பு கொண்டு உங்கள் துணையை தெரிவு செய்யமுடியும் பதிவுக்கட்டணம் இல்லை இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்

Ts& Cs apply
WWW.inaipa.com



ஐரோப்பா கனவை நனவாக்க

பல்கேரியா நாட்டிற்கு வேலை விசா
**1000 Euro** சம்பளம், **1 மாதத்தில் பயணம்**
சகல சட்ட ரீதியான வெளிநாட்டு பயணங்களுக்கும்
எம்மை தொடர்பு கொள்ளவும்.

**MK Visa Work (PVT)**

தொடர்பு: 074 035 2940


தரமற்ற...

மதி செய்யப்பட்டமை தொடர்பில் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள அரிசித் தட்டுப்பாட்டைத் தொடர்ந்து அரிசி இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறாக தனியார் இறக்குமதியாளர்களால் இறக்குமதி செய்யப்பட்ட 75 ஆயிரம் கிலோவுக்கும் மேற்பட்ட அரிசியே தரமற்றது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இறக்குமதி அரிசிகள் சுங்கத் திணைக்களத்தில் இருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர் சுகாதார அமைச்சின் உணவு மற்றும் மருந்து பரிசோதகர்களால் நடத்தப்பட்ட பாதுகாப்புப் பரிசோதனையின்போதே அவை தரமற்ற அரிசிகள் என்று உறுதியாகியுள்ளதாக துறைசார் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்துத் தரமற்ற அரிசி இறக்குமதி தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும், மேலதிக தகவல்கள் விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்குப் பகிரங்கப் படுத்தப்படும் என்றும் சுங்கத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (அ-ம)


வேலையாட்கள் தேவை

கொழும்பிலுள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு
பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.
வடைபோடுபவர், தோசைபோடுபவர், இடியப்பம், பார்சல்
கட்டுபவர்கள், Tea Makers Driver, Cleaning
வேலை, உணவு, தங்குமிடவசதி உண்டு.

077 305 8043, 077 255 8334



வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சுப்பர் மார்க்கற் மற்றும் பலசரக்கு கடைக்கு வேலையாட்கள் தேவை

- Sales Assistant (உதவியாளர்)
- Computer Billing + Cashier
- Driver (சாரதி)
- Part Time (பகுதி நேர வேலை)


வயது எல்லை 18-45 யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:

077 419 5209,077 419 5015

(CS 2051) P-1


## மரண அறிவித்தல்



### வேலாயுதம்பிள்ளை மனோன்மணி

சித்தங்கேணியைப் பிறப்பிடமாகவும் வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை மனோன்மணி நேற்று முன்தினம் (13.12.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம்-பொன்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து-சோதிமுத்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளையின் அன்பு மனைவியும் சர்வாம்பாள் (ஆசிரியர் யா/ பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம்), ஸ்ரீகாந்தன் (லண்டன்), பரந்தாமன் (சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் சங்கானை), ஐங்கரன் (லண்டன்), வடிவாம்பாள் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிறீகணநாதன் (ஓய்வு பெற்ற லங்கா சீமெந்து நிறுவன லிகிதர்), கிஷாந்தி (லண்டன்), மகிழினி, ஜெகசோதி (லண்டன்), ராஜகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சஞ்சீவன் (கொழும்பு), வைஷ்ணவி, தினேஸ் (சிங்கப்பூர்), பானுகா (லண்டன்), ஹிமாஜினி, கஜீபன் (லண்டன்), தர்மிகா (மாணவி யா/ வட்டு இந்துக் கல்லூரி), நிரோஸ் (லண்டன்), சைலிஜா (லண்டன்), ஜலுஷா (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஸ்வினின் அன்புப் பூட்டியும் காலஞ்சென்றவர்களான பரமசிவம், அருளம்பலம், சிவபாக்கியம், கார்த்திகேசு, கணபதிப்பிள்ளை, செல்வநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரி, வள்ளியம்மை, இராஜேஸ்வரி, செல்வராஜா, கிருஸ்ணராஜா, ஆனந்தராஜா, குலசேகரம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை (16.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

ஆத்தியடி பிள்ளையார் கோவிலடி,
வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.
தொடர்புகளுக்கு: 077 283 4558

(CR 43895) P-1

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 04 . 1936



மறைவு
13 . 12 . 2024

### மகாதேவன் மருக்கொழுந்து

சங்கானையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவன் மருக்கொழுந்து நேற்று முன்தினம் (13.12.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் மகாதேவனின் அன்பு மனைவியும் கிருபாகரன், சுமதி, ஜெயந்தி (ஜேர்மனி), வசந்தி, சுதாகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் பவானந்தன் (ஜேர்மனி), குணலிங்கம் (C.E.B), ஸ்ரீஸ்கந்தராஜா, சுந்தரவடிவு காலஞ்சென்ற ஜனனி ஆகியோரின் அன்பு மாமியும் பிரகாஷ் (லண்டன்), அபிராம், துஷாந்தி, விஷ்வினி, சிவஸ்துதி, காவியா, தர்சி, நிவேதித்தன் ஆகியோரின் பேர்த்தியும் நிரேஷ், மானேஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.12.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அச்சுவேலி தெற்கு முழக்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 43893) VP1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி...

ஜனாதிபதி அநுர தலைமையிலான குழுவினர் தமது இந்தியப் பயணத்தின் போது, இந்தியப் பிரதமர் மோடி, இந்தியாவின் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உள்ளிட்ட உயர்மட்ட தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளனர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, இலங்கையின் கடற்பரப்பில் தொடர்ச்சியாக அத்துமீறி இடம்பெறும் தமிழக மீனவர்களின் மீன்பிடி நடவடிக்கை என்பன தொடர்பில் இருநாட்டுத் தலைவர்களுக்கும் இடையில் முக்கிய மான கலந்துரையாடல் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையில், புதிய அரசமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஈடுபட்டுவரும் நிலையில், அது தொடர்பிலும் தமது தரப்புத் தெளிவுபடுத்தலை ஜனாதிபதி அநுர வழங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், இலங்கைக்கு முதலீடுகளைப் பெறும் நோக்கில் புதுடெல்லியில் நடைபெறும் வர்த்தக மாநாட்டிலும் ஜனாதிபதி பங்கேற்கவுள்ளார் என்றும், புத்த கயாவுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (அ-ம-44)

## தமிழரசின்...

இதையடுத்து, 'மாவை சேனாதிராஜா வருகைதராமல் கூட்டத்தை ஆரம்பிக்கவேண்டாம்' என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவமோகன் தெரிவித்திருந்தார். இதற்கு, நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கடும் கண்டனம் தெரிவித்ததுடன், "மாவை சேனாதிராஜா வரும் வரைக்கும் காத்திருக்க முடியாது. உடனடியாக கூட்டத்தை ஆரம்பிக்கவேண்டும்" என்று கூறினார். இதையடுத்து கூட்டத்தில் குழப்பநிலை ஏற்பட்டது.

மாவை சேனாதிராஜா ஏற்கனவே பதவி விலகல் கடிதத்தை அனுப்பியுள்ளதுடன், பின்னர் அதைத் திரும்பப் பெற்றிருந்தார். எனவே, அவரின் பதவி விலகல் கடிதத்தை ஏற்று, புதிய தலைவரைத் தெரிவுசெய்ய வேண்டும் என்று சிலர் வலியுறுத்தினார்கள். மாவை சேனாதிராஜா தனது பதவி விலகல் கடிதத்தைத் திரும்பப் பெற்றுள்ளதால் அவரே தலைமைப் பதவியில் தொடர வேண்டும் என்று சிலர் வலியுறுத்தினார்கள்.

கூட்டத்தில் கணிசமான நேரம் மாவையின் தலைமைப் பதவி தொடர்பிலேயே கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன. இதையடுத்து, இந்த விடயத்தை வாக்கெடுப்பு க்கு விடும்படி மாவையின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டவர்கள் வலியுறுத்தினார்கள். இறுதியில் இந்த விடயத்தை வாக்கெடுப்பில் தீர்மானிப்பது என்றும், இதற்காக டிசெம்பர் 28 ஆம் திகதி மத்தியகுழுக் கூட்டத்தைக் கூட்டுவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ-ம-110)

## மன்னாருக்கு...

மன்னார் மறைமாவட்டத்துக்குப் புதிய ஆயராக அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகளார், கத்தோலிக்க திருச்சபையின் உயர் பீடமான வத்திக்கானால் பெயரிடப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் நியமனக் கடிதம் நேற்று மாலை மன்னார் பங்குச் சபைகளில் வாசிக்கப்பட்டது. தற்போது ஆயராகப் பணியாற்றும் கலாநிதி இம்மனுவல் பெர்னாண்டோ ஆண்டகை பணி ஓய்வு பெறவுள்ளதைத் தொடர்ந்தே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. அவருக்கான அருட்பொழிவு ஜனவரியில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், திகதி விவரங்கள் இறுதிப்படுத்தப் படவில்லை. (அ-ம-இ)

## பொலிஸாரின்...

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் பெருமளவான பொதுமக்களும் நேற்றுக் கலந்துகொண்டனர். இதன் போது, போராட்டத்தைக் கைவிடுமாறு கோரி பொதுமக்களுடன் பொலிஸார் நேற்று வாக்குவாதத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து பெரும்தள்ளுமுள்ளு ஏற்பட்டு போராட்டம் பதற்றத்தில் முடிந்துள்ளது.

நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து பொலிஸாரின் அடாவடித்தனத்தைக் கண்டித்ததுடன், போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுத்தனர். (அ-ம-27)

**தொடர்புடைய செய்தி பக்: 02**

## தமிழ்க்...

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் இணைந்து பயணிக்கிறார்களா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் எங்களைப் பொறுத்தவரைக்கும் எங்களுடைய மத்திய குழு மற்றும் அரசியல் குழுவிலே கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்பாக சேர்ந்து செயற்படுதல், இணைந்து பயணிப்பது தொடர்பான விடயங்கள் தொடர்பில் பேசப்படும். நாங்கள் யாரையும் வெளியில் விடவில்லை. இப்போதும் ஒற்றுமையாகவும், பலமாகவும் செயற்படுவதற்கான கோரிக்கைகளையே முன்வைக்கின்றோம்.

தேர்தலுக்கு முன்னரும் பகிரங்கமாக கோரிக்கையை முன்வைத்தவர்கள் எங்களுடைய கட்சியினர் தான். நாடாளுமன்றத் தேர்தல் இடம்பெறுகின்ற போது எல்லா மேடைகளிலும் அதனைத் தெளிவாகக் கூறியிருக்கிறேன். எங்களுடைய கட்சியைப் பலப்படுத்துவதற்கும் கூட்டமைப்பை உருவாக்கி மக்களிடம் கொண்டு செல்வதற்குமான ஆணையைத் தாருங்கள் என்று கேட்டிருந்தேன். அந்த ஆணையை மக்கள் தந்திருக்கிறார்கள். எனினும் தனி மனிதனாக நான் அதனைச் செய்யமுடியாது. மத்தியகுழு மற்றும் அரசியல் குழுவின் கூட்டு முடிவின் பிரகாரம் அந்த ஒற்றுமைக்கான பயணத்தை மேற்கொள்வோம் - என்றார். (அ-ம-110-18)

## பிரிந்து...

கடந்த பொதுத்தேர்தலில் தமிழரசுக் கட்சியை விட்டுப் பிரிந்து சென்றோர் தொடர்பில், தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஞா.ஸ்ரீநேசன் மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணியும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவரும் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் தெரிவித்ததாவது:-

கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களை நீக்கவேண்டும் என்பது தொடர்பில் இன்று பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தக் கருத்து ஒருமித்த கருத்தாக அமைந்தது என்று குறிப்பிட்டுக் கொள்ள முடியாது. மாற்றுக் கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன. ஏனென்றால், கட்சிக்குள் எடுக்கப்பட்ட தன்னிச்சையான முடிவுகளால் ஏற்பட்ட அதிருப்தியால் வெளியேறியவர்கள் இருக்கின்றனர். தொடர்ச்சியான புறக்கணிப்புக் காரணமாக கட்சியை விட்டு நீங்கிச் செல்வதாகப் பலர் குறிப்பிட்டிருக்கின்றனர். எனவே, கட்சியில் இருந்து அதிருப்தி காரணமாக வெளியேறிச் சென்றவர்கள் என்ன காரணத்துக்காக வெளியேறினார்கள் என்றும் ஆராய வேண்டியிருக்கின்றது. எனவே, இதற்காக குழுவொன்றை அமைத்து ஆராய வேண்டும். இது தொடர்பிலும் கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது - என்றார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்ததாவது:-

கட்சிக்கு எதிராக வேறு கட்சிகளோடும் சுயேச்சைக் குழுக்களோடும் போட்டியிட்டவர்களை கட்சியில் இருந்து உடனடியாக நீக்குவதற்கு செயலாளருக்கு அதிகாரம் இருக்கிறது. அதனை இன்றைய கூட்டம் ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, செயலாளர் அடுத்தடுத்த நாள்களில் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பார். கட்சி எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்றும், கட்சிக்கான வாக்குகளில் சரிவை ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் நடந்துகொண்டனர். எனவே, அவ்வாறானவர்களை உடனடியாக நீக்குவதற்கு இன்று தீர்மானித்திருக்கின்றோம். கட்சிக்கும் கட்சியின் வேட்பாளர்களுக்கும் எதிராகப் பரப்புரை செய்தவர்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (அ-ம-18-110)

## எலிக்காய்ச்சலை...

ஒருவித பதற்றநிலை அங்கு ஏற்பட்டிருந்தது. இதையடுத்தே, மருத்துவ மாணவர்கள் தன்னார்வ அடிப்படையில் வடமராட்சியில் பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கையிலும், சிறப்புச் செயற்றிட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன், சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையூடாக மருந்துகள் வழங்கும் செயற்பாடுகளும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

தொடர்ச்சியான தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கைகளைத் தொடர்ந்து, தற்போது எலிக்காய்ச்சல் ஓரளவு கட்டுக்குள் வந்துள்ளது. நேற்று 5 தொடக்கம் 8 பேர் வரையிலானவர்களே மர்மக் காய்ச்சலுக்கான அறிகுறிகளுடன் சிகிச்சைக்கு வந்துள்ளனர் என்று சுகாதாரத் துறை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (அ-ம-26)

## புதிய...

பதிலாக நாளைமறுதினம் புதிய சபாநாயகர் நியமிக்கப்படவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் கூடும்போது முதல் நடவடிக்கையாக சபாநாயகர் தெரிவு இடம்பெறவேண்டும். ஆதலால், தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிஹால் கலப்பத்தி, லக்ஷ்மன் நிபுணஆராச்சி ஆகிய இருவரில் ஒருவர் சபாநாயகர் பதவிக்கு முன்மொழியப்படக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதி சபாநாயகர் கலாநிதி ரிஸ்வி சாலியின் பெயரும் சபாநாயகர் தெரிவில் பரிசீலிக்கப்படக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் பிறிதொரு தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம-44)

**சாரதி தேவை**
கோண்டாவிலில் இயங்கும் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு பார ஊர்தி அனுமதிப்பத்திரமுள்ள சாரதி தேவை
தொடர்புகளுக்கு:
Ravi-: 077 200 9196

**காணி விற்பனைக்கு**
நவகிரி புத்தூர் எனும் இடத்தில் 25 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது. (செம்மண் தோட்டக்காணி).
தரகர் தேவையில்லை
தொடர்பு: 076 537 4035

**காணி விற்பனைக்கு உண்டு**
மானிப்பாய் நாச்சிமார் கோயில் வீதியில் சிறிய வீட்டுடன் கூடிய 10 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
(தரகர் தேவையில்லை)
தொடர்பு: 075 775 2100

**வீடுகள் வாடகைக்கு உண்டு**
இரண்டு வீடுகள் யாழ். கச்சேரிக்கு அண்மையில் 4 அறைகளுடன் மற்றும் இரண்டு வீடுகள் நல்லூர் கோவிலுக்கு அண்மையில் 4 அறைகளுடன் வாடகைக்கு உண்டு.
077 306 8993

**வேலை வாய்ப்பு**
யாழ்நகரில் உள்ள பிரபல
கவறிங் நகைகள்
விற்பனை நிலையத்திற்கு உதவியாளர்கள் தேவை.
தொடர்பு: 077 351 5980
077 563 2734

**வீடு வாடகைக்கு தேவை**
மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு யாழ்ப்பாணம், சுண்டுக்குழி, கச்சேரி, புங்கன்குளம் பகுதிகளில் சகல வதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத்தேவை.
தொடர்பு: 076 660 6970

**வீடு வாடகைக்கு தேவை**
பிறவுண் வீதி, பலாலி வீதி, திருநெல்வேலி, நல்லூர் ஆகிய இடங்களில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 077 770 8125

**வேலையாட்கள் தேவை**
தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் முகாமையாளர் தேவை.
சம்பளம் :- 60,000/-
Location :-
S.A.W & Sons, Hambantota
Contact : 077 480 3379

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் உயர் கல்வி பட்டம் பெற ஓர் அரிய வாய்ப்பு

ACHS

O/L and A/L பயின்ற மாணவர்களுக்கு

**Study In INDIA கல்வியாண்டு 2024/25**

FLY TO YOUR DREAM DESTINATION

- இலங்கை மாணவர்களுக்கு சிறப்பு கட்டணத்துடன் உயர் கல்வியினை தொடரலாம்.
- விசேட புலமை பரிசிலின் கீழ் மூன்றாம் தொகுதி மாணவர்களாக நீங்களும் உங்கள் உயர்கல்வி கனவினை நிறைவேற்றிக் கொள்ளுங்கள்.
- முன் பதிவுகளை மேற்கொள்ளும் முதல் 100 மாணவர்களுக்கு விசேட கட்டண சலுகை வழங்கப்படும்.
- பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளபவர்களுக்கு இந்திய உயர்கல்வி நிறுவனத்தின் தலைமை அதிகாரியின் ஊடாக அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

உங்களுடைய பதிவுகள் மற்றும் அனுமதியை உறுதிப்படுத்திக் கொள்ள

0777 30 82 80

தொடர்பு கொள்ளவும்.

Connect with us to



## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல கல்வி நிறுவனத்திற்கு உயர்தரம் படித்த கணினி அறிவு உள்ளோர் தேவை. ஆண்/ பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளலாம். அத்துடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் தேவை.

தொடர்பு:- **074 056 7791**

(CS/43860) J-1

## தேவை

யாழ். அல்லைப்பிட்டியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சுற்றுலா பயணிகள் விடுதிக்கு தோட்ட பராமரிப்பு வேலைக்கு ஆள்தேவை.

தொடர்பு:- **074 056 7791**

(CS/56870) J-1

## விற்பனைக்கு

Original ரஷ்யா Shih Tzu வகையைச் சேர்ந்த 8 மாத ஆண் நாய்க்குட்டியும் 5 மாத பெண் நாய்க்குட்டியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

**077 900 4515, 077 910 7153**

(CS/56831) P-1

## வீடு வாடகைக்குத் தேவை

வட்டுக்கோட்டை, சங்கானை, சித்தங்கேணி, மானிப்பாய் ஆகிய பகுதிகளில் வீடு ஒன்று வாடகைக்கு தேவை. (தனி வீடு விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு:

**077 245 7758, 077 659 3812**

(CS/56833) P-1

## வேலையாள் தேவை

பருத்தித்துறை புலோலி மேற்குப் பகுதியில் வசிக்கும் வயதான பெண்மணியை வீட்டில் தங்கியிருந்து கவனிப்புடன் சமையல் வேலைகளிலும், வீட்டு வேலைகளிலும் உதவ ஒரு பெண் உதவியாளர் தேவை. நேர்மையானவராகவும் வேலைகளை நேர்த்தியாகச் செய்யக்கூடியவராகவும் இருக்க வேண்டும். 45 - 55 வயதிற்குள் குடும்பப் பொறுப்பு அதிகமில்லாதோர் விரும்பத்தக்கது.

**077 301 7914, 077 792 1890**

(CS/56883) J-1

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 42 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. A9 வீதி முகப்புடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்.

- பார்வையிடும் நேரம் காலை 6.00 - மாலை 6.00
- தரகர் தேவையில்லை
- 20 அடி பாதையுடன்
- 1 பரப்பின் விலை 24 லட்சம் ரூபா

தொடர்புகளுக்கு: **076 298 1105, 076 017 1105**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி நெய்தல் நகருக்கு அருகாமையில் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

### நிலப்பரப்பு

- 20 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- 2 ஆண்டுகள் பூர்த்தியான தென்னங்கன்றுகள் உள்ளன.
- 2 பரப்புள்ள துண்டு ஒன்றுக்குள் 6 தொடக்கம் 10 வரையான தென்னங்கன்றுகள் உள்ளன.
- நல்ல தண்ணீர் ஊற்று சூழல்.
- அனைத்து விதமான தேவைகளுக்கும் உகந்த இடம்.

### ஒரு பரப்பின் விலை

- நெய்தல் நகர் பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- கடற்கரையை (**Beach**) முகப்பாக கொண்ட காணித்துண்டுகள் 10 இலட்சம் ரூபாயும்
- 20 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் அனைத்தும் **9,75000** ரூபாய் மட்டுமே
- தரகர் தேவையில்லை
- பார்வையிடும் நேரம்: - காலை 6.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணிவரை

தொடர்பு: **ஜெயம்**

**077 814 7389**

**077 986 5457**

(cs.11944) (N-1)

## கசிப்புடன் ஒருவர் கைது!

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் கட்டைக்காடு பகுதியில் கசிப்புக் காய்ச்சிய ஒருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தே கநபரிடமிருந்து 27 லீற்றர் கசிப்பு, 120 லீற்றர் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்கள் என்பவற்றை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-22,113)

## வீடு வாடகைக்கு உண்டு

வேலணை வங்களாவடி மத்திய கல்லூரிக்கு அருகில் வீடு வாடகைக்கு உண்டு

**076 004 7928**

## சாரதி தேவை

சாவகச்சேரிப்பகுதியில இயங்கும் கட்டட நிறுவனத்திற்கு கடமையாற்ற பாரஊர்தி அனுமதிப்பத்திரமுள்ள சாரதி தேவை. சாவகச்சேரியை அண்மித்தவர்களும், பொருட்கள் ஏற்றி, இறக்கக்கூடியவர்களும் விரும்பத்தக்கது.

**077 958 7176**

(CS/2024 B) J-1

## வடக்கில் PickMe Taxi

நீங்கள் வைத்திருக்கும் **முச்சக்கரவண்டி, மோட்டார் சைக்கிள், Car, Van, Lorry** அனைத்தையும் **PickMe Taxi** சேவையில் இணைத்து 100,000/- க்கும் அதிக வருமானம் பெறலாம்.

**077 473 7737, 076 944 7737**

(CS/56792) J-1

## காணி தேவை

யாழ் மாவட்டத்தில் யாழ் மாநகர சபைக்குட்பட்ட, கோப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட, வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் 10 பரப்பிற்கு மேற்பட்ட காணி தேவை. காணி உரிமையாளர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- குரு- **077 468 3354**

(CS/56919) J-1

## வார்த்தையாகிய கடவுள் உங்களை ஆசீர்வதிக்கிறார்

உங்கள் PHONES மற்றும் கணினி சாதனங்களில் BIBLE ஐ **Install** செய்து வாசியுங்கள். தேவாலயத்திற்கு சென்று வழிபடுங்கள். தேவாலயத்தில் சிரமதானம் செய்யுங்கள்.

மா.சே.சுதர்சன்

**077 725 1296**

(CS/56880) J-1

## பணிப்பெண் தேவை

யாழ். பிறவுண் வீதியிலுள்ள வீடு ஒன்றிற்கு பணிப்பெண் தேவை. வேலை நேரம் காலை - 6.30 - 2.30 வரை, மாலை - 2.30 - 8.30 வரை ஒரு வேலை நேரத்திற்கான சம்பளம் (மாதம்) 45000/- 50 வயதிற்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு:- **0777 111 999**

## காணி விற்பனைக்கு

**மணியகாரர் லேன், கொக்குவில் கிழக்கில் 3 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (தரகர் தவிர்க்கவும்)**

தொடர்பு:- **076 067 6227**

(CS/56902) J-1

## தவறவிடப்பட்டுள்ளன

தங்கராசா தினேஸ்குமார் என்பவருடைய சாரதி அனுமதிப் பத்திரம் யாழ்ப்பாணம் - கிளிநொச்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் உள்ள தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்புகொள்ளவும்.

**077 220 0646**

(CS/2033) N-1

## வேலையாட்கள் தேவை

கொடிகாமம் பகுதியில் அமைந்துள்ள போத்தலில் கள் அடைக்கும் தொழிற்சாலைக்கு வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண் / பெண். போத்தல் கழுவுதல், லேபிள் ஒட்டுதல், பெட்டிக்குள் அடைத்தல் போன்ற வேலைகள்.

சம்பளம் - 1500/= மதிய உணவு வழங்கப்படும்.

தொலைபேசி இலக்கம்: **077 7608 528**
**074 0263 150**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 47 வயதுடைய Import and export Business செய்யும் மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 993 6605**

(CS/56916) N-1

## காணி விற்பனைக்கு

இணுவில் Hospital க்கு முன்பாக காங்கேசன்துறை வீதியில் 10 அடி பாதையை முகப்பாகக்கொண்ட 1.50 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- **077 313 8474**

## காணி வீடு விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் 3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (தரகர் தொடர்புகொள்ள வேண்டாம்.)

தொடர்புக்கு:- **077 614 6434**

(CS/56903) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 – விளம்பரம் : 021-493 1111 ஈமெயில் : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.12. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

துகளர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

— நாலடியார்

மலை : 34 வள்ளுவர் ஆண்டு : 2055 கார்த்திகை 30 ஞாயிற்றுக்கிழமை (15.12.2024) சிகரம் :232

# "கைநீட்டிக் கேக்கிறம் கண் திறவுங்கோ..."

தர்ஷன் இராசரத்தினம்

கடந்த மாத இறுதியில் வடக்கில் ஏற்பட்ட பெருமழை காரணமாக மக்கள் பல்வேறு விதமான இடர்களை எதிர்கொண்டிருந்தனர். அப்படி ஒரு வித்தியாசமான இடரை எதிர்கொண்ட அந்தோனிப்பிள்ளை கெவின்சன் எதிர்நோக்கிய நெருக்கடி என்ன, அதிலிருந்து எப்படி மீண்டார் என்பது பற்றி அவரே இங்கு விவரிக்கிறார்.




நான் என்ர மனைவி மற்றும் இரண்டு குழந்தைகள் நெடுந்தீவு பற்றிமா கோவில் ஓடக்கரை வீதியில வாழ்ந்து வருகிறம். முதல் நான் கடற்றொழில் செய்துவந்தனான். பிறகு தொழிலை நிப்பாட்டி வள்ளத்தை மேலை ஏத்திற்றன். பிறகு வெள்ளிரும்பு வேலைகளை ஆரம்பிச்சன். காஸ் சிலிண்டர்களுக்கு ஒட்டு வேலைகள் பாக்கிறதும் என்னுடைய வேலையா இருந்திச்சு. வாழ்க்கை என்ர குடும்பத்தோட நல்ல சந்தோசமா போய்க்கொண்டிருந்தது. அப்ப 25 ஆம் திகதி காலமை ஒரு 9 மணி போல அறிவித்தல் கிடச்சிது "கடலுக்குப் பக்கத்தில இருக்கிறவை கொஞ்சம் தள்ளிப்போய் உள்பக்கமாக இருங்கோ"எண்டு. எங்கட பக்கத்துக் கடலும் கொந்தளிப்பா இருந்திச்சு. உடன என்ர மனிசி பிள்ளையளக் கூட்டிற்றுப் போய் அம்மா வீட்ட விடவேணும் எண்டு வெளிக்கிட்டன். இருந்தாலும் என்ர வேலைச்சாமான்களை எடுத்துக் கவனமா வைக்கவேணும். காஸ்சிலிண்டர்களை இறக்கி வேற இடத்தை வைக்கப்போனான். திடீரெண்டு ஒரு சிலிண்டர் வழுக்கிவந்து என்ர காலில விழுந்திட்டு. "என்னாலை வேதினை தாங்க முடியேல" இருந்தும் மனிசி பிள்ளைகளை அம்மா வீட்டை விட்டுட்டு ஆஸ்பத்திரிக்கு என்ர நண்பன் ஒருத்தன்ர மோட்டச் சைக்கிள்ல போனன்.

11 மணி அப்பிடி ஆஸ்பத்திரியில துண்டு போட்டு டொக்டர் பாத்தோன கட்டில்ல படுக்கவிட்டுட்டினம். நேவியின்ர அம்புலன்ஸிற்கு கோல் பண்ணினா "காத்துச் சீரில்லை, கடல் கொந்தளிப்பு போகேலா" எண்டு சொல்லிச்சினம். நல்ல மனிசர் அமைவது வரம் எண்டுவினம். அப்பத்தான் அதைப்போல நெடுந்தீவு ஆஸ்பத்திரி டொக்டர் "தைரியமா இருங்கோ உங்களுக்கு நோகாம இருக்கக் குழுசை தாறன், கெதியா நேவியைப் பிடிச்சு உங்களை அனுப்பப்பாக்கிறன். இரண்டு மூண்டு பேர் வந்தா இன்னும் விரைவில ஹெலியிலகூட அனுப்பேலும்" எண்டு சென்னார்.

டொக்டர் தந்த மருந்தாலையும் அவற்ற தைரியமான வசனத்தாலையும் அண்டு 3மணி அப்பிடி கால்வலி கொஞ்சம் குறைஞ்சிட்டு. மனிசி வீட்டை இருந்து சாப்பாடு கொண்டுவந்து தந்தா. இருந்தாலும் ஆஸ்பத்திரிக்காரர் தேத்தண்ணி சாப்பாடு எண்டு நல்லாக் கவனிச்சவை. 26 ஆம் திகதி காலமை நேவியின்ர அம்புலன்ஸில ஏத்துறதெண்டு சொன்னவை. ஆனால் காத்தும் மழையும் விடேல்ல. 27 காலமை விடிஞ்சுது. ஆஸ்பத்திரிக்கு வழுக்கிவிழுந்து நாரி முறிஞ்சது எண்டு ஓர் அம்மாவைக் கொண்டந்தவை. அந்த அம்மாவுக்கும் சரியான வேதனை. மருந்துகள் குடுத்திச்சினம். கொஞ்சத்தால ஆஸ்பத்திரியில ஒரு கிழமையாக் காய்ச்சல் வந்திருந்த இன்னும் ஒரு அண்ணைக்கு நடுங்க வெளிக்கிட்டுது. அவரின்ர இரத்தம் சோதிக்கவேணும் எண்டு கொஞ்சம் கடுமையான கட்டத்தில ஆஸ்பத்திரி நிர்வாகம் நிண்டதப் பாத்தன்.

டொக்டர் தன்ர வேலையைத் தவறவிடாம செய்யவேண்டிய கடமைகளைச் செய்தார். அறிவிக்கவேண்டிய இடங்களுக்கு அறிவிச்சுக்கொண்டிருந்தார். திடீரெண்டு "27ஆம் திகதி இரவு ஹெலி வரும் தயாரா இருங்கோ, உங்களுக்குக் கால் ஏலாது துணைக்கு யாரையும் கூட்டிக்கொண்டு போங்கோ"எண்டார் டொக்டர். நான் என்ர அக்கான்ர மகனைத் துணைக்குக் கூப்பிட்டு வச்சிருந்தன். 28 ஆம் திகதி காலமை நித்திரையால எழும்பேக்கதான் "இரவு ஹெலி நெடுந்தீவை நோக்கி வந்தது. வந்த ஹெலி இறங்கிற இடத்தை அடையாளம் காணமுடியாம திரும்பிப் போட்டுது. இண்டைக்கு எப்பிடியும் வரும்"எண்டார் டொக்டர். நானும் இண்டைக்குப் போகப்போறன் எண்டு ஒரு மன ஆறுதலோட இருந்தன். 2 மணி அப்பிடி ஹெலி நெடுந்தீவு மகா வித்தியாலயக் கிறவுண்டில இறங்கும் எண்டு சொல்லிச்சினம். என்னையும் காய்ச்சல் வந்த அந்த அண்ணையையும் அம்புலன்ஸில ஏத்தி முதலாவதாக் கொண்டுபோன பிறகுதான் அந்த அம்மாவை திருப்பிவந்து ஏத்தப் போயினம் எண்டு சொல்லிச்சினம். சரி எண்டு அம்புலன்ஸ் போய்கொண்டிருக்கேக்க பள்ளிக்கூட கிறவுண்டுக்கு கொஞ்சம் தள்ளி அம்புலன்ஸ் சேத்துக்குள்ள புதஞ்சிட்டுது. பிறகு அங்கயிருந்து எங்களை ஒரு மாதிரி ஹெலியில கொண்டுபோய் ஏத்தினவயள்.



2 மணிக்கு வெளிக்கிட்டு ஒரு 20 நிமிசத்தில பலாலிக்கு போயிற்றம். அங்க நிண்ட அம்புலன்ஸில ஏத்தி 28 ஆம் திகதி ஒரு 3.30 மணி அப்பிடி யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில 24ஆம் வோட்டில அட்மிற் பண்ணியாச்சு. பிறகு அந்தண்டு இரவே என்ர காலுக்கு பிஓபி போட்டாச்சு. ஹெலியில போனதால தப்பிட்டன். இல்லாட்டிக்கு என்னவும் நடந்திருக்கலாம்.

இந்த நேரத்தில நான் சில விசயங்களை சொல்லவேணும். நெடுந்தீவு டொக்டரின்ர மனைவிக்கு இப்பதான் குழந்தை கிடைச்சு ஒரு கிழமை. இருந்தாலும் பொறுமையோட தன்ர கடமைய ஒழுங்காச் செய்தார். நெடுந்தீவு எங்கட மண். ஏதும் ஒரு ஆத்திரம் அவசரம் எண்டா இந்த நெடுந்தீவு ஆஸ்பத்திரியில இவ்வளவு சனத்துக்காக வசதியள அரசாங்கம் கூட்டுமோ தெரியேல்ல. அப்பிடிக் கூட்டுங்கோ எண்டு நாங்களும் கேக்க முடியுமோ தெரியேல்ல.

ஆனால், ஒரு சாதாரண மனுசனாக் கேக்கிறது "எங்கட போக்குவரத்து வசதிகளை காத்தோ மழையோ ஏதோ ஒரு வழியில முன்னெடுக்கிற மாதிரி ஒரு பொறிமுறையை உருவாக்குங்கோ. அனர்த்தம் போன மாசத்தோட நிக்காது. அது இனியும் வரலாம். அந்த நேரத்தில கால் முறிவைவிட வேற ஏதும் நோய்ப்பாதிப்பு எண்டு வந்தா நாங்கள் என்ன செய்யிறது. ஆக இதைக் கவனத்திலகொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நல்ல விசயங்களைச் செய்யவேணும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்



# தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பார்த்துச் சிரிக்கும் ஒரு காலம்

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது கிளிநொச்சி தொண்டமான் நகரில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் வரிசையில் நின்ற ஒருவர் தனக்கு முன்னால் நின்ற இளைஞரிடம் கேட்டிருக்கிறார் "யாருக்கு வாக்களிக்கப் போகிறாய்?" "ஊசிக்குத்தான்" என்று இளைஞர் பதில் சொல்லியுள்ளார். "ஊசிக்கா?" இவர் திரும்பக் கேட்க, "ஓம் ஊசி வென்றால்தானே காமெடி பார்க்கலாம்" என்று அவர் சிரித்துக் கொண்டு பதில் சொல்லியுள்ளார்.

உண்மை. அர்ச்சுனா சிரிக்க வைக்கிறார். கடந்த வாரம் யாழ். போதனா மருத்துவமனைக்குள் நுழைந்து, பணிப்பாளரோடு அவர் வாக்குவாதப்பட்டார். கடந்த வெள்ளிக்கிழமை நடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் ஒரு சபை குழப்பி போல நடந்துகொண்டார். இவற்றைப் பார்த்துச் சிரிக்கும் ஒவ்வொரு தமிழரும் அர்ச்சுனாவை மட்டும் பார்த்துச் சிரிக்கவில்லை. தங்களைத் தாங்களே பார்த்துச் சிரிக்கிறார்கள் என்பதுதான் உண்மை. ஏனென்றால் அவருக்கு வாக்களித்தது தமிழ் மக்கள் தான்.

தமிழரசியல்,குறிப்பாக ஆயுதப் போராட்ட அரசியல் அதிகம் சீரியஸானது. ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான கடந்த 15 ஆண்டு கால அரசியலிலும் சீரியஸ் அதிகம். கலகலப்பு, பம்பல்,சிரிப்பு குறைவு. கடந்த 15 ஆண்டுகளாக அவ்வாறு அரசியலை சிரிக்கும் விடயமாக மாற்றும் கார்ட்டூனிஸ்டுகள் குறைந்த ஒரு தமிழ்த் தேசியப் பரப்பில் அர்ச்சுனா ஒரு "கார்ட்டூன் கரெக்ராக", "கரிக்கேச்சராக" (caricature) அதாவது கேலிச்சித்திரமாக மேலெழுந்துள்ளார். அவர் எல்லாவற்றையுமே கரிக்கேச்சர் ஆக்கி விடுகிறார்,தன்னையும் சேர்த்து.

அவர் மருத்துவ நிர்வாகத் துறைக்குள் வேலை செய்தவர். ஒரு போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மீது குற்றச்சாட்டுகளை வைப்பதென்றால், அதை எப்படிச் செய்யவேண்டும் என்ற ஒழுங்குமுறை தெரியாதவராக இருக்கமுடியாது. அதை அவர் மாகாண நிர்வாகத்துக்கு ஊடாக அணுகியிருக்கலாம். அல்லது சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சுக்கூடாக அணுகியிருக்கலாம். இரண்டையும் அவர் செய்யவில்லை. நாடாளுமன்ற உறுப்பினராக தனக்கு மக்கள் அதிகாரம் கிடைத்திருப்பதாக அவர் கருதுகிறார். அது அதிகாரம் அல்ல. அது ஒரு பொறுப்பு. அந்தப் பொறுப்பை உணர்ந்து அவர் நடப்பதாகத் தெரியவில்லை. இதனால் அரச அதிகாரிகள் மீதும் திணைக்களங்களின் மீதும் அவர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அவற்றின் கனதியை இழக்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை அவர் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நடந்து கொண்ட விதம், அவருக்கும் மருத்துவர் சத்தியமூர்த்திக்கும் இடையிலான முரண்பாடு,அவருக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் போன்றவற்றைத் தொகுத்துப் பார்க்கும்போது, அவர்,யாருக்கும் பொறுப்புக்கூறத் தேவையில்லாத ஒருவராகத் தன்னை கருதுகிறாரா என்று கேள்வி எழுகிறது.

அர்ச்சுனாவை மோசமான வார்த்தைகளால் விமர்சிக்கும் சிங்கள அரசியல்வாதிகளும் சிங்கள,ஆங்கில ஊடகங்களும் அவருக்கு வாக்களித்த தமிழ் மக்களைத்தான் மறைமுகமாக விமர்சிக்கின்றன. தென்னிலங்கையிலும் மேர்வின் டி சில்வாக்கள் இருந்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சுயேச்சைகள் அல்ல. கட்சித் தலைமைக்குக் கீழ்ப்பட்டவர்கள். ஆனால் அர்ச்சுனா யாருக்கும் கட்டுப்படாத, யாரையும் பொருட்படுத்தாத ஒருவரா? மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் ஒன்றில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் எப்படிப் பொறுப்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதனை அவருக்கு யார் கற்றுக் கொடுப்பது? அல்லது அவர் யாரிடமிருந்தாவது கற்றுக்கொள்ளத் தயாரா? ஒன்றில் சபை நாகரீகம் தெரியவேண்டும். அல்லது வெட்கம், வாயடக்கம், அவையடக்கம் இருக்கவேண்டும். இவை எவையுமே இல்லாத ஒருவரை ஏன் தமிழ் மக்கள் தெரிந்தெடுத்தார்கள்? அல்லது அவரைப்போன்ற ஒருவரைத் தெரிந்தெடுக்கும் அளவுக்கு தமிழ்மக்களை நிர்ப்பந்தித்த காரணிகள் எவை?

தமிழரசியல்,குறிப்பாக ஆயுதப் போராட்ட அரசியல் அதிகம் சீரியஸானது. ஆயுதப் போராட்டத்திற்கு பின்னரான கடந்த 15 ஆண்டு கால அரசியலிலும் சீரியஸ் அதிகம். கலகலப்பு, பம்பல்,சிரிப்பு குறைவு. கடந்த 15 ஆண்டுகளாக அவ்வாறு அரசியலை சிரிக்கும் விடயமாக மாற்றும் கார்ட்டூனிஸ்டுகள் குறைந்த ஒரு தமிழ்த் தேசியப் பரப்பில் அர்ச்சுனா ஒரு "கார்ட்டூன் கரெக்ராக," கரிக்கேச்சராக (caricature) அதாவது கேலிச்சித்திரமாக மேலெழுந்துள்ளார். அவர் எல்லாவற்றையுமே கரிக்கேச்சர் ஆக்கிவிடுகிறார், தன்னையும் சேர்த்து.

அர்ச்சுனா தற்செயலாக மேலெழவில்லை. விபத்தாக மேலெழவில்லை. அவர் தெரிந்தெடுக்கப்படுவதற்கான அக - புற நிலைமைகளை உருவாக்கிய காரணிகள் உண்டு. தமிழ் அரசியல் சமூகம் அவற்றை ஆராயவேண்டும். தலைமைத்துவ வெற்றிடம்;தங்களுடைய சின்னச்சின்ன அன்றாடப் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுக்க யாராவது வேண்டும் என்று தமிழ் மக்களில் ஒரு பகுதியினர் சிந்தித்தமை; தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஐக்கியமின்மை, அதனால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சலிப்பும் வெறுப்பும்; தமிழ்த் தேசியக் கட்சிகள் மக்களுடைய அன்றாடப் பிரச்சினைகளைக் கவனிக்கத் தவறியமை ; சமூக வலைத்தளங்களால்,யூரியூப்களால் ஊதிப் பெருப்பிக்கப்படும் பிம்பங்கள்....போன்ற பல காரணங்களின் விளைவு அவர்.

அவருக்கு விழுந்த வாக்குகள் சுமந்திரன், கஜேந்திரகுமார் உட்பட முக்கியமான தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு விழுந்த வாக்குகளைவிட அதிகம். அவர் தன்னுடைய கலகத்தைத் தொடங்கியது சாவகச்சேரி ஆஸ்பத்திரியில். அந்த ஆஸ்பத்திரி வாசலில் இருந்து சிறிது தூரத்தில்தான் ரவிராஜின் சிலை உண்டு. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் சாவகச்சேரி மக்கள் ரவிராஜின் நினைவுகளை விடவும் அர்ச்சுனாவின் நேரலைகளுக்கு அதிகம் வாக்களித்திருக்கிறார்கள். ரவியின் சிலை கண்ணீர் விடுவதுபோல உங்களுக்கு தோன்றவில்லையா? என்று மனோகணேசன் என்னிடம் கேட்டார்.

அர்ச்சுனாவின் சுயேச்சைக் குழுவுக்கு வாக்களித்தது மொத்தம் 27,855 பேர். யாழ்ப்பாணத்தில் விழுந்த செல்லுபடியாகும் வாக்குகளின் தொகை மொத்தம் 358,079. இதில் 8.56 விகிதத்தினர் அவருக்கு வாக்களித்திருக்கிறார்கள். "அது ஒரு சிறிய தொகைதான். ஆனால் அந்தத் தொகை அடுத்தடுத்த தேர்தலில் பல மடங்காகப் பெருகும் ஆபத்தை எப்படித் தடுப்பது?" என்று மூத்த,ஊடகச் செயற்பாட்டாளரும் சமூகச் செயற்பாட்டாளருமாகிய நண்பர் ஒருவர் என்னிடம் கேட்டார். தேசமாகத் திரட்டப்படாத மக்கள் எதிர்காலத்திலும் அர்ச்சுனாக்களைத்தான் தெரிவுசெய்யப் போகிறார்கள் என்று நான் அவருக்குச் சொன்னேன்.

சமூக வலைத்தள ஊடகச் சூழலும், குறிப்பாக யூரியுப்பர்களும் அந்தச் சிறிய தொகையை பெரிய தொகையாக மாற்றுவதை எப்படித் தடுப்பது? யூரியூப்பர்களின் காலத்தில் தேசத்தைத் திரட்டுவதற்கான புதிய, படைப்புத்திறன் மிக்க உபாயங்களைத் தமிழ்த் தேசியவாதிகள் கண்டுபிடிக்க வேண்டும். ஜனாதிபதித் தேர்தலில்,தமிழ்ப் பொது வேட்பாளரை முன்நிறுத்தி,தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்ட முயன்ற தரப்புகளுக்கு எதிராக சில யூரியுப் வெறுப்பர்கள் (haters) தனிப்பட்ட தாக்குதல்களை நடத்தினார்கள்.

தமிழக எழுத்தாளர் தொ.பரமசிவன் வெறுப்பர்களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்... " இப்ப எழுதும் சிலரின் எழுத்தை வாசித்தால் வெறுப்புத்தான் முழுமையாய் வெளிப்படும். எதிர்ப்பை வெளிப்படுத்துவது தவறல்ல. வெறுப்பு என்பது இரு காரணங்களால் வெளிப்படுவது. ஒன்று இயலாமை; மற்றொன்று பொறாமை. இதற்கு மருந்தே கிடையாது".

தமிழ்த் தேசியப் பரப்பில் அவ்வாறு மருந்து கொடுத்துக் குணப்படுத்தமுடியாத வெறுப்பர்கள் தொகை அதிகரித்து வருகின்றது. கட்சிகளுக்குள்ளும் கட்சிகளுக்கு வெளியிலும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியிலும் வெறுப்பர்கள் பெருகி வருகிறார்கள்.

இவ்வாறு கட்சிகளாலும் ஊடகங்களாலும் வெறுப்பர்களாலும் சிதறடிக்கப்படும் ஒரு மக்கள் கூட்டத்தைத் திரட்டத் தவறிய தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளுக்கு கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் எப்படிப்பட்ட ஒரு தீர்ப்பை வழங்கினார்கள்? அது தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தமிழ் மக்கள் வழங்கிய ஒரு தண்டனை. அதேசமயம் அர்ச்சுனாவுக்கு தமிழ் மக்கள் வழங்கிய வெற்றியை எப்படிப் பார்ப்பது? அது தமிழ்மக்கள் தங்களுக்குத் தாங்களே வழங்கிய தண்டனையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துளி

விசும்பின் துளி விழின் அல்லால்...




*மூலம்: ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு அறிக்கை*

# புலமையாளர் பதில்

**கேள்வி:** யாழ்ப்பாணக் குடாநாட்டின் முக்கியமான பருவ கால ஆறான வழுக்கி ஆறு தொடர்பாகவும் அதன் முக்கியத்துவம் மற்றும் விவசாயப் பொருளாதாரத்தில் அதன் வகிபாகம் பற்றி விளக்கம் தர முடியுமா?

**(வனிதா, அராலி)**

**பதில்:** வழுக்கையாறு, வழுக்கியாறு எனும் பெயர்களுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டினை வடக்கில் இருந்து தெற்காக ஊடறுத்துச் செல்லும் இயற்கை நீரோடை அண்மைக் காலங்களில் ஒரு வடிகால் நீரேந்து திட்டமாக முகாமைத்துவம் செய்யப்படுகிறது. இதன் பாதையில் காணப்படுகின்ற குளங்களில் சில இணைக்கப்பட்ட குளங்களாகவும் மற்றையவை இடைநிலைக் குளங்களாகவும் உள்ளதனால் மேலதிக மழைநீர் வழிந்து யாழ்ப்பாணக் கடலேரியினுள் சென்ற பின்னரும் பெருமளவு நீர் இவ்வோடையில் தேக்கி வைக்கப்படுகின்றது.

வடக்கே அமைந்துள்ள உயர் புள்ளிகளில் ஒன்றான வறுத்தலைவிளான் கிராமத்தில் தெற்கு நோக்கிப் பயணிக்கும் இந் நீரோடை 16.3 கிலோமீற்றர் தூரத்தை வலிகாமம் பெருநிலப்பரப்பினூடாக கடந்து சென்று அராலியில் உள்ள பாலத்தில் கடல்நீரேரியுடன் இணைகிறது. போகும் வழியில் வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு மற்றும் வலிகாமம் மேற்கு ஆகிய பிரதேசங்களுடன் தொடர்புடைய 57 சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட நீரேந்து பிரதேசத்தை வடிகால் செய்கிறது.

1948 இல் வடிகால் திட்டமாகத் தொடங்கப்பட்ட வழுக்கையாற்றுத் திட்டம் 1980 களின் முற்பகுதிகளில் மாத்திரமே வெற்றிகரமாக இயங்கி வந்தது. அதன் பின் முறையான பராமரிப்பின்மை, உள்நாட்டு மோதல்கள் எனும் காரணங்களால் இத் திட்டம் பாழடைந்ததோடு, அடுத்தடுத்து ஏற்பட்ட பெருமளவிலான இடப்பெயர்வுகள் இத் திட்டம் சீரழியக் காரணமாயின.

பின்னர் 2008 ஆம் ஆண்டளவில் உலக வங்கியின் உதவியுடன் அராலிப்பாலம் மற்றும் அதனோடிணைந்த வாய்க்கால்கள் குளங்கள் என்பன புனரமைக்கப்பட்ட போதும் இன்று வறுத்தலைவிளான் குளம் முதல் தெல்லிப்பழை வைத்தியசாலை வரையான வாய்க்கால் தூர்ந்து போனதால் ஆற்றின் தற்போதைய நீளம் 13.63 கிலோமீற்றராகக் குறுகியுள்ளது. இருந்தபோதும் இதனுடன் இணைந்த வகையில் 8 கிளை வாய்க்கால்கள் காணப்படுகின்றன. மேலும் பிரதான வாய்க்காலில் 5 குளங்களும், கிளைவாய்க்கால்கள் மூலம் ஏறத்தாழ 54 இற்கு மேற்பட்ட குளங்களும் இணைக்கப்படுகின்றன.

இன்று வரை புனரமைக்கப்பட்ட வழுக்கையாறு திட்டத்தின் மூலம் நிலத்தடி நீரின் உவர்த்தன்மை, பயிர் விளைச்சலின் அளவு மற்றும் குளங்களின் மேற்பரப்பு நீரின் இருப்பு என்பவற்றில் குறிப்பிடத்தக்க அளவு மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அத்துடன் வலிகாமம் பிரதேசத்தில் கிணறுகளின் நீர் மட்டம் உயர்ந்திருந்த அதேவேளை நீரின் உவர்த்தன்மையும் கணிசமான அளவு குறைந்துள்ளது. இதன் மூலம் மானாவாரி நெற்செய்கைக்கு மேலதிகமாக பெரியளவில் சிறு தானியங்கள், காய்கறிகள், பழமரங்கள் என்பன பயிரிப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கு உறுதுணையாக அமைகின்றது. தற்போதைய நிலையில் வழுக்கையாற்றின் பிரதான வாய்க்காலும் அதனோடிணைந்த ஐந்து குளங்களும் அராலிப்பாலமும் (barrage) மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் முகாமை செய்யப்படுகின்றன. எஞ்சிய கிளை வாய்க்கால்களும் அவற்றோடிணைந்த குளங்கள் மற்றும் வாய்க்கால்கள் அனைத்தும் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் ஆளுகையின் கீழ் பராமரிக்கப்படுகின்றன. பெரு மழைகாலத்தில் நீர்ப்பாசனம் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களங்கள், விவசாய சம்மேளனங்கள் ஆகியன இணைந்து செயற்படுவதால் மேற்படி திட்டம் வெற்றிகரமாக நடைபெறுகிறது.



**K.சுஜீவன்,**
*நீர்ப்பாசனப் பொறியியலாளர்*
*(யாழ்ப்பாணம்)*

## கடந்த மாத அமர்வு:
# நீர்வள ஒதுக்கீடும் சமூக நீரியலும்

வடக்கின் இளம் நீர்வாண்மையாளர்கள் வட்டத்தின் கார்த்திகை மாதத்தின் அமர்வில் "சுற்றுச்சூழலுக்கென நீர் ஒதுக்கீடு செய்தலும் அதனால் நீரேந்துப் பிரதேச பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கமும்: பன்முகப்படுத்தப்பட்ட பொருளாதாரத்தின் வகிபாகம்" எனும் தலைப்புத் தொடர்பில் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸ் மாநில நீர்த்துறையில் பணியாற்றும் கலாநிதி மகேந்திரன் ரூபவண்ணன் பங்குபற்றியிருந்தார். அதே மாநிலத்தின் Murrumbidgee நதியின் வடி நிலத்தின் பின்னணியும் அதன் மேம்பாடு, வடி நிலத்தின் மாற்றத்தால் விவசாயத்துக்கென இருந்த நீர் ஒதுக்கீடு சுற்றுச்சூழலுக்காகப் பகிரப்பட்ட விதம், சுற்றுச்சூழலுக்கான நீர் ஒதுக்கீடு விவசாய வாழ்க்கை முறையில் ஏற்படுத்திய தாக்கம், நீர் முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றங்கள், பொருளாதாரம் மற்றும் சமூகத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கங்கள் தொடர்பாக விளக்கியிருந்தார்.

அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய ஆற்று வடி நிலமான மறே டார்லிங் ஆற்று வடி நிலத்தின் துணை ஆற்று வடி நிலமாக Murrumbidgee காணப்படுகிறது. இவ்வடி நிலப் பிரதேசம் ஆரம்பத்தில் அந்நாட்டில் பரந்த அளவில் விவசாயத்தை மேற்கொள்ளும் வகையில் கவனம் செலுத்தியது. ஐரோப்பிய குடியேற்றங்களைத் தொடர்ந்து படிப்படியாக மேற்கொள்ளப்பட்ட விவசாய உட்கட்டமைப்புகளின் வாயிலான நீர் ஒதுக்கீடு, நீர்ப்பாசன பிரதேசத்தினை விரிவாக்கம் செய்யப்பட்டது. நீர்ப்பாசனத்துக்கு அதிகமான நீர் பயன்படுத்தப்பட்டமையால், சுற்றுச்சூழலில் காணப்படும் நீரின் அளவு, தரம் என்பன வீழ்ச்சியடையத் தொடங்கின, இயற்கைச்சூழல்சார் சீரழிவுகளுக்கு வழிவகுத்தது. அச்சீரழிவு சமூக அக்கறைக்குத் துண்டுகோலாக அமைந்ததுடன் விவசாய நிலம், பசுமைசார் மன்றாடல்கள்/அணைவு நாடல்கள் நீர் மற்றும் விவசாயம் சார்ந்த விடயங்களில் அதீத கவனம் செலுத்தியது. நிலைபேறான மாற்றத்தினை நோக்கி சமூகத்தின் மனப்பாங்கைத் திருப்பியது. இத்தகைய தன்மை அரசாங்கத்தின் கொள்கை வகுப்புச்செயற்பாடுகளில் விவசாய உட்கட்டமைப்பு, பொருளாதார முன்னெடுப்புகளில் நீர் முகாமைத்துவம் சார் உணர்திறனைத் தூண்டியது. மேலும் ஒருங்கிணைந்த நீர்வளமுகாமைத்துவம் பற்றிய தெளிவுபடுத்தல்களை ஏற்படுத்துவதற்கு நீரியல், அதனுடன் தொடர்புடைய இயற்கை, சமூக முறைமைகள் ஆகியவற்றில் மனித செல்வாக்கின் வகிபாகத்தையும் அவர் விளக்கினார்.

நீரியல் துறையில் பல்வேறான சமூகக்கூறுகளை இணைத்து செயற்படுவது ஒருங்கிணைந்த பார்வையாக அமையும் எனவும் குறிப்பிட்டார். இது சமூக நீரியல் துறையின் தேவைப்பாட்டினைத் தோற்றிவித்தது. இத்துறையானது சமூக பொருளாதாரம், சூழல், தொழில்நுட்பம், மனித நடத்தை, அரசாங்க முறைமைகள் பற்றி பரந்த நோக்கில் ஆராய்வதற்கு உறுதுணையளிக்கின்றது. மேலும் நிலைபேறான நீர்வள முகாமைத்துவத்தின் பல்வேறான கூறுகளை கருத்திற்கொண்டும், அது தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வதன் ஊடாகவும் கொள்கை வகுப்புக்களை அறிமுகப்படுத்தி, அவற்றைபுரிந்து கொள்ளுதலின் ஊடாகவும் நிலைபேறான மாற்றத்திற்கு வழிவகுக்கலாம் என அவர் குறிப்பிட்டார்.

**எதிரெதிர்த் திசைகளிலே இழுபட்டுக்கொண்டிருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான சுற்றாடலுக்குமிடையே சமநிலையை உருவாக்க வேண்டுமாயின் சமூகத்தின் குரல் ஓங்கி ஒலிப்பதோடு மட்டுமல்லாது ஆக்கபூர்வமான கொள்கைகளும் அவசியமாகும்! முயன்றுதான் பார்ப்போமே!**

## அறைகூவல்!

**தலைப்பு:** **"Managing Aquifer Recharge: Challenges"**

**வழி நடத்துபவர்:** Geohydrologist
Dr. Yogesh Jadeja & others

**நேரம் : 7.30 பி.ப.**
**திகதி : 19.12.2024 (வியாழன்)**

Zoom அடையாளம்:
**656 7007 5479**

கடவுச்சொல் :**Shansh@123**

*எதிர்வரும் ஜனவரி மாதம் 19 ஆம் திகதி துளியின் 10 ஆவது இதழ் உங்கள் கைகளை நாடி வரும். வடமாகாணத்து நீர் வளம் சார்ந்து உங்கள் கருத்துகளையும் கேள்விகளையும் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி;* **Water Security through Participatory Action Research (WASPAR) Project, Centre for Digital Epidemeology, Faculty of Medicine, University of Jaffna;** *மின்னஞ்சல்:* **water@univ.jfn.ac.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அனார் 50

## சில குறிப்புகள்

தமிழின் முதன்மையான பெண் கவிஞர்களில் ஒருவர் அனார். இவர் கிழக்கிலங்கையின் சாய்ந்தமருதுவில் ஆதம்லெவ்வை அப்துல் ரஸ்ஸாக், ஷஹீது ஆமினா உம்மா இணையருக்கு 1974 இல் பிறந்தவர். அனாரின் இயற்பெயர் இஸ்ஸத் ரீஹானா முஹம்மட் அஸீம். இன்று (டிசெம்பர் 15) அவர் ஐம்பதாவது வயதைக் கொண்டாடுகிறார்.

1990களின் நடுப்பகுதியிலிருந்து 'அனார்' என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதினார். இவரது முதல் படைப்பான தலாக் எனும் கவிதை 1991 இல் வெளியானது. சிறுகதைகள், கட்டுரைகள், நூல் விமர்சனங்கள் எழுதிவருகிறார். இதமி எனும் வலைப்பூவில் இவரது ஆக்கங்களை வாசிக்கலாம். இவரது கவிதைத் தொகுப்புகளாக ஓவியம் வரையாத தூரிகை (2004), எனக்குக் கவிதை முகம்(2007), உடல் பச்சை வானம் (2009),பெருங்கடல் போடுகிறேன் (2013), பொடுபொடுத்த மழைத்தூத்தல் (2013), ஜின்னின் இரு தோகை (2017) என்பனவுள்ளன.

இதுவரை இளம் படைப்பாளி விருது (உலக இஸ்லாமிய இலக்கிய மாநாடு கொழும்பு-2002), இலங்கை அரச சாஹித்திய மண்டல விருது (2005), வட கிழக்கு மாகாண இலக்கிய விருது (2005), கம்பன் கழகத்தின் மகரந்தச் சிறகு விருது (கொழும்பு-2007), கனடா தமிழ் இலக்கியத் தோட்ட கவிதை இயல் விருது, ஸ்பாரோ இலக்கிய விருது (2015), ஆத்மாநாம் இலக்கிய விருது (2017),விஜய் தொலைக்காட்சியின் சிகரம் தொட்ட பெண்கள் விருது (2013) ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

# தமிழ் நிலத்துப் பாடினி

கிரிசாந்

அனார் தமிழ்க்கவிதைகளுக்கு இஸ்லாமியப் பண்பாட்டினது செழுமையான மரபின் ஆழத்தை அளித்தவர்களில் ஒருவர். தொண்ணூறுகளின் முதன்மை யான கவிஞர்களில் ஒருவரான 'அனார்' நீண்டதும் நெடியதுமான இலக்கியப் பயணத்தில் குன்றாத கலைத்தன்மையும் செயலூக்கமும் கொண்டு துலங்கி மிளிர்பவர். அனாரின் வருகை தமிழின் நெடுவரலாற்றில் வைத்து நோக்கப்படவேண்டியது. தொடக்கத்தில் அக்காலப் பெண் கவிஞர்களின் ஆவேசமான குரலே அனாரிடமும் வெளிப்பட்டது. சீற்றமும் ஆவேசமும் இளமையின் குணங்கள். பின்னர் ஒரு இளங்கொடி காற்றில் பற்றி சுவரில் ஏறித் தவிதவித்து தன்னை ஊன்றி முழுதாய் வளர்ந்து பெருகி மலர்களும் காயும் பிஞ்சுமாய் கனிவது போல அனாரது கவியுலகு தமிழ்மொழியில் நிலைத்தது. அவரது இலக்கியப் பங்களிப்பு பொன்னொன்று ஆபரணமாவதைப் போல இன்று மதிப்பு மிக்கதாகியிருக்கிறது.

அனாரின் முழுக்கவிதைகளையும் இன்று நோக்குமொருவர் அவரது உலகம் கொண்டிருக்கும் காட்சிகளின் வியப்பையும் சிறு சிறு உயிரினங்களும் மனிதர்களும் உணர்ச்சிப் பாவனைகளும் எவ்வளவு விரிவான அகவுலகையும் அதனூடு இனிமையான கனிவை அளிப்பதையும் காணலாம். தாய்மையின் கண்களால் 'அனார்' இப்புவியை நோக்குகிறார். அதில் ஒவ்வொரு மானுடரும் உயிர்களும் பரிவில் ததும்பி நிற்கின்றன.

தமிழ்ச்சமூகத்தில் பெண் எழுத்தாளர்கள் கலைத்தரத்துடன் நீண்டகாலம் இயங்குவதென்பது குடும்பச் சூழல்களாலும் சமூக நெருக்கடிகளாலும் இல்லாமல் போவதையே நாம் தொடர்ந்து காண்கிறோம். நாமறிந்த புகழ்பெற்ற பெண் எழுத்தாளர்கள் எத்தனை பேர் நினைவுக்கு வருகிறார்கள் என எண்ணிப்பாருங்கள். அரிதாகவே சில பெயர்கள் நினைவில் எழலாம். இந்தப் பின்னணியில் 'அனார்' போன்ற ஒரு முதன்மையான எழுத்தாளரை நாம் கவனப்படுத்தி உரையாடுவதும் அவரது கவிதைகளையும் இருப்பையும் உளம் விரியக் கொண்டாடுவதும் எங்கள் பெண் குழந்தைகளுக்கு எத்தனை தூரம் வாழ்வின் கலை உயரங்களை அடைய உந்து சக்தியாயிருக்கும் என எண்ணிப் பாருங்கள். அனாரின் கவிதைகளை நாம் சமூகமாக கவனப்படுத்தவும் வாசிக்கவும் நம் பிள்ளைகளுக்கு அளிக்கவும் வேண்டும். ஆண் பிள்ளைகள் பெண்களை மதிக்கவும் அவர்களின் உளநிலைகளையும் மனச்சுமைகளையும் புரிந்துகொள்ள அன்னையரும் தந்தையரும் சொல்லிக்கொடுக்க அனாரின் கவிதைகள் தேவாரங்களைப் போன்றவை. கதைகளும் கவிதைகளும் கலைகளுமே நம் குழந்தைகளுக்கு ஒரு சிக்கலை அல்லது ஒரு வாழ்க்கை அறிதலை எளிமையாகவும் ஆழமாகவும் சொல்லிக்கொடுக்க உதவும். அனாரின் கவிதைகளில் வெளிப்படும் பெண் என்ற தன்னிலை இயற்கை என்ற பேரிருப்பின் குரல். பெண்களின் மீதான சமூக ஒடுக்குதல்களிற்கு எதிரான ஆழமான மௌனம் கலந்த எரிமலையின் மூச்சு அவரின் கவிதைகளில் பற்றியெரியக் காத்திருப்பது. மூத்த கவிஞரும் விமர்சகருமான எம். ஏ. நுஃமான் "அனாரின் கவிதைகள் பெரும்பாலும் தன்னுணர்ச்சி வெளிப்பாடுகளாகவே உள்ளன. அவரைப் பொதுவாக ஒரு தன்னுணர்ச்சிக் கவிஞர் என்று சொல்வதில் தவறில்லை. சமூகம் தன்மீது சுமத்தியுள்ள பெண் என்ற வரையறையை மீறும் குரல் அவருடைய கவிதைகளில் ஒலிக்கின்றது. இது கோபம், விரக்தி, பெருமிதம், சோகம், காதல், வேட்கை, தனிமை எனப் பலவகைகளில் வெளிப்படுகின்றது. ஒருவகையில் இதைப் பெண் அல்லது பெண்ணிய அரசியல் எனலாம். அவ்வகையில் பெண் உடலும், பெண் மனமும் இவரது கவிதைகளின் மையம் எனலாம்" என மதிப்பிடுகிறார்.

நம் காலத்தின் முதன்மையான ஆளுமைகளைச் சமூகமாக நாம் கொண்டாடுவதென்பது ஏன் முக்கியமானது என நுண்ணுணர்வு கொண்ட வாசகர்கள் அறிவர். ஒரு ஆளுமையைச் சமூகம் முன்னிலையில் கொணர்ந்து கலைமதிப்புடன் உள்ள அவரின் பங்களிப்பைக் கொண்டாடும் பொழுதுதான் நம் சமூகத்தில் கலை பற்றிய புரிதல் எவ்வளவு ஆழமாகியிருக்கிறது என்பதும் எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பதும் புலனாகும்.

சாதாரணமான ஒருவரிடம் உங்கள் மொழியில் முக்கியமான ஐந்து எழுத்தாளர்களின் அல்லது நாடகக்கலைஞர்களின் அல்லது ஓவியர்களின் அல்லது பண்பாட்டுச் செயற்பாட்டாளர்களின் பெயர்களைக் கேட்டால் அவரால் பட்டியற்படுத்த முடிந்தால் அவர் சராசரியான வாழ்க்கைக்கு வெளியே அறிதலும் நுண்ணுணர்வும் வாய்த்தவர் என மதிப்பிடலாம். ஒரு நாளில் சிறிது நேரத்தையாவது அன்றாட அலைச்சல்களுக்கும் வேலைகளுக்குமிடையே நம்மிடையே துலங்கும் கலைஞர்களையும் அறிவியக்கத்தையும் புரிந்துகொள்ள ஒதுக்கமுடியாதவர் வாழ்வது எவ்வளவு எளிமையான வாழ்க்கை!

கலைகளும் இலக்கியங்களும் ஒருவரது வாழ்க்கையைப் பல்லாயிரம் மடங்கு பெரிதானதாக ஆக்குவதற்காகவே மண்ணில் நிகழ்கின்றன. நாமும் நம் சமூகமும் எதிர்காலப் பிள்ளைகளும் கலைவழியான பார்வைகளையும் அதை ரசிக்கவும் கொண்டாடவும் பழகுவது நம் கலாசார ரசனையை வளர்க்க உதவும். ரசனையில்லாத சமூகம் பண்பாடில்லாத சமூகமாக ஆகுவதை எவராலும் தடுக்கவியலாது.

அனார் இன்று தன் ஐம்பதாவது அகவையைப் பூர்த்தி செய்கிறார். சிறுமியொருத்தி தன் முழு ஆச்சரியம் பொங்கும் விழிகளால் உலகை நோக்கித் தான் களித்தவற்றை - நொந்தவற்றை - அறிந்தவற்றை- கண்டடைந்தவற்றைப் பகிர்வதைப் போல தன் கவிதைகளை எழுதிச்செல்கிறார். அனாரின் கவிதைகளில் சாம்பிராணிக் குச்சியிலிருந்து எழும் வாசனையைப் போல ஆன்மீகமான தேடலும் தியானத்திலமரும் கண்களின் அசைவின்மை போன்ற அனுபவங்களும் உள்ளன. ஒரு சிறுமியையும் துறவியையும் போல அவர் இரண்டு அந்தங்களுக்கிடையில் பரந்திருக்கிறார்.

நாம் கவிதைகளை ரசிக்கப் பழகுவதற்கு அனார் நல்லதொரு தொடக்கம். மலையாள எழுத்தாளர் வைக்கம் முகமது பஷீரைப் பற்றிய கருத்தொன்றை எங்கோ வாசித்த நினைவிலிருந்து மீட்கிறேன். அதாவது, மலையாளத்தில் வாசிக்கத் தொடங்கும் ஒருவர் பஷீரில் தொடங்குவது எளிது. ஏனெனில் அவரது கதைகள் பார்ப்பதற்கு எளிமையானவைபோல தோன்றும். பிறகு அவர் தொடர்ந்து ஏராளமாக வாசித்த பின்னர் அவரது வாசிப்பின் உச்சியிலும் பஷீரை மீண்டும் கண்டடைவார். அவரது வாசிப்பு மேம்பட பஷீர் வேறொரு பரிமாணத்தில் கொள்ள முடியாத ஒளியுடன் மேலெழுவார். அனாரும் அத்தகையதொரு தொடக்கமே. அனாரின் கவிதைகளை ஆரம்ப நிலை வாசகர்கள் கூட அதன் வசீகரமான சொல்லிணைவுகளுக்காகவும் அதன் எளிமையான வரிகளுக்குள்ளாலும் சென்று தொட்டு மேலும் நுழையலாம். பிறகு அவர் தமிழின் தீவிரமான இலக்கியங்களை வாசித்த பின்னரும் முதியவராகியும் மாறாத சிறுபிள்ளைச் சிரிப்புக் கொண்டவரைப் போல அனாரின் கவிதைகளை மொழியின் உச்சியிலும் மாறா அழகுடன் கண்டுகொள்ளலாம்.

தமிழின் பாணர் மரபில் வைத்து அனாரின் தன்மையை அறிவது சுவை கூட்டும் ஒரு அவதானம். பாணர் மரபென்பது தெருக்களின் உலகாலானது. யாழை மீட்டியபடி கூட்டமாக நகரங்களும் கிராமங்க ளும் அலைந்து திரிந்து பாடல்கள் புனைவது அவர்களின் வாழ்க்கை. உலகின் அழகும் நுண்மைகளும் அவர்களின் சொற்களில் திரண்டபாகென ஆகும்.

அனாரின் கவியுலகு அலைந்து வாழும் பாடினிகளின் உளத்தாலானது. விரும்பியபடி வாழ விழையும் ஒரு பாடினியின் யாழென அவரது குரல் தமிழெனும் தொல்மொழியில் மீட்டப்பட்டுக்கொண்டே யிருக்கும். தமிழ் நிலத்தின் பாடினிக்கு அகவை நாள் வாழ்த்துகள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1

ஒரு காட்டாறு
ஒரு பேரருவி
ஓர் ஆழக் கடல்
ஓர் அடை மழை
நீர் நான்

கரும் பாறை மலை
பசும் வயல் வெளி
ஒரு விதை
ஒரு காடு
நிலம் நான்

உடல் காலம்
உள்ளம் காற்று
கண்கள் நெருப்பு

நானே ஆகாயம்
நானே அண்டம்
எனக்கென்ன எல்லைகள்

நான் இயற்கை
நான் பெண்.

## குறிஞ்சியின் தலைவி

## 2

இரண்டு குன்றுகள்
அல்லது தளும்பும் மலைகள் போன்ற
முலைகளுக்கு மேல் உயர்ந்து
அவள் முகம் சூரியனாக தக தகத்தது

இரண்டு விலா எலும்புகளால் படைக்கப்பட்டவள்

பச்சிலை வாடைவீசும் தேகத்தால்
இச்சையெனப் பெருக்கெடுத்தோடும்
மலையாற்றைப் பொன்னாக்குகிறாள்

வேட்டையின் இரத்தவீச்சத்தை உணர்ந்து
மலைச்சரிவின் பருந்துகள் தாளப்பறக்கின்றன

மரக்குற்றிகளால் உயர்த்திக்கட்டப்பட்ட
குடில்களில் படர்ந்த மிளகுப்பற்றை
மணம்கசியும் கறுவாச்செடி
கோப்பிப்பழங்களும் சிவந்திருந்தன

நடுகைக் காலத்தில் தானியவிதைகளை வீசுகிறாள்

சுட்டகிழங்கின் மணத்தோடு
பறைகளுடன் மகுடிகளும் சேர்ந்து ஒலியெழுப்ப
ஆரம்பமாகின்றது சடங்கு

களிவெறி கள் சுகம்
மூட்டிய நெருப்பைச்சுற்றி வழிபாடு தொடங்கிற்று
வளர்ப்பு நாய்களும் பெட்டிப்பாம்புகளும்
காத்துக்கிடக்கின்றன
மாயஆவிகளை விரட்டி
பலிகொடுக்கும் விருந்துக்காக

தீர்ந்த கள்ளுச்சிரட்டைகளைத் தட்டி
விளையாடுகிற சிறுசுகள்
வாட்டிய சோளகக்கதிர்களை கடித்துத்திரிகின்றனர்

பிடிபட்டு வளையில் திமிறும் உடும்பை
கம்பினில் கட்டி தீயிலிட்டு
அதன் வெந்த இறைச்சியை மலைத்தேனில் தொட்டு
கணவன்மார்களுக்கு பரிமாறுகின்றாள் குறத்தி

தும்பி சிறகடிக்கும் கண்கள்விரித்து
இரவுச் சுரங்கத்தின் கறுப்புத்தங்கமென எழும்
தலைவியை மரியாதை செய்கின்றனர்

மலைத்தேன் அருந்தியவாறு இருப்பவளை
புணர்ச்சிக்கு அழைத்தவன் கூறுகின்றான்
'போர் தேவதையின் கண்களாக உறுண்ட
உன் முலைகளால்
குறிஞ்சி மலைகளையே அச்சுறுத்துகின்றாய்'


அவளது குரல் மலைகளில் சிதறி ஒலிக்கின்றது

'பெண் உடல் பூண்ட முழு இயற்கை நான்'

காற்றில் வசிப்பவன்
காலத்தை தோன்றச் செய்பவன்
இன்றென்னைத் தீண்டலாம்!

## 3

# நறுமணங்களால் தூபமிடும் யட்சி



நீயே என் மெழுகு
நீயே என் கூடும் குளவியும்
துளைகளில் பாகு திரண்ட தேனும்

குளக்கரையில் செந்தீவண்ண வாகையின் கிளைக ளுக்குள்ளே சிவப்புத் தோலுடன் பௌர்ணமி பிறந்து வருவதைப் பார்த்திருந்தேன். மந்திரித்த முத்தமொன்றின் வடிவமென இரவின் குளத்தில் பிரதிபலித்தது பௌர்ணமி.

பனியில் ஒளியினை கலந்து உறுஞ்சுகின்ற தரைப் புற்களின் இடுக்குகளிலும், வாகை சருகுகளின் மறைவிலும் மினுங்குகின்ற மின்மினிகளைப் பிடித்து உள்ளங்கைக்குள் வைத்து விளையாடிக் கொண்டிருந்தாள் யட்சி.

குளத்தின் மீது காற்றின் சலனத்தையும், பௌர்ணமியை மூடி விலகும் மேகங்களின் அசைவையும் பார்த்தவாறு "ஒளிக்கொரு வாசனை இருக்கிறது.... மறைவான நினைவின் மணத்தைப் போன்றது..." என்றாள்.

இலைத் திரள்களால் பணிந்த வாகை மரக்கிளையின் அருகே என் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்று நிறுத்தினாள். யட்சியை சூழ்ந்து மிதந்த ஈரப்பதமும் மென் குளிருமான மேகப்பஞ்சுக் குவியலை கைகளால் அள்ளி எடுத்து அண்ணார்ந்து மூடிய என் கண் இமைகளின் மேல் வைத்தாள். பறவையின் இதமான வயிற்றுப் பகுதியில் முகம் புதைந்திருப்பதாக உணர்ந்தேன். காட்சிகள் மறைந்து போயின. நெகிழ்ந்து. உடல் திரவமாக உருகுவதாகத் தோன்றியது.

கவிதையின் செம்புக் கோதுகளுக்குள் அடைபட்ட மௌனத்தின் கத கதப்பு உள் நுழைந்தது. புதிய புதிய வாசனைகள் அங்கு கமழ்ந்தன. மந்திரித்த முடிச்சுகள் அவிழ மஞ்சோணா மணிகள் சிதறிடும் ஒலி. என் புலன்கள் விலகுவதும் இணைவதுமாகச் சுழன்றது. வாசனைக்குள் நீர்த்துளி என தொலைந்து போகிறேன். காலம் மறந்து அந்நறுமண வெளியில் காற்றாகவும் கனவாகவும் உருமாறிக் கொண்டிருந்தேன்.

மேகமுருகி பிடி மழை இமைகளில் பொழிந்தது. கண்களுக்கு மட்டுமேயான ரகசிய மழை. மூடிய இமைகளை துடைத்துப் பார்த்தபொழுது. குளக்கரையில் யட்சி பெரிய மின் மினியாக ஒளிர்ந்து கொண்டிருந்தாள். இரு கைகளாலும் ஈரமணலை வாரிக் குவிப்பதை கண்டு அவளிடம் சென்றேன். அவளின் காதருகே குனிந்து மணலால் புற்றுக் கட்டுகின்றாயா... உன் புதிர்கள் ஒளிந்து கொள்ளும் குகையா.... என்றேன். இது சுவர்க்கத்தின் மணல். மயக்கும் கஸ்தூரியின் வாசனையை பூசிக்கொள் என்றாள். தொலைவுகளை வாசனையால் நெருங்கு. அரூபங்களின் மொழி அது. தேவதைகளின் முள்ளந்தண்டிலிருந்து கசிந்தபடி இருப்பது. நீ காண விரும்பும் இடங்களுக்கு அழைத்துச் செல்லும் நறுமணம்.

உனக்காகவே இந்த மணக்கும் புதையலை செய்கின்றேன் என்றவள், ஒளி மணல் துகள்கள் படிந்த கைகளால் ஈரக்களியை என் கன்னங்களில் தடவியபடி, அதன் ரகசியம் காண கொஞ்சம் பொறுத்திருக்குமாறு வேண்டினாள். தாள முடியாத துயரமும் பரவசமுமாக யட்சியை பின் தொடர்ந்தேன்.

ஒற்றையடிப்பாதையில் நடக்கத் தொடங்கியிருந்தோம். மூங்கில் மரங்கள் அடர்ந்த புதருக்குள் வந்து சேர்ந்த பொழுது நம்பவேமுடியாத மின்மினிப் பூச்சிகளின் நடனம் ஒளிரும் வளைகோடுகளாய் எங்களைச் சூழ்ந்து பறந்தன. சிறு சிறு குட்டைகளின் தண்ணீரில் மாய ஒளிகளின் ஓவியங்கள் மிதப்பதை இருவரும் ரசித்தோம். லயிப்பில் கரைந்து அளவற்ற நேரம் கடந்து போனது. என் உள்ளங்கை பற்றிய யட்சி அப்போது உதடுகள் பொருத்தி முத்தமிட்டாள். நான் அதை மின்மினிகளோடு பறந்துவி டாதவாறு [illegible] தேன்.

உனது கனவுகளில்
ஒன்றிலிருந்து ஒன்றுக்குத் தாவினேன்
பிறகு நீ காணவே முடியாத
கனவாக மாறினேன்

எனக் கூறிச் சிரித்தபடி மெதுவாக தரையிலிருந்து உயர்ந்து ஓர் ஒளிப் பந்தைப்போல் ஆகினாள். வாகை மர உச்சியைக் கடந்த போது பௌர்ணமி நிலா பிளந்து துகள்களாய் சிதறியதைப் பார்த்தேன். அப்பேரொளிர்வு நீக்கமற இரவை வியாபித்தது.

தீராது கமழும் நறுமணங்கள் ஒளிர்வுத் தூவலாய்ப் பொழிந்தன. சட்டென என் உள்ளங்கையிலிருந்த யட்சியின் முத்தம், மின்மினியாகி இரவுக்குள் பறந்தது.

தன்னை ரகசியமாக் கருதாத
ஒரு ரகசியம் இருந்தது
பல்லாயிரம் ரகசியங்களுக்குள் மறைந்து
இருண்ட அறையில் விழும்
துண்டு நிலவு வெளிச்சம்போல
பளிச்சென்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரக் காற்றிலும் கந்தக நெடி!



ஆர்.பிரகாஷ்

50 ஆண்டுகாலசித்திரவதைகள், துன்புறுத்தல்கள், பழிவாங்கல்கள், கடத்தல்கள், காணாமற்போதல்கள் என முழுமையான குருதிச் சகதி வாழ்வில் இருந்து மீண்டிருக்கின்றது சிரியா. சிரியாவில் ஷியா, சன்னி என்னும் இரண்டு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். இவர்களில், ஷியா முஸ்லிம்கள் பெரும்பான்மையானவர்கள். சன்னி முஸ்லிம்கள் சிறுபான்மையானவர்கள். 1970ஆம் ஆண்டுகளில் நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்த சன்னி முஸ்லிமான ஹபீஸ் அசாத், இராணுவ ஆட்சியை அறிவித்து 1971ஆம் ஆண்டு நாட்டைக் கைப்பற்றினார். அன்றுமுதல் சிரியாவில் எஞ்சியதெல்லாம் மரண ஓலம்தான். 'வலியது வாழும்' என்ற இயற்பியல் கொள்கைதான் சிரியா எனும் பாலைவன வனாந்தரத்தில் எஞ்சியிருந்தது. இஸ்ரேலுடனான போர், மத்திய கிழக்குப் போர், ஐ.எஸ்.ஐ.எஸ். படையெடுப்பு, அமெரிக்க ஆக்கிரமிப்பு, ரஷ்யாவின் பலப்பரீட்சை என வல்லாதிக்கத்தின் களமாக சிரியா மாறி நீண்டகாலம்.

ஆனால், உலக நியதி சிரியாவில் சற்று மாறியிருந்தது. அங்கு வதைக்கப்பட்டவர்கள் சிறுபான்மை மக்கள் அல்லர். மாறாக பெரும்பான்மையினர். சிறுபான்மையினரான சன்னிக்களால், பெரும்பான்மையினரான ஷியா முஸ்லிம்கள் நரக வேதனை அடைந்தனர். செத்துசெத்துப் பிழைத்தனர். இந்த நீண்டதும், நெடியதுமான குருதிச் சகதி வாழ்வுக்குத்தான் முடிவுரை எழுதியிருக்கின்றது அல் ஷாம் போராளிக் குழு. சிரியாவின் இராணுவ ஆட்சியாளர் ஹபீஸ் அல் அசாத் காலமாகிவிட, அவருடைய மகன் அல் அசாத் 2000ஆம் ஆண்டுமுதல் ஆட்சிக்கு வந்தார்.

அன்றுமுதல் அல் அசாத்தின் வலது கரம் ரஷ்யா என்றால், இடதுகரம் ஈரான். அசாத் ரஷ்யா ஈரான் என்ற இந்தக் கூட்டணியைப் பிரித்துவிடவோ அல்லது வெற்றிகாணவோ அமெரிக்காவால் முடியவில்லை. தொன் கணக்கில் அமெரிக்கா கொட்டித் தீர்த்த எந்தவொரு ஆயுதத்தாலும் முடியாததை வெறும் 13 நாள்களில் ஒரு கிளர்ச்சிக் குழு சாதித்திருக்கின்றது என்றால் நம்ப முடிகின்றதா? ஆனால், அதுதான் நடந்திருக்கின்றது.

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யாவும், இஸ்ரேலுக்கு எதிரான போரில் ஈரானும் முழுக் கவனம் செலுத்திய நிலையில், சிரியப் பாலைநிலத்தில் கடந்த மூன்றாண்டுகளாக பதுங்கியிருந்த அல் ஷாம் குழுவினர் புலியாகப் பாய்ந்திருக்கின்றனர். வெறும் இரண்டு வாரங்களுக்குள் அவர்கள் கண்ட வெற்றிகளோ மலையளவு. சிரியாவின் இரண்டாவது பெரிய நகராக அலெப்போ, வர்த்தக நகரான இட்லிப், பழைமைகளை உள்ளடக்கிய நகரான பல்மைரா, கிளர்ச்சிப் போராட்டங்களின் கேந்திரம் என்று வர்ணிக்கப்படும் ஹமா மற்றும் ஹபா நகரங்கள் அடுத்தடுத்து ஆயுதக் குழுவிடம் வீழ்ந்ததையடுத்து, தப்பினால் போதும் என ரஷ்யாவுக்கு ஓடியிருக்கின்றார் அல் அசாத்.

ஆட்சியைக் கைப்பற்றிய அல் ஷாம் போராளிகள் இப்போது வைரமாக மின்னுகின்றார்கள். இரண்டு அறிவிப்புகளை அவர்கள் விடுத்திருக்கின்றனர். 'சன்னி முஸ்லிம்களையும், இராணுவத்தினரையும் பழிவாங்க மாட்டோம். அவர்கள் எம் சகோதரர்கள். இது தேசத்துக்கு நாம் தரும் வாக்குறுதி' என்றவாறாக அமைந்திருக்கின்றது முதலாவது அறிவிப்பு. 'இனப் படுகொலையாளர்கள் தண்டிக்கப் படுவார்கள். இந்த மண்ணின் ஒரு அங்குலமேனும் அந்நியர்களுக்குச் சொந்தமில்லை. இது எம் போராளிகளுக்கு நாம் தரும் வாக்குறுதி' என்றவாறாக அமைந்திருக்கின்றது இரண்டாவது அறிவிப்பு. 2000ஆம் ஆண்டு மரணித்த இராணுவ ஆட்சியாளரும், அல் அசாத்தின் தந்தையுமான ஹபீஸ் அசாத்தின் கல்லறை போராளிகளால் சூறையாடப்பட்டுள்ளது. கல்லறைக்குள் இருந்த ஹபீஸின் சவப்பெட்டி ஒரு சிறு துண்டுகூட மீதமில்லாமல் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றது. இனச் சுத்திகரிப்பா ளர்களை போராளிகள் வேரறுக்க ஆரம்பித்ததன் வெளிப்பாடு இது. ஆனால், தலைநகர் டமஸ்கஸில் இருந்து 24 கிலோமீற்றர்கள் தொலைவில் இஸ்ரேலியப் படை நிலைகொண்டுள்ளது. அத்துடன் 40க்கும் மேற்பட்ட ஆயுதக் குழுக்கள் அங்கு இப்போதும் உயிர்ப்புடன் உள்ளன. ஆக, சிரியாவின் சுதந்திரக் காற்றில் இப்போதும் கந்தகநெடிதான் பற்றிப் பிடித்திருக்கின்றது.

# கடற்படையால் கடத்தப்பட்ட மாணவர்கள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

## விசாரணையில் வெளிவந்த திடுக்கிடும் தகவல்கள்

கே.வி.தவராசா

### நீதிமன்றில் வெளிவந்து அதிரவைத்த உண்மைகள்

திருகோணமலையில் கன்சைட் இரகசியத் தடுப்பு முகாமும், முல்லைத்தீவில் கோத்தபாய இராணுவ வதைமுகாமும் இயங்கியதாக சான்றுகள் மூலம் இந்த வழக்கில் அதிர்ச்சியூட்டும் உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட்டன. இந்த இரு வதைமுகாம்களிலும் , கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்ற விடயம் அரச அதிகாரிகளின் சாட்சியத்தின் மூலம் முதன்முதலாக நீதிமன்றில் வெளிக்கொண்டு வரப்பட்டது. லெப். கொமாண்டர் ஜோன் கொத்தலாவெல குமாரவின் சாட்சியத்தின் மூலம், கடத்தப்பட்ட 5 இளைஞர்களும்லெப். கொமாண்டர் ரணசிங்க பெடிகே சுமித் ரணசிங்கவின் கட்டுப்பாட்டிலிருந்த திருகோணமலை இரகசியத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அலுத் கெதர உபுல் பண்டாரவின் சாட்சியத்தில் , ஐந்து இளைஞர்களும் கடத்தப்பட்டு, கைது செய்யப்பட்டு திருகோணமலை இரகசியத் தடுப்பு முகாமுக்கு கொண்டு செல்லப்படுவதற்கு முன்னர் கொழும்பு கோட்டைக்கு அருகாமையில் சைத்திய வீதியில் அமைந்துள்ள "பிட்டுபம்புவ"என்ற இடத்தில் லெப்.கேணல் ஹெட்டிஆராச்சி பிரசாத்தின் கட்டுப்பாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்பதும் தெரியவந்தது.

'ஆட்கொணர்வு மனு விசாரணையில் மிக முக்கியமான சட்டரீதியாக நிரூபிக்கப்பட வேண்டிய விடயங்கள் , மனுதாரர்களது சாட்சியங்கள் மூலமும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளது சாட்சியங்கள் மூலமும் நிரூபிக்கப்பட்டன. காணாமல் போன மாணவர்களை கடற்படையினரே கடத்தியுள்ளதுடன் சித்திரவதை முகாமிலும் தடுத்தும் வைத்திருந்தனர் என்ற விடயங்கள் மனுதாரர்களின் சாட்சியங்களால் மட்டுமின்றி அரச அதிகாரிகளின் சாட்சியங்களின் மூலமும் நிரூபிக்கப்பட்டன. எனவே அரசே இதற்குப் பொறுப்புக்கூற கடப்பட்டுள்ளது என மேன்முறையீட்டு நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க போதிய சான்றுகள் ஆட்கொணர்வு மனுக்களின் விசாரணையில் இந்த நீதிமன்றில் வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது ' என எனது எழுத்துமூல சமர்ப்பணத்தில் பதிவிடப்பட்டது.




### மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

எனது சமர்ப்பணத்தை அடிப்படையாகக் கொண்டு, கடற்படையின் அப்போதைய தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸாநாயக்க, லெப். கொமாண்டர் சம்பத் முனசிங்க, திருகோணமலையில் அமைக்கப்பட்டிருந்த கன்சைட் நிலத்தடி இரகசியவதை முகாம் பொறுப்பதிகாரி சுமித் ரணசிங்க மற்றும் 9 கடற்படை வீரர்கள் என மொத்தமாக 14 சந்தேக நபர்களை எதிரிகளாகப் பெயர் குறிப்பிட்டு சட்டமா அதிபரினால் 667 குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டு இந்த கடத்தல் காணாமல் ஆக்கல் குறித்த வழக்கு விசேட ரயல் அட் பார் மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

### ஜனாதிபதி ஆணைக்குழு

2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8 ஆம் திகதி முதல் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இடம் பெற்றதாகக் கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து தகவல்களை சேகரிப்பதற்காக , ஆட்சி மாற்றத்தின் பின்னர் 2020 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் விசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக ஜனாதிபதியினால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க ஆகிய இருவரும் '11 இளைஞர்கள் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தில், சட்டமா அதிபர் திணைக்களம் எங்கள் இருவரையும் எதிரிகளாக பெயர் குறிப்பிட்டு விசேட ரயல் அட் பார் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருக்கிறது. அரசியல் பழிவாங்கும் நோக்கத்திலேயே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் எங்களின் பெயர்களை குற்றப்பத்திரிகையிலிருந்து நீக்கும்படி சட்டமா அதிபருக்கு உத்தரவிடுங்கள்' என்ற முறைப்பாட்டை பதிவு செய்தனர். இந்த முறைப்பாட்டை யடுத்து முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் வசந்த கரன்னகொட, கடற்படை ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க ஆகிய இருவருடைய முறைப்பாட்டை ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை செய்தது. ஜனாதிபதிக்கு சிபார்சுகளை முன்வைக்கும்வரை வசந்த கரன்னகொட மற்றும் தஸநாயக்க ஆகியோர் தொடர்பிலான வழக்கு விசாரணை மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் முன்னெடுத்துச் செல்வது தொடர்பிலான எந்தவொரு நடவடிக்கையையும் சட்டமா அதிபர் அல்லது அவரது அதிகாரத்தைப் பெற்ற அதிகாரிகள் எவரும் முன்னெடுக்கக்கூடாது என ஜனாதிபதி ஆணைக்குழு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

(வழக்குத் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரத் திணைக்கள டாக்குத்தர்மாருக்கு...



## அவசரமா ஒரு கடுதாசி

ஐயோ! வணக்கம். வாய் தடுமாறிப்போச்சுது, இல்லை சேர்மாருக்கு வணக்கம்.

எல்லாம் இந்தத் தரித்திரம் பிடிச்ச எலிக்காய்ச்சல் எண்ட பயத்தாலை வந்தது. எல்லாத்திலையும் ஒரு தடுமாற்றம். வயசும் அப்பிடித்தான். நாட்டு நடப்பும் அப்பிடித்தான். திடீர் திடீரென ஏதாச்சும் குண்டைத் தூக்கிப்போட்டு எங்களைக் கொல்லுறமாதிரிக்கிடக்கு.
எலிக்காய்ச்சலாலை சனம் சாகுதெண்டு பேப்பரிலை பாத்தாப்பிறகு வயித்தைக் கலக்கி இரண்டு மூண்டு தரம் வாளியும் கையுமா. சொல்லி வேலை இல்லை. சரியாக களைக்கிது. களைக்கிது எண்டு வெளியாலை சொல்லப் பயமாக்கிடக்கு. எங்கை அம்புலன்சுக்கு அறிவிச்சு ஆஸ்பத்திரியிலை கொண்டுபோய்ப் போட்டிடுவாங்களோ எண்டு. காலமை கோயிலடியிலை பீ.எச்.ஐ.யைக் கண்டனான். தலையை மற்றப்பக்கம் திருப்பிக்கொண்டு ஓடிவந்திட்டன்.



இடி முழங்கும், மழை வரும், மின்னல் அடிக்கும் எண்டு முன்கூட்டியே சொல்லுற பிரதீபராஜ் தம்பி மாதிரி எலிக்காய்ச்சல் வரும், கொரோனா வரும் எண்டு சொல்லக்கூடிய ஆக்கள் உங்களிட்டை இல்லையோ? இருந்தும் கொரோனா தந்த பாடம் கொஞ்சம் உங்களிட்டை வேலை செய்யுது. சில விசயங்களை விரைவாச் செய்யிறியள். பீ.எச்.ஐ. மாரும் உடனை அதற்குரிய அலுவலைப் பாக்கினம்.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில அதுக்குரிய ஆயத்தத்தைச் செய்திருக்கினம் எண்டும் சத்தியமூர்த்தி ஐயா சொல்லி இருக்கிறார். ஆனால் வடமராட்சிப் பக்கம்தான் சரியான தாக்கம். அங்கை இருக்கிற பொன்னண்ணை எனக்கு ரெலிபோன் எடுத்தவர். அவர் சொன்னார் இப்ப எலியைப் படத்திலைகூடப் பாக்கப் பயமா இருக்குதாம். சாமான் சக்கட்டைச் சேதப்படுத்திற எலியைப் பிடிக்கப் பூனையை வளர்த்தம். காய்ச்சலைக் கொண்டுவாற எலியைப் பிடிக்க என்னத்தை வளர்க்கிறதெண்டு தெரியாமக்கிடக்குது எண்டு ஒரே புலம்பல்.

யாழ்ப்பாணக் கம்பஸில மெடிசின் படிக்கிற தம்பி ஒருத்தன் பக்கத்தில இருக்கிறான். டே இஞ்சை வாடா எண்டு அவனைக் கூப்பிட்டு எலிக்காய்ச்சல் எண்டால் என்ன? அது எப்பிடி வருகிது? எப்பிடிப் பரவுது? எண்டு கேட்டன். அவன் தன்ரை கான்போனைத் திறந்து கடகட எண்டு வாசிச்சான்.

"லெப்டோஸ்பைரோசிஸ் பக்றீரியாவினால் பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீரில் இருந்து பரவுது. எலி போலை கொறித்துண்ணிகளால பரவுது. நாய்கள், ஆடு, மாடு, பன்றிகள் போன்ற வளர்ப்பு மிருகங்களாலையும் பரவும். மற்றும் வனவிலங்குகளாலையும் பரவக்கூடும். வெள்ள நீர், ஆறுகள், ஓடைகள் போன்றவற்றில் குளிப்பதால் பரவும், காயங்களில் அசுத்தநீர் படுதல், அசுத்த நீர் கண், வாய், மூக்கு என்பவற்றிலுள்ள சீதமென்சவ்வில் படுதல், அசுத்தமான நீரைப் பருகுதல், மாசுபட்ட உணவினை உண்ணல் போன்றவற்றால் பரவும். அத்துடன் பாதிக்கப்பட்ட விலங்குகளின் சிறுநீரால் தொற்றும் " எண்டான்.

நாங்கள்தான் காய்ச்சல் தொடர்பாக கவனமாக இருக்கவேணும். இதைப் பொதுவாக எலிகள்தான் பரப்புமாம் எண்டதாலை எலிக்காய்ச்சல் எண்டு பேர் வைச்சிட்டினம். பொதுவா இதை இரண்டு கால் மிருகங்கள் பரப்பாதாம். சிரிக்காதையுங்கோ நான் இரண்டு கால் மிருகம் எண்டு சொன்னது மிருகங்களை இல்லை. மனுசரைத்தான் சொன்னனான். நாங்களும் குரங்கிலை இருந்துதானே பிறந்தம் எண்டு சொல்லுறவை.

இப்போது மழைகாலம் ,வெள்ளத்தின் காரணமாக வயல்நிலங்களில் வேலை செய்யும் விவசாயிகள், வடிகால்களைச் சுத்தம் செய்பவர்கள், சுரங்கங்களில் வேலை செய்பவர்கள், சதுப்பு நிலங்களில் பணியாற்றுபவர்கள், கால்வாய்கள் மற்றும் அசுத்தமான நீரில் நீச்சலடித்து விளையாடுபவர்கள் அனைவரும் அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரியை அணுகிச் சோதனை செய்யுங்கோ.

திடீரென ஏற்படும் அதிக காய்ச்சல் அல்லது லேசான காய்ச்சல், உடல் குளிர்தல், கண் வெண்மையாதல், இடுப்பு மற்றும் சில பகுதிகளின் தசை மென்மையாதல், கடுமையான தலைவலி மற்றும் சிறுநீர் வெளியேறுவது குறைவாக இருத்தல் போன்ற அறிகுறிகளின் மூலம் எலிக்காய்ச்சல் ஏற்பட்டுள்ளமையை அறிந்துகொள்ள முடியும். இந்தக் காய்ச்சல் கடைசிக்கட்டத்துக்குச் சென்றால், இருதயம் செயற்படாமை மற்றும் பல்வேறு உடற்சிக்கல்கள் ஏற்படும் என்பதால் நோயாளியைக் காப்பாற்றுவது கடினமானது.

மேலே சொன்ன விடயங்களை வடிவா வாசியுங்கோ. மற்றவைக்கும் சொல்லுங்கோ. கவனமா இருங்கோ.

இதைவிட ஒரு கதை இருக்கு. எங்கடை ஊரிலை உள்ள ஒரு பீ.எச்.ஐ. அதிகாரியை எலி ஒண்டு வழிமறிச்சுக் கேட்டுதாம்.
"இந்த நோயை நான் மட்டும் பரப்பேல்லை. ஆடு, மாடு, எருமை எண்டு கனக்க பரப்புதுகள். அப்ப ஏன் என்ரை பேரை மட்டும் அந்த வியாதிக்கு வைச்சு என்ரை இனத்தைக் கொச்சப்படுத்தினியள். நான் இப்ப எலிகள் உரிமை ஆணைக் குழுவுக்குப் போகப்போறன் வழக்குப் போட!!!! "

எப்படி இருக்கு கதை...?

இப்படிக்கு
*அப்பாவி அன்னமுத்து*



# சதுரங்க ராஜா குகேஷ்

○ மயூ

உலக சதுரங்க சம்பியன் போட்டியில் சீனாவின் டிங் லிறெனை வீழ்த்திப் பட்டம் வென்றிருக்கிறார் இந்திய கிராண்ட் மாஸ்டரான டி.குகேஷ். இளம்வயதில் உலக சதுரங்க சம்பியன் பட்டம் வென்ற முதல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்திருக்கின்றார் குகேஷ். ரஷ்யாவின் கேரி காஸ்பரோவ் தனது 22 வயதில் உலக சதுரங்க சம்பியன் பட்டம் வென்றதே இதுவரை சாதனையாக இருந்தது. இப்போது அதனைத் தனது 18 வயதில் முறியடித்துள்ளார் சென்னையைச் சேர்ந்த குகேஷ்.

சிங்கப்பூரில் நடந்து முடிந்த போட்டியில் கடைசிச் சுற்றில் நடப்புச் சம்பியனான சீனாவின் டிங்லிறெனை வீழ்த்திப் பட்டம் வென்று டி.குகேஷ் சாதனை படைத்த அந்தத் தருணம் நெகிழ்ச்சியானது. வெற்றிக்கான நகர்த்தலை முடித்ததும் குகேஷின் கண்களில் கண்ணீர் வடிந்தது. நொடிப்பொழுதில் அவர், சதுரங்கப் பலகையின் முன்பாகத் தலைசாய்ந்தார். பின்னர் போட்டி நடைபெற்ற அறையில் இருந்து வெளியே வந்த அவர், அங்கு காத்திருந்த தனது தந்தையை ஆரத்தழுவிக்கொண்டார்.

"நான் ஆறு, ஏழு வயதிலிருந்தே உலக சம்பியன் பட்டத்தைப் பற்றிக் கனவு கண்டேன். இந்தத் தருணத்துக்காகவே வாழ்ந்தேன். ஒவ்வொரு சதுரங்க வீரரும் இந்தத் தருணத்தை அடையவே விரும்புகிறார்கள். அதில் நான் இருப்பதன் மூலம் எனது கனவு மெய்ப்பட்டுள்ளது. நான் கடவுளுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்" என உற்சாகத்துடன் தெரிவித்திருக்கின்றார் குகேஷ்.

சதுரங்க உலகில் சிகரங்களை அடைவதற்கு அவரது பெற்றோர் செய்த தியாகங்களும் நினைவுகூரப்பட வேண்டும். குகேஷின் தந்தை ரஜினிகாந் காது, மூக்கு, தொண்டை நிபுணர். தாய் பத்மா நுண்ணுயிரியலாளர். 2017-2018ஆம் ஆண்டு காலப்பகுதியில் குகேஷ், கிராண்ட் மாஸ்டர் நார்ம் இறுதிக்கட்டத்தை எட்டும் நிலையில் இருந்ததால் உலகின் பல்வேறு பகுதியில் நடைபெற்ற சதுரங்கப் போட்டிகளில் பங்கேற்க வேண்டியிருந்தது. அதனால் ரஜினிகாந்த் தனது பணியை நிறுத்திவிட்டு மகனுடன் பயணிக்கத் தொடங்கினார். இதனால் வீட்டுச்செலவுகளை அவரது தாய் பத்மா கவனிக்க வேண்டிய நிலை உருவானது. பல நாள்கள் இவர்கள் நேரில் சந்தித்துக்கொள்ள முடியாத நிலைகூட இருந்துள்ளது. இவற்றின் பலனாக குகேஷ் 2019ஆம் ஆண்டு ஜனவரியில் கிராண்ட் மாஸ்டர் ஆனார். அப்போது அவருக்கு பன்னிரண்டு வயது. இந்தியாவின் இளம் கிராண்ட் மாஸ்டர் என்ற பெருமையையும் பெற்றார்.

கடந்த ஏப்ரல் மாதம் கனடாவின் டொராண்டோ நகரில் நடந்த சதுரங்கத் தொடரிலும் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்திருந்தார். உலக சதுரங்க சம்பியன் பட்டம் வென்றுள்ள இரண்டாவது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றிருக்கின்றார். இதற்கு முன்பு தமிழகத்தின் விஸ்வநாதன் ஆனந் ஐந்துமுறை உலக சம்பியன் பட்டம் வென்று சாதனை படைத்திருந்தார். தமிழர்களுக்குப் பெருமைசேர்த்துச் சாதனை படைத்திருக்கும் குகேஷின் சாதனைகள் மேலும் தொடர வாழ்த்துகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம்:

## தெரியவேண்டிய சில குறிப்புகள்

ந.பரமேஸ்வரன்

ஒரு சில வருடங்களுக்கு முன்னர் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் சில பொது நிகழ்வுகளுக்கு விருந்தினராக அழைக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தாங்கள் தேசியக் கொடியை ஏற்றமாட்டோம் என 'சீன்' போட்டிருந்தார்கள்.

ஆனால் உண்மையில் இதயபூர்வமாக தேசியக்கொடியை நிராகரித்தவர் சுந்தரலிங்கம் மட்டும்தான். இலங்கை சுதந்திரமடைந்தபோது தேசியக்கொடியை வடிவமைத்த குழுவில் சுந்தரலிங்கமும் இருந்தார். ஆனால் சுந்தரலிங்கத்தின் யோசனை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இது விடயமாகச் சுந்தரலிங்கம் பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதினார். கடிதத்தின் சாராம்சம் பின்வருமாறு

10

12.12.1947

My Dear Prime Minister

(அன்பின் பிரதமருக்கு)

இலங்கையின் தேசியக்கொடி தொடர்பாக எனக்குத் தொடர்ச்சியாகத் தகவல்களும், கடிதங்களும் கிடைக்கப்பெற்று வருகின்றன. தேசியக்கொடி பறக்கவிடப்பட முன்னர் சில நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளது. நான் ஒரு விடயத்தை முன்வைக்க விரும்புகிறேன். இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் வடிவமைக்கப்பட்டது போல் அனைவருக்கும் சம அந்தஸ்து அளித்து தேசியக்கொடியை வடிவமைத்து உண்மையான தேசப்பற்றை உருவாக்குங்கள்.

*சுந்தரலிங்கம்*




சி. துசிகன்
தரம் - 9E
கொக்குவில் இந்துக் கல்லூரி

சு.டர்வின்
தரம் - 5
யா/உடுவில் மகளீர் கல்லூரி



**மாணவர்களே!**

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்.


அனுப்ப வேண்டிய முகவரி!

உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555



ஜெ.எரிக்
தரம் - 6E
யா/சென்.பற்றிக்ஸ் கல்லூரி.

பா.மகிபன்
தரம் - 8 D
யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி





எஸ்.சாருஜன்
தரம் - 8D
யா/இந்துக் கல்லூரி.



ம. நேருயன்
தரம்-6
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி




கே.பவன்ஜா
தரம் - 4D
யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org